# வெற்றிக்கு வழி

# 10

# தமிழ்

## ஒரு முழுமைக்கையேடு

தயாரிப்பு
வெற்றிக்கு வழி குழுமம்

**பயன்படுத்துக : பயிற்சிப் புத்தகம்**

------ புத்தகங்கள் வாங்க ------
மின்னஞ்சல் : way2s100@gmail.com
தொடர்பு எண் : 9787609090, 9787201010
இணையதளம்: www.bookade.com
*(ஆன்லைன் மூலம் புத்தகங்கள் வாங்க)*

--- பாடம் சார்ந்த சந்தேகங்களுக்கு ----
மின்னஞ்சல் : wtsteam100@gmail.com
தொடர்பு எண் : 7397774508, 9626406060
இணையதளம் : www.waytosuccess.org
*(இலவச பாட உதவிக் குறிப்புகளைப் பதிவிறக்கம் செய்ய)*

**VPP** மூலம் புத்தகங்களை பெற : **9787104040** என்ற எண்ணுக்கு *SMS* செய்யவும்

Way to Success புத்தகங்களை மொத்தமாகப் பெற வேண்டுவோர் இப்புத்தகத்தின் கடைசிப்பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள அலைபேசி எண்களில் உங்கள் **மாவட்ட ஒருங்கிணைப்பாளரை** அழைத்துப் பேசுங்கள் அல்லது **9787609090, 9787201010** எண்களைத் தொடர்புகொள்ளுங்கள்.

**All Rights are reserved to Way to Success Publications**
Any attempt to reproduce any portion in the form of Xerox or any other electronic means will be sued

Way to Success

# பொருளடக்கம்


| இயல் | தலைப்புகள் | ப.எண் | தலைப்புகள் | ப.எண் |
|---|---|---|---|---|
| | பொதுத்தேர்வில் நல்ல மதிப்பெண் பெறுவதற்கான வழிகள் | | | 5-9 |
| | **அமுதஊற்று** | | | |
| 1. | பாடக்குறிப்புகள் | 14 | செ: அன்னை மொழியே | 38 |
| | திறன் அறிவோம் வினா விடை | 18 | உ: தமிழ்ச்சொல் வளம் | 40 |
| | மொழியை ஆள்வோம் | 27 | செ: இரட்டுற மொழிதல் | 44 |
| | மொழியோடு விளையாடு | 32 | வி: உரைநடையின் அணிநலன்கள் | 45 |
| | கற்பவை கற்றபின்... | 34 | இ: எழுத்து, சொல் | 46 |
| | **உயிரின் ஓசை** | | | |
| 2. | பாடக்குறிப்புகள் | 50 | உ: கேட்கிறதா என் குரல்! | 73 |
| | திறன் அறிவோம் வினா விடை | 53 | செ: காற்றே வா! | 76 |
| | மொழியை ஆள்வோம் | 64 | செ: முல்லைப்பாட்டு | 78 |
| | மொழியோடு விளையாடு | 66 | வி: புயலிலே ஒரு தோணி | - |
| | கற்பவை கற்றபின்... | 69 | இ: தொகைநிலைத் தொடர்கள் | 80 |
| | **கூட்டாஞ்சோறு** | | | |
| 3. | பாடக்குறிப்புகள் | 84 | உ: விருந்து போற்றுதும்! | 116 |
| | திறன் அறிவோம் வினா விடை | 87 | செ: காசிக்காண்டம் | 120 |
| | மொழியை ஆள்வோம் | 97 | செ: மலைபடுகடாம் | 121 |
| | மொழியோடு விளையாடு | 101 | வி: கோபல்லபுரத்து மக்கள் | - |
| | கற்பவை கற்றபின்... | 103 | இ: தொகாநிலைத் தொடர்கள் | 123 |
| | வாழ்வியல் இலக்கியம் - திருக்குறள் | | | 108 |
| | **நான்காம் தமிழ்** | | | |
| 4. | பாடக்குறிப்புகள் | 126 | உ: செயற்கை நுண்ணறிவு | 149 |
| | திறன் அறிவோம் வினா விடை | 129 | செ: பெருமாள் திருமொழி | 153 |
| | மொழியை ஆள்வோம் | 138 | செ: பரிபாடல் | 154 |
| | மொழியோடு விளையாடு | 142 | வி: விண்ணைத் தாண்டிய தன்னம்பிக்கை | 156 |
| | கற்பவை கற்றபின்... | 144 | இ: இலக்கணம் - பொது | 157 |
| | **மணற்கேணி** | | | |
| 5. | பாடக்குறிப்புகள் | 160 | உ: மொழிபெயர்ப்புக் கல்வி | 184 |
| | திறன் அறிவோம் வினா விடை | 165 | செ: நீதி வெண்பா | 189 |
| | மொழியை ஆள்வோம் | 173 | செ: திருவிளையாடற் புராணம் | 189 |
| | மொழியோடு விளையாடு | 177 | வி: புதிய நம்பிக்கை | - |
| | கற்பவை கற்றபின்... | 179 | இ: வினா, விடை வகைகள், பொருள்கோள் | 192 |
| | **நிலா முற்றம்** | | | |
| 6. | பாடக்குறிப்புகள் | 196 | உ: பன்முகக் கலைஞர் | 231 |
| | திறன் அறிவோம் வினா விடை | 202 | செ: பூத்தொடுத்தல் | 234 |
| | மொழியை ஆள்வோம் | 209 | செ: முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ் | 235 |
| | மொழியோடு விளையாடு | 214 | செ: கம்பராமாயணம் | 236 |
| | கற்பவை கற்றபின்... | 216 | வி: பாய்ச்சல் | 238 |
| | | | இ: அகப்பொருள் இலக்கணம் | 239 |
| | வாழ்வியல் இலக்கியம் - திருக்குறள் | | | 223 |

| | | | | |
|---|---|---|---|---|
| **7.** | **விதைநெல்** | | | |
| | பாடக்குறிப்புகள் | 242 | உ: சிற்றகல் ஒளி (தன்வரலாறு) | 268 |
| | திறன் அறிவோம் வினா விடை | 247 | செ: ஏர் புதிதா? | 273 |
| | மொழியை ஆள்வோம் | 257 | செ: மெய்க்கீர்த்தி | 274 |
| | மொழியோடு விளையாடு | 259 | செ: சிலப்பதிகாரம் | 276 |
| | கற்பவை கற்றபின்... | 261 | வி: மங்கையராய்ப் பிறப்பதற்கே... | - |
| | | | இ: புறப்பொருள் இலக்கணம் | 279 |
| **8.** | **பெருவழி** | | | |
| | பாடக்குறிப்புகள் | 282 | உ: சங்க இலக்கியத்தில் அறம் | 310 |
| | திறன் அறிவோம் வினா விடை | 285 | செ: ஞானம் | 313 |
| | மொழியை ஆள்வோம் | 297 | செ: காலக்கணிதம் | 314 |
| | மொழியோடு விளையாடு | 301 | வி: இராமானுசர் (நாடகம்) | 317 |
| | கற்பவை கற்றபின்... | 303 | இ: பா – வகை, அலகிடுதல் | 318 |
| **9.** | **அன்பின் மொழி** | | | |
| | பாடக்குறிப்புகள் | 320 | உ: ஜெயகாந்தம் (நினைவு இதழ்) | 344 |
| | திறன் அறிவோம் வினா விடை | 324 | செ: சித்தாளு | 347 |
| | மொழியை ஆள்வோம் | 333 | செ: தேம்பாவணி | 348 |
| | மொழியோடு விளையாடு | 337 | வி: ஒருவன் இருக்கிறான் | 351 |
| | கற்பவை கற்றபின்... | 339 | இ: அணி | 352 |

## வினாத்தாள் வடிவமைப்பின் தொகுப்புகள்

| | | | |
|---|---|---|---|
| **ஒரு மதிப்பெண் வினாக்கள்** | | | |
| பகுதி - I | பிரிவு : 1 | மொழிப்பயிற்சி வினாக்கள் (1 – 11) | 354 |
| | | 1. பாடல் பொருளுணர் திறன் (12 – 15)<br>2. நூல்கள் & ஆசிரியர் பெயர்கள், சொல்லும் பொருளும், இலக்கணக்குறிப்பு | 355-358<br>359-364 |
| | பிரிவு : 1 | 1. விடைகளுக்கேற்ற வினா அமைத்தல்<br>2. திருக்குறள் - மனப்பாடப்பகுதி | 365-366<br>366 |
| **இரண்டு மதிப்பெண் வினாக்கள்** | | | |
| பகுதி - II | பிரிவு : 2 | பகுபத உறுப்பிலக்கணம் | 367-370 |
| | | **மொழிப்பயிற்சி வினாக்கள்** | 371-376 |
| | | 1. கலைச்சொல் தருக........................................... | 371 |
| | | 2. கூட்டப்பெயர்கள், வினைமரபு(செயல் மரபு)..................... | 372 |
| | | 3. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக........... | 372 |
| | | 4. நிறுத்தற்குறியீடு............................................... | 374 |
| | | 5. ஒருமை பன்மைப் பிழைகள்.............................. | 375 |
| | | 6. தமிழெண்கள்................................................ | 376 |
| **மூன்று மதிப்பெண் வினாக்கள்** | | | |
| பகுதி - III | பிரிவு : 1 | உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக. | 377-383 |
| | பிரிவு : 2 | மனப்பாடச் செய்யுள் | 384 |
| | பிரிவு : 3 | அலகிடுதல் | 385 |
| | | அணி | 392 |
| **ஐந்து மதிப்பெண் வினாக்கள்** | | | |
| பகுதி - IV | 39 | கடிதம் | 398 |
| | 40 | படம் உணர்த்தும் கருத்து -ஐந்து தொடர்கள், கவிதை எழுதுதல். | 408 |
| | 41 | படிவத்தினை நிரப்புதல் | 409 |
| **எட்டு மதிப்பெண் வினாக்கள்** | | | |
| பகுதி - V | 45 | பொதுக்கட்டுரை | 413-428 |
| **அரசுப் பொதுத்தேர்வு மார்ச்–2024 வினாத்தாள்** | | | 429-431 |


Way to Success

## 75 – 90 மதிப்பெண்கள் பெற நீங்கள் படிக்க வேண்டியவை

### ➢ கட்டாயம் படிக்க வேண்டிய பகுதிகள்:

- ✶ **படிவம் (4)** ✶ **கட்டுரை (புத்தகம்–3 + கூடுதல்-9)** ✶ **கடிதம் (புத்தகம்–6 + கூடுதல்-8)**
- ✶ **மனப்பாட பகுதி :** ◆ இயல் 3, 6ல் உள்ள 10 மனப்பாட திருக்குறள்களைப் படிக்கவும்.
  - ◆ அனைத்து மனப்பாட செய்யுள்கள் (குறைந்தது முதல் 5 இயல்களைப் படிக்கவும்.)
- ✶ **திறன் அறிவோம் :** பலவுள் தெரிக (46), குறுவினா (52), சிறுவினா (41), நெடுவினா (28)
- ✶ **முந்தைய தேர்வுகளில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்கள் :** ◆ பலவுள் தெரிக ◆ குறுவினா (செ,உ,இ) ◆ சிறுவினா (செ, உ, இ) ◆ நெடுவினா (செ, உ, வி) ஆகியவற்றைப் பயிற்சி செய்யவும்.
- ✶ **இலக்கண பகுதி:** அணி மற்றும் அலகிட்டு வாய்பாடு கட்டாயம் படிக்க வேண்டும்.
- ✶ **கற்பவை கற்றபின் :** இப்பகுதியில் இலக்கணத்தில் உள்ள அனைத்து வினாக்கள் மற்றும் மற்றப்பகுதியில் தேர்வுநோக்கில் உள்ள வினாக்களை மட்டும் நன்கு படிக்கவும்.
- ✶ **கலைச்சொல் அறிக (47) மற்றும் பகுபத உறுப்பிலக்கணம் (11), சொல்லும் பொருளும் (78)**
- ✶ **பொதுவாக விடையளிக்கக் கூடிய பகுதிகள்:**
  - ➔ விடைக்கேற்ற வினா ➔ உரைப்பத்தி (இ-2,4) ➔ காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.
- ✶ **வி.எண். 42.** எந்தக் கேள்வியை தேர்ந்தெடுக்கிறீர்களோ அதற்கு தகுந்தாற்போல் பயிற்சி செய்யவும்.
  - **அ) பொது வினா -** இவ்வினாவில் நிற்க அதற்குத் தக வினாவை சற்று மாற்றி கேட்கலாம்.
  - **ஆ) மொழிபெயர்ப்பு -** அனைத்து இயல்களிலும் உள்ள மொழிபெயர்ப்பைப் படித்துக் கொள்ளவும்.
- ✶ **மொழியை ஆள்வோம் மற்றும் மொழியோடு விளையாடு**

| இயல் | தேர்வில் கேட்க வாய்ப்புள்ள மொழிப்பயிற்சி பகுதிகள் {1,2 மதிப்பெண் வினாக்கள்} |
|---|---|
| 1 | ◆ **கூட்டப்பெயர்கள்** ◆ **சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.**<br>◆ **தமிழ் எண்கள்** ◆ **சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக.**<br>◆ ஒரே பொருளுடைய சொற்களை தொடர் அமைக்க. ◆ வினாத்தொடர் அமைக்க.<br>◆ வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றி தொடரை இணைக்க. |
| 2 | ◆ **தொகைகளைக் கண்டு தொடர அமைக்க.** ◆ **சொல்லைக் கண்டுபிடித்துப் புதிரை விடுவிக்க.**<br>◆ தொடர்களைப் படித்து தலைப்புகளை எழுதுக.<br>◆ செய்திகளைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக. |
| 3 | ◆ **பழமொழியை நிறைவு செய்க.** ◆ **இரு சொற்களை ஒரே தொடரில் அமைக்க.**<br>◆ விடுபட்ட எழுத்துகளை இணைத்து நூலைக் கண்டுபிடிக்க. |
| 4 | ◆ **குறிப்பைப் பயன்படுத்தி விடை தருக.** ◆ **பத்தியைப் படித்து பதில் தருக.**<br>◆ **இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**<br>◆ வல்லினமெய் இட்டும் நீக்கியும் எழுதுக. ◆ தொடரைப் படித்து விடையைக் கண்டறிக. |
| 5 | ◆ **தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.**<br>◆ தொடர்களை முழுமை செய்க. ◆ புதிர்ப்பாடலுக்கான விடையைக் கண்டுபிடிக்க.<br>◆ வேர்ச்சொல்லை எழுவாய், பெயரெச்ச, வினையெச்ச, விளி, வேற்றுமைத் தொடராக மாற்றுக. |
| 6 | ◆ **தொடர்களை அடைப்புக்குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.**<br>◆ **பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொற்களாக மாற்றுக.**<br>◆ விடுபட்ட வண்ணங்களை நிரப்புக. ◆ சொற்பெட்டியில் கண்டு எழுதுக. |
| 7 | ◆ **ஊர் பெயர் - மரூஉ எழுதுக.** ◆ **தொகைச் சொற்களைப் பிரித்து, தமிழ் எண்ணுரு தருக.**<br>◆ கவிதையை உரையாடலாக மாற்றுக. ◆ முரண் தொடரைக் கொண்டு தொடர் அமைக்க. |
| 8 | ◆ **மரபுத்தொடருக்கான பொருளறிந்து தொடர் அமைக்க.**<br>◆ சொற்களைப் பிரித்துப் பொருள் தருக. ◆ பேச்சு வழக்கை எழுத்து வழக்காக மாற்றுக. |
| 9 | ◆ **நாள்காட்டியை தமிழெண்களால் நிரப்புக.** ◆ **நிறுத்தக் குறியிடுக.**<br>◆ தமிழ்ப்புலவர்களின் பெயர்களைக் கண்டறிக. ◆ விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக்குக.<br>◆ உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக. |

### ➢ தேர்வில் கேட்க மிக குறைவாக வாய்ப்புள்ள பகுதிகள்:

- ◆ படித்துச் சுவைக்க.(அனைத்து இயல்) ◆ வசனநடையில் எழுதுக. (இ-2)
- ◆ நயவுரை / கவிதையைத் தொடர்க.(இ-3,6) ◆ நாட்டுப்புற பாடலுக்கேற்ற சூழலை எழுதுக.(இ-6)
- ◆ கதையாக்குக.(இ-3) ◆ குறுக்கெழுத்துப் போட்டி.(இ-9) ◆ அகராதியைக் கண்டு பொருள் எழுதுக.
- ◆ எண்ணுப்பெயர்கள் உள்ள திருக்குறளை எழுதுக.(இ-8) ◆ பத்தியை சுருக்கி எழுதுக.(இ-3)

Way to success

## சதம் அடிப்போருக்கான குறிப்புகள்

### படிக்க வேண்டிய பகுதிகள்

- அனைத்து புத்தக வினாக்களையும் முந்தைய தேர்வுகளில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்களையும் நன்கு படித்து கொள்ள வேண்டும். அது தவிர புத்தகத்தின் உள்ளிருந்தும் வினாக்கள் கேட்கப்படலாம்.
- மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு ஆகிய பகுதிகளில் மேற்சொன்ன அனைத்தையும் (தேர்வில் அடிக்கடி (ம) அரிதாக கேட்கக்கூடிய, இதுவரை கேட்காத பகுதிகள் என அனைத்தும்) படித்துக் கொள்ளவும்.
- கற்பவை கற்றபின் வினாக்கள் 5, 8 மதிப்பெண் வினாக்களில் கேட்கப்படுகின்றன. எனவே, தேர்வில் கேட்க வாய்ப்புள்ள கற்பவை கற்றபின் (செ,உ,,து,இ) வினாக்களைப் படித்துக் கொள்ளவும்.
- அலகிட்டு வாய்பாட்டிற்கு, வாய்பாட்டை மட்டும் மனப்பாடம் செய்யாமல் இயல் 3 மற்றும் 6 ல் உள்ள அனைத்து திருக்குறளையும் வாய்பாடு எழுதி பயிற்சி செய்தால் இவ்வினாவில் முழு மதிப்பெண் பெறலாம்.
- **அணி:** ◆ தேர்வில் கேட்கப்பட்ட 5 அணிகள் (உவமை, தன்மை, தீவக, நிரல் நிறை, தற்குறிப்பேற்ற)
  - ◆ கூடுதலாக இயல் 3 & 6-ல் உள்ள அணிகளையும் படிக்க பக்க எண் 392-ஐ பார்க்கவும். (எடுத்துக்காட்டு உவமை, சொற்பொருள்பின்வருநிலை, சொல் பின்வருநிலை, வஞ்சப்புகழ்ச்சி)
  - ◆ அணிக்கான விளக்கம், எடுத்துக்காட்டு, அணிப்பொருத்தம் ஆகியவற்றை கண்டிப்பாக எழுதவும்.
- நயம் பாராட்டுக (1,3,4,8), நன்றியுரை (இ-9), வாழ்த்துரை (இ-9), மதிப்புரை (இ-5) போன்றவை சிறிது மாற்றம் செய்து தேர்வில் கேட்கப்படலாம். **எ.கா.** பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை / கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக. இக்கேள்வி கட்டுரைப் பகுதியில் கேட்கப்பட்டுள்ளது.
- சிந்தனையைத் தூண்டும் விதமாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கும் தயாராக இருக்க வேண்டும்.

### அதிக கவனம் செலுத்த வேண்டிய பகுதிகள்

- 2,3,5,8 மதிப்பெண் வினாக்களைப் பொறுத்தவரை பாடத்தினுள் இருந்து புதிய வினா கேட்டாலும் அவற்றை எழுதாமல் choice-ல் தவிர்த்து விடலாம். ஆனால் **ஒரு மதிப்பெண்** வினாக்களில் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தாக வேண்டும். இதில் மதிப்பெண் இழக்க வாய்ப்புள்ளது. எனவே, புத்தக வினாக்களைத் தவிர கீழ்க்கண்டவற்றில் கவனம் செலுத்தவும்.

**வி.எண் (12-15):** ◆இலக்கணக் குறிப்பு ◆சொல்லும் பொருளும் ◆நூல் & ஆசிரியர் பெயர் ◆எதுகை, மோனை

**வி.எண் (1-11) :** கூடுதலாக ◆ மேற்கோள் காட்டப்பட்டுள்ள பாடல் வரிகள் & நூல்கள் ◆ பெட்டிச் செய்திகள் ◆ தடித்த & வண்ண எழுத்துகளில் உள்ள முக்கிய குறிப்புகள் ஆகியவற்றைப் படிக்கவும்.

| புத்தகத்தின் உள்ளிருந்து இதுவரை கேட்ட&கேட்க வாய்ப்புள்ள ஒரு மதிப்பெண் வினாக்கள் | |
|---|---|
| பெட்டிச் செய்திகள் | உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு **[MAR-24]**<br>அ) சிங்கப்பூர் ***ஆ) மலேசியா*** இ) இந்தியா ஈ) இலங்கை **(உ - தமிழ்ச்சொல் வளம்)** |
| தெரியுமா? | ‘சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் என்றன் **(செ- அன்னை மொழியே)**<br>சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்’ – என்று கூறியவர் **[AUG-22]**<br>அ) திரு.வி.க ***ஆ) க. சச்சிதானந்தன்*** இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள் |
| யார் இவர்? | இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் ______. **[PTA – 2]**<br>அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார் **(உ - தமிழ்ச்சொல் வளம்)**<br>இ) தேவநேயப் பாவாணர் ***ஈ) இரா. இளங்குமரனார்*** |
| நூல் வெளி | ‘மொழிஞாயிறு’ என்றழைக்கப்படுபவர் யார்? **(உ - தமிழ்ச்சொல் வளம்) [AUG – 22]**<br>அ) தமிழழகனார் ஆ) கம்பர் ***இ) தேவநேயப் பாவாணர்*** ஈ) வைரமுத்து |
| தெரிந்துதெளிவோம் | ‘வால்காவிலிருந்து கங்கை வரை’ என்னும் நூலின் ஆசிரியர் **(உ – மொழிபெயர்ப்புக் கல்வி)**<br>அ) கண. முத்தையா ஆ) வைரமுத்து<br>***இ) ராகுல் சாங்கிருத்யாயன்*** ஈ) யூமா வாசுகி |
| முன்தோன்றிய மூத்தகுடி | “பல் பழப் பலவின் பயங்கெழு கொல்லி” என்ற வரிகள் இடம்பெற்றுள்ள நூல் __.<br>அ) புறநானூறு ஆ) நற்றிணை ***இ) அகநானூறு*** ஈ) கலித்தொகை **(இயல் - 2)** |
| எத்திசையும் புகழ் மணக்க… | ஆஸ்டிரியா நாட்டின் தலைநகர் _______. **(உ – சிற்றகல் ஒளி)**<br>அ) லண்டன் ஆ) சிட்னி இ) நியூயார்க் ***ஈ) வியன்னா*** |
| படித்துச் சுவைக்க | மரம் தேடிய களைப்பு **(இயல் - 8)**<br>மின்கம்பியில்<br>இளைப்பாறும் குருவி… என்ற வரிகளை கூறியவர்?<br>அ) மகாகவி ஆ) புதுமைபித்தன் ***இ) நாணற்காடன்*** ஈ) சுந்தரகவிராசர் |

(**குறிப்பு –** பாடம் நடத்தும்போதே இத்தகைய ஒரு மதிப்பெண் வினாக்களை குறித்துவைத்து படித்துக்கொள்ளவும். தேர்வு நேரத்தில் இவற்றைப் படித்து குழப்பிக் கொள்ளாமல் மற்ற வினாக்களில் கவனம் செலுத்துவது நல்லது.)

## அனைத்து மாணவர்களும் கவனிக்கவேண்டிய பொதுவான குறிப்புகள்

- வினாத்தாளை ஒரு முறைக்கு இருமுறை நன்கு படித்து பார்த்து அதன் பிறகு விடையளிக்க வேண்டும்.
- தமிழைப் பொறுத்தவரை முடிந்தளவு பிழையில்லாமல், அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதவும்.
- ஒற்றுப் பிழையை தவிர்ப்பதற்கு வல்லெழுத்து மிகும், மிகா இடங்களைப் (ப.எண்: 372) பார்க்கவும்.
- ஒரு மதிப்பெண் வினாவிற்கான விடையை எழுதும் போது விடையுடன் விடைக்குறியீட்டையும் (அ,ஆ,இ,ஈ) எழுதவும்.
- அனைத்துக் கேள்விகளுக்கும் வினா எண் கட்டாயம் குறிப்பிடவேண்டும். படிவம் விடைத்தாளிலேயே தைக்கப்பட்டிருப்பதால் வினா எண் குறிப்பிட மறந்துவிடுவீர்கள். விடை சரியாகவே இருந்தாலும், வினா எண் குறிப்பிடாமல் விடை எழுதியிருந்தால், மதிப்பெண் வழங்கப்படாது. அதனால் படிவம், கடிதம் போன்றவற்றிற்கு கூடுதல் கவனம் செலுத்தி வினா எண்ணைக் குறிப்பிடவும்.
- கட்டாய வினாவிற்குப் பதிலாக வேறு வினாவை எழுதக்கூடாது.
- செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினாவை மற்ற மாணவர்கள் கண்டிப்பாக எழுதக்கூடாது. இதற்கு மதிப்பெண்கள் வழங்கப்படாது.
- **வி.எண்.21 & 34 - கட்டாய வினா (மனப்பாடப் பகுதி):**
  - ✶ மனப்பாடப் பாடல்களைப் பாடநூலில் உள்ளது போல நிறுத்தற்குறிகள் இட்டு எழுத வேண்டும்.
- **வி.எண்.17 - விடைக்கேற்ற வினா:** யார், எப்படி, என்ன, எது, எங்கே, ஏன், யாருக்கு, எப்பொழுது போன்ற வினா சொற்களை சேர்த்து இறுதியில் வினாக்குறியுடன் (?) விடை அமைக்கவும். **எ.கா.** 'பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தார்' என்ற வினாவிற்கு பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தாரா? என எழுதாமல் **'பரஞ்சோதி முனிவர் எங்கு பிறந்தார்?'** என எழுத வேண்டும்.
- **வி.எண்.30 - உரைப்பத்தியைப் படித்து விடை தருக:** வினாவில் இடம்பெற்றுள்ள வார்த்தை உரைப்பத்தியில் எங்கே உள்ளது எனப் பார்த்து வினாவிற்கு பொருத்தமான விடையை எழுத முயற்சிக்கவும். தலைப்பு எழுதுமாறு கேட்டால் பத்தியில் அடிக்கடி வரும் வார்த்தையை தலைப்பாக எழுதவும்.
- **வி.எண்.37 - அலகிட்டு வாய்பாடு:**
  - ✶ அலகிடுதலில் கண்டிப்பாக சீர் பிரித்து காட்ட வேண்டும்.
  - ✶ பாடப்புத்தக திருக்குறளில் மூவசை சீர் காய் சீராக மட்டுமே வரும். கனி சீர் வராது.
  - ✶ ஏழாம் (கடைசி) சீரின் வாய்பாட்டை இறுதியில் எடுத்து எழுத வேண்டும்.
- **வி.எண்.40 - காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. / படம் உணர்த்தும் கருத்துகளை 5 தொடர்களில் எழுதுக.**
  - ✶ வினாவை நன்கு வாசித்து **கவிதையா?** அல்லது **தொடரா?** என கவனித்துப் பதிலளிக்கவும்.
  - ✶ காட்சிக்குத் தொடர்பான கருத்துகளை மட்டும் தெளிவாக எழுதவும்.
- **வி.எண்.42 - மொழிப்பயிற்சி வினா (நிற்க அதற்கு தக / மொழிபெயர்ப்பு வினா):**
  - ✶ 9 இயல்களிலும் உள்ள மொழிபெயர்ப்பு & நிற்க அதற்கு தக வினாக்களை நன்கு படித்து கொள்ளவும்.
  - ✶ நிற்க அதற்கு தக பகுதியில் உள்ள வினாக்களை மாற்றம் செய்தும் கேள்விகள் கேட்கப்படும்.
  - ✶ அதனால் வினாவை முழுவதுமாக நன்கு வாசித்து அதன்பின் பதிலளிக்கவும்.
  - ✶ மொழிபெயர்ப்பு வினாவிற்கு முழுமையாக விடை தெரிந்திருந்தால் மட்டும் எழுதவும்.
  - ✶ இல்லையெனில் நிற்க அதற்கு தக வினாவை (சுயமாக எழுதமுடியும் என்பதால்) எழுதலாம்.
- **வி.எண்.43, 44, 45 (நெடுவினா, கட்டுரை):** குறிப்புச்சட்டகம், முன்னுரை, உட்தலைப்பு, முடிவுரை, அவசியம் எழுதவும்.
- **வி.எண்.39 - கடிதம்:** பக்க எண் 398-ஐ பார்க்கவும். **வி.எண்.41-படிவம்:** பக்க எண் 409-ஐ பார்க்கவும்.

### வினாக்களை முழுமையாக படித்து விடையளிக்கவும்!

- **'எவரேனும் ஓர் அறிஞர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.'** - இது போன்ற கேள்விகளில் அந்த அறிஞரே சொல்வது போன்று எழுதவும்.
- கட்டுரை வினாவை பொறுத்த வரை அதன் உட்பொருளை புரிந்துகொண்டு விடையளிக்க வேண்டும்.

**எ.கா:** *"குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும்" எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் அமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலா வந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். இக்கருத்தைக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.* - எனக் கேட்கப்பட்டால் அக்குறிப்புகளில் உள்ள சிற்றிலக்கியங்களைப் (பிள்ளைத்தமிழ், சதகம், பரணி...) படைத்த புலவர்களைப் பற்றியும் அவர்களால் தமிழ் எவ்வாறு வளர்க்கப்பட்டது என்பது பற்றியும் மட்டும்தான் எழுத வேண்டும். வேறு புலவர்களைப் பற்றி எழுதக் கூடாது. **(அல்லது)**

**'சான்றோர் வளர்த்த தமிழ்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுக.** - இத்தலைப்பு பொதுவாக கொடுக்கப்பட்டுள்ளதால் தமிழ் வளர்த்த புலவர்கள் யாரைப் பற்றியும், அவர்களால் தமிழுக்கு ஏற்பட்ட வளர்ச்சியை பற்றியும் எழுதலாம்.

**ஆகவே குறிப்புகளை நன்கு படித்துப் புரிந்து கொண்டு விடைகளை எழுதுவது அவசியமானதாகும்.**

### தெரிந்தால் மட்டும் விடையளிக்கவும்.(அலகிடுதல் நன்கு தெரிந்தால் எழுதவும்.இல்லையெனில் தவிர்க்கவும்.)

- முழுமையான விடை தெரிந்தால் மட்டும் விடையளிக்கவும். இல்லையேல் choice-இல் தவிர்த்துவிடவும். குறிப்பாக, ◆ அலகிடுதல் ◆ கலைச்சொல் தருக ◆ பகுபத உறுப்பிலக்கணம் ◆ மொழிபெயர்ப்பு போன்றவை.

## ஒரு மதிப்பெண் வினாக்களில்தான் மதிப்பெண்கள் இழக்க நேரிடும்.

➢ பாடநூலில் உள்ள ஒரு மதிப்பெண் வினாக்களைச் சிறு மாற்றம் செய்தும் தேர்வில் கேட்கப்படலாம்.

**எ.கா:** "மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்"- **மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும்** குறிப்பவை முறையே ______. இதன் விடை : ***திருப்பதியும், திருத்தணியும்.***
ஆனால் இவ்வினாவில் சிறு மாற்றம் செய்து, **வேலவன் குன்றமும் மாலவன் குன்றமும்** குறிப்பவை முறையே என்று கேட்கப்பட்டால் அதற்கான விடையானது : ***திருத்தணியும் திருப்பதியும்*** என எழுத வேண்டும்.

**ஆகவே மதிப்பெண்களைத் தவறவிடக் கூடிய இது போன்ற சிறு சிறு வேறுபாட்டில் கவனம் செலுத்தவும்.**

➢ ஒரே மாதிரியான தொடக்கம் கொண்ட மாற்றியமைக்கப்பட்ட வினாக்கள், தெரிவுகளின்(options) வரிசை மாற்றியமைக்கப்பட்ட வினாக்கள் கேட்கப்படலாம். எனவே options-ஐ புத்தகத்தில் உள்ளது போலவே மனப்பாடம் செய்யாமல் வினாவிற்கான விடைகளை புரிந்து தெளிவாக படித்துக்கொள்ளவும்.

**எ.கா:** "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை"- என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ் ஆ) அறிவியல் ***இ) கல்வி*** ஈ) நீதிவெண்பா
ஆனால் மேற்கண்ட அடிகளைக் கொடுத்து இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் என்ன? என்று கேட்கப்பட்டால் option ***(ஈ) நீதிவெண்பா*** என்றுதான் எழுத வேண்டும். ***(இ) கல்வி*** என்று எழுதக் கூடாது.

**எனவே கேள்வியின் தொடக்கத்தை மட்டும் பார்த்து நன்கு தெரிந்த கேள்வியென்று உடனே பதில் எழுதக் கூடாது. அதனை முழுமையாக வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**

➢ எத்தனை வகைப்படும்? என்ற கேள்வியில் சிறு குழப்பம் ஏற்பட்டு தவறாக மாற்றி எழுத வாய்ப்புண்டு. **எ.கா:** வினா, விடை, பொருள்கோள் போன்றவை எத்தனை வகைப்படும் என்பதை தெளிவாக படிக்கவும்.

## மெல்லக் கற்கும் மாணவர்கள் தேர்ச்சி பெறுவதற்கு படிக்கவேண்டியவை

| வி.எண் | படிக்க வேண்டியவை | மதிப்பெண்கள் |
|---|---|---|
| | **ஒரு மதிப்பெண் வினாக்கள்** | |
| 1 – 11<br>பலவுள் தெரிக | பாடப்புத்தகத்திலுள்ள 46 வினாக்களைப் படித்தாலே 7 வினாக்களுக்கு நிச்சயமாக விடையளிக்கலாம். | Total: 11<br>Min: 7 |
| | **மாணவர்கள் எளிதாக மதிப்பெண் பெறும் பகுதிகள்** | |
| 41<br>படிவம் | 4 படிவங்களையும் எவ்வாறு பூர்த்தி செய்ய வேண்டும் என்று பயிற்சி செய்யவும்.<br>◆ நூலக உறுப்பினர் ◆ மேல்நிலை சேர்க்கை ◆ தன்விவரப் பட்டியல்<br>◆ விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் சேர்க்கை<br>❖ வினாவில் கொடுக்கப்பட்ட விவரங்களைப் படிவத்தில் நிரப்பினாலே குறைந்தபட்ச மதிப்பெண்களைப்பெறலாம். (எ.கா:பெயர்,தந்தை பெயர்,முகவரி,..) | Total: 5<br>Max: 5<br>Min: 4 |
| 39<br>கடிதம் | ❖ அலுவலக கடிதம் தேர்வு செய்வது நல்லது.<br>❖ அனுப்புநர், பெறுநர், பொருள், மதிப்பிற்குரிய ஐயா, நன்றி, இப்படிக்கு, உறைமேல் முகவரி போன்றவற்றை கடிதம் அமைப்பில் வினாவிலுள்ள செய்திகளை எழுதினாலே 2-3 மதிப்பெண் பெறலாம்.<br>❖ பாடப்புத்தகத்திலுள்ள 6 கடிதங்களை பயிற்சித்தால் கூடுதல் மதிப்பெண் பெறலாம். | Total: 5<br>Max: 4<br>Min: 3 |
| 40<br>படம் | ❖ படம் தொடர்பான 5 வரிகள் எழுதினாலே குறைந்தபட்ச மதிப்பெண் பெறலாம்.<br>❖ நயத்துடன் எழுதினால் கூடுதல் மதிப்பெண் பெறலாம். | Total: 5<br>Max: 4<br>Min: 3 |
| 42 அ)<br>பொது வினா | இது நிற்க அதற்கு தக பகுதியிலிருந்து கேட்கப்படும். இதற்கு பொதுவாகவும் விடையளிக்கலாம்.எ.கா. 1. இன்சொற்கள் பேசுவதால் ஏற்படும் நன்மைகள்<br>2. புயலின்போது மேற்கொள்ளும் நடவடிக்கைகள் | Total: 5<br>Max: 4<br>Min: 3 |
| 30<br>உரைப்பத்தி | ❖ வினாவுக்கான விடை அந்த பத்தியிலேயே இருக்கும். இதனை கண்டறிந்து சரியாக எழுதினாலே முழு மதிப்பெண்களையும் பெறலாம்.<br>❖ வினாவிலுள்ள முக்கிய வார்த்தைகள் பத்தியில் எங்குள்ளது என கண்டறிந்து அந்த வாக்கியத்தை எழுதினாலே குறைந்தபட்ச மதிப்பெண் பெறலாம். | Total: 3<br>Min: 2 |
| 17<br>விடைகேற்ற வினா | ❖ எது, யார், எப்பொழுது, எப்படி, எந்த, யாவை போன்ற வினா சொற்களை சேர்த்து, விடைக்கு பொருத்தமான வினாக்களை அமைக்க வேண்டும்.<br>❖ இறுதியில் வினாக்குறி (?) இட வேண்டும். | Total: 2<br>Min: 1 |
| 45<br>பொதுக்கட்டுரை | ❖ முன்னுரை, முடிவுரை கொடுத்து வினாவிலுள்ள முக்கிய குறிப்புகளைத் தலைப்புகளாக எழுதி, அது தொடர்பான செய்திகளை எழுதினாலே குறைந்தபட்ச மதிப்பெண் பெறலாம். | Total: 8<br>Max: 6<br>Min: 4 |

## குறைவாக படித்து அதிக மதிப்பெண் பெறும் வழிகள்

### மனப்பாடப் பகுதி

| | | |
|---|---|---|
| 34 கட்டாய வினா | 1 முதல் 5 இயல் மனப்பாடச் செய்யுள்களைப் பயிற்சி செய்தாலே இவ்வினாவிற்கு விடையளிக்க முடியும். | 2-3 |
| 21 கட்டாய வினா | 10 மனப்பாடத் திருக்குறளைப் படித்தாலே விடை எழுதலாம். குறள் சார்ந்த வினாக்கள் கேட்டாலும் அது தொடர்பான குறள் எழுதினாலே குறைந்தபட்ச மதிப்பெண் பெறலாம். | 1-2 |

### துணைப்பாடம், உரைநடை, செய்யுள் பகுதிகள்

#### 8 மதிப்பெண் வினாக்கள்

| | | |
|---|---|---|
| 44 - துணைப்பாடம் | முதல் 5 இயல் துணைப்பாட நெடுவினாக்களைப் படித்தாலே போதுமானது. | 4-6 |
| 43 - உரைநடை | முதல் 5 இயல் உரைநடை நெடுவினாக்களைப் படித்தாலே போதுமானது. | 4-6 |

#### 5 மதிப்பெண் வினாக்கள்

| | | |
|---|---|---|
| 38 - செய்யுள் | முதல் ஐந்து இயல்களின் 5 செய்யுள் நெடுவினாக்களைப் படித்தாலே போதுமானது. | 3-4 |

***குறிப்பு:*** *செய்யுள், உரைநடை, துணைப்பாடம் வினாக்களில் பொதுவான தலைப்போ (அ) படிக்காத வினாவோ கேட்கப்பட்டால் அவ்வினா (அ) அப்பாடம் தொடர்பான செய்திகளை எழுதினாலே குறைந்தபட்ச மதிப்பெண் பெறலாம்.*

### இலக்கணம் (அணி, அலகிடுதல்)

| | | |
|---|---|---|
| 36-அணி | ❖ புத்தகத்திலுள்ள 5 அணிகளை நன்கு பயிற்சித்தாலே முழு மதிப்பெண் பெறலாம். ◆ தற்குறிப்பேற்றம் ◆ தன்மை ◆ உவமை ◆ நிரல் நிரை ◆ தீவகம் | 2-3 |
| 37-அலகிடுதல் | ❖ இதனை தெளிவாகப் படிக்க கையேட்டில் பக்க எண் பார்க்கவும். | 2-3 |

*இதுவரை உள்ள **75** மதிப்பெண்களுக்கான கேள்விகளை எழுதினாலே **குறைந்தபட்சம் 45** மதிப்பெண்களிலிருந்து **அதிகபட்சம் 64** மதிப்பெண்கள் வரை பெறலாம். மேற்கண்ட பகுதிகளை சரியாக படிக்கவில்லையென்றால் மதிப்பெண்கள் குறையும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!*

#### செய்யுள் & உரைநடை வினாக்களில் நீங்கள் எழுத வேண்டியவை

| | |
|---|---|
| 29, 31, 32, 33 **(3 மதிப்பெண்)** | (1 உரைபத்தி வினா தவிர்த்து) 2 உரைநடை வினாக்களில் 1 வினா மட்டுமே எழுத வேண்டும். (1 மனப்பாட செய்யுள் தவிர்த்து) 2 செய்யுள் வினாக்களில் 1 வினா மட்டுமே எழுத வேண்டும். |
| 16 – 20 **(2 மதிப்பெண்)** | (1 விடைகேற்ற வினா, 1 திருக்குறள் - கட்டாய வினா தவிர்த்து) 2 உரைநடை, 2 செய்யுள் வினாக்களிலிருந்து ஏதேனும் 2 வினாக்கள் மட்டும் எழுத வேண்டும். |

**இதில் மதிப்பெண் பெறுவதற்கான எளிய வழி:**

- ❖ நீங்கள் படித்த நெடுவினா தொடர்பாக இருந்தால் அவற்றை எழுதவும்.
- ❖ சுயமாக எழுதும் வகையில் இருக்கும் வினாக்களை தேர்ந்தெடுத்து எழுத முயற்சிக்கவும்.
- ❖ கூடுதலாக குறுவினா, சிறுவினாக்களை படித்தால் அவற்றை கொண்டு விடை எழுத முயற்சிக்கலாம்.இவற்றை புரிந்து எழுதினாலே கூடுதல் மதிப்பெண் பெறலாம்.

Max: 10
Min : 3-5

### 22 - 28 இலக்கணம் & மொழிப்பயிற்சி பகுதி

| | |
|---|---|
| 1 - பகுபத உறுப்பிலக்கணம், 1 - கலைச்சொல், 5 - இலக்கணம் & மொழிப்பயிற்சி பகுதிகளில் கேட்கப்படும். 5-க்கு விடையளிக்க வேண்டும். | Max: 10 Min: 3-5 |

☝ சில முக்கிய மொழிப்பயிற்சி பகுதிகள் மற்றும் இலக்கண வினாக்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இதை படித்தாலே குறைந்தபட்ச மதிப்பெண்களை பெறலாம்.

### முக்கிய மொழிப்பயிற்சி பகுதிகள்

- ☯ **கலைச்சொல்:** அனைத்து பாடத்திலும் உள்ள 47 கலைச்சொற்களை பயிற்சி செய்தாலே விடையளிக்க முடியும். முழுமையாக படிக்க முடியுமென்றால் மட்டுமே இவ்வினாவை படிக்கவும். இல்லையெனில் தவிர்க்கவும்.
- ☯ **பகுபத உறுப்பிலக்கணம்:** விடை தெரியவில்லையெனில் கொடுத்துள்ள வார்த்தையை பிரித்து முதல் சொல்லை பகுதி, கடைசி சொல்லை விகுதி, இடைப்பட்ட சொற்களை சந்தி, இடைநிலை, சாரியை என எழுதவும்.
  (**சில முக்கிய வினாக்கள்:** *பொறித்த, உரைத்த, வருக, மலைந்து, பொழிந்த, கிளர்ந்த, அமர்ந்தான், தணிந்தது, பதிந்து, மயங்கிய, அறியேன், ஒலித்து)*
- ☯ **கூட்டப்பெயர்** *(இயல்-1)* ☯ **மரூஉ** *(இயல்-7)* ☯ **தமிழ் எண்கள்:** *(இயல் - 1, 7, 9)* ☯ **பழமொழி** *(இயல்-3)*
- ☯ **இரு சொற்களை ஒரே தொடரில் அமைக்க:** *(இயல் - 3, 4)* ☯ **எழுவாயைச் செழுமை செய்க** *(இயல் - 5)*
- ☯ **மரபுத்தொடர் / உவமையைப் பயன்படுத்தி தொடர் அமைக்க:** *(இயல்-8,9)*
- ☯ **தொகைகளை கண்டு தொடர் அமைக்க:** *(இயல்-2)* ☯ **பேச்சு வழக்கினை எழுத்து வழக்காக மாற்றுக**:*(இயல்-8)*
- ☯ **பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச்சொல்லாக்குக**:*(இயல்-6)* ☯ **தொகைநிலைத் தொடர்களை வகைப்படுத்துக***(இயல்-2)*
- ☯ **நிறுத்தற்குறியீடு மற்றும் வல்லின மெய் இடுதல்:** நன்கு விடை தெரிந்தால் மட்டுமே இவ்வினாவினை எழுதவும் அல்லது தவிர்க்கவும்.*(இயல் - 7,9,4)*

# இயல் - 1

# அமுதஊற்று

- பொதுக்குறிப்புகள்
- திறன் அறிவோம்
- மொழியை ஆள்வோம்!
- மொழியோடு விளையாடு
- கற்பவை கற்றபின்......
- கூடுதல் வினாக்கள்

1) செய்யுள் : அன்னை மொழியே
- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

2) உரைநடை : தமிழ்ச்சொல் வளம்
- தேவநேயப் பாவாணர்

3) செய்யுள் : இரட்டுற மொழிதல்
- சந்தக்கவிமணி தமிழழகனார்

4) துணைப்பாடம் : உரைநடையின் அணிநலன்கள்
- எழில்முதல்வன்

5) இலக்கணம் : எழுத்து, சொல்

# பொதுக்குறிப்புகள்




## செய்யுள் : அ) அன்னை மொழியே

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

| பாடல் | பாடல் விளக்கம் |
|---|---|
| **அழகார்ந்த செந்தமிழே!** | |
| ❋அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே! | அன்னை மொழியே! அழகு நிறைந்த செந்தமிழே! |
| முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே! | பழமைக்கும் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியே! |
| கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில் | கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் |
| மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே! | நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசே! |
| தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே! | பாண்டிய மன்னனின் மகளே! திருக்குறளின் பெரும் பெருமைக்குரியவளே! |
| இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே! | இனிமையான பத்துப்பாட்டே! எட்டுத்தொகையே! பதினெண்கீழ்க்கணக்கே! |
| மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே! | நிலைத்த சிலப்பதிகாரமே! அழகான மணிமேகலையே! |
| முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! ❋ | பொங்கியெழும் நினைவுகளால் தலைபணிந்து வாழ்த்துகின்றோம்! |
| **செப்பரிய நின்பெருமை** | |
| செந்தமிழே! உள்ளுயிரே செப்பரிய நின்பெருமை | செழுமை மிக்க தமிழே! எமக்குயிரே! சொல்லுதற்கரிய நின் பெருமைதனை |
| எந்தமிழ்நா எவ்வாறு எடுத்தே உரைவிரிக்கும்? | என்னுடைய தமிழ் நாக்கு எவ்வாறுதான் விரித்துரைக்கும்? |
| முந்தைத் தனிப்புகழும் முகிழ்த்த இலக்கியமும் | பழம்பெருமையும் தனக்கெனத் தனிச்சிறப்பும் இலக்கிய வளமும் கொண்ட தமிழே! |
| விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும் | உன் நீண்ட நிலைத்த தன்மையும் வேற்று மொழியார் உன்னைப் பற்றி உரைத்த புகழுரைகளும் |
| உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச் | உள்ளத்தில் நெருப்பு மூள, எனக்குள் பற்றுணர்வை எழுப்புகின்றன. |
| செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த | செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்து |
| அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி | வண்டானது பாடுவது போன்று நாங்களும் உன்னைப்பாடி |
| முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே! | உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் தனித்தமிழே! |

**ஆசிரியர் குறிப்பு**



- ➔ **ஆசிரியர் பெயர்** : பெருஞ்சித்திரனார்
- ➔ **இயற்பெயர்** : துரை. மாணிக்கம்
- ➔ **சிறப்புப்பெயர்** : பாவலரேறு
- ➔ **இயற்றிய நூல்கள்** : ◆ உலகியல் நூறு ◆ பாவியக்கொத்து ◆ நூறாசிரியம் ◆ மகபுகுவஞ்சி ◆ பள்ளிப்பறவைகள் ◆ கனிச்சாறு ◆ எண்சுவை எண்பது ◆ திருக்குறள் மெய்ப்பொருளுரை
- ➔ **நடத்திய இதழ்கள்** : தென்மொழி, தமிழ்ச்சிட்டு
- ➔ **சிறப்பு** : இவரது நூல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

**நூல் குறிப்பு**

- ➔ **இடம் பெற்றுள்ள தொகுப்பு** : பெருஞ்சித்திரனாரின் கனிச்சாறு (தொகுதி1)
- ➔ **எடுத்தாளப்பட்டுள்ள பகுதி** : தமிழ்த்தாய் வாழ்த்து, முந்துற்றோம் யாண்டும்

# செய்யுள் : ஆ) இரட்டுற மொழிதல்

**- சந்தக்கவிமணி தமிழழகனார்**

| ஆழிக்கு இணை |
|---|
| **முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்** |
| **மெத்த வணிகலமும் மேவலால் - நித்தம்** |
| **அணைகிடந்தே சங்கத் தவர்காக்க ஆழிக்கு** |
| **இணைகிடந்த தேதமிழ் ஈண்டு** - தனிப்பாடல் திரட்டு |

**பாடல் விளக்கம்**

| தமிழ் | கடல் |
|---|---|
| தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய் வளர்ந்தது; | கடல், முத்தினையும் அமிழ்தினையும் தருகிறது. |
| முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| ஐம்பெரும் காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது. |
| சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது. | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது. |

**ஆசிரியர் குறிப்பு**



- ➔ **ஆசிரியர் பெயர்** : சந்தக்கவிமணி தமிழழகனார்
- ➔ **இயற்பெயர்** : சண்முகசுந்தரம்
- ➔ **இயற்றிய நூல்கள்** : 12 சிற்றிலக்கிய நூல்கள்
- ➔ **சிறப்பு** : இலக்கணப் புலமையும் இளம் வயதில் செய்யுள் இயற்றும் ஆற்றலும் பெற்றவர்.

**நூல் குறிப்பு**

- ➔ புலவர் பலரின் பாடல்களின் தொகுப்பான **'தனிப்பாடல் திரட்டு'** (ஐந்தாம் பகுதி - கழகப் பதிப்பு) என்னும் நூலிலிருந்து **'இரட்டுற மொழிதல்'** என்ற தலைப்பிலான இந்தப்பாடல் எடுத்தாளப்பட்டுள்ளது.

# உரைநடை : தமிழ்ச்சொல் வளம்

**- தேவநேயப் பாவாணர்**

**பாடச்சுருக்கம்**

கால வெள்ளத்தில் கரைந்து போன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலை நிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை என்று எண்ணி வியக்கத்தக்கவாறு அனைத்து வளமும் கொண்டுள்ளது நம் செந்தமிழ் மொழி. பயிர்வகைச் சொற்களில் உள்ள தமிழ் சொல் வளத்தைப் பற்றியும் தமிழ்நாட்டின் பொருள் வளத்தைப் பற்றியும் இந்த **'தமிழ்ச்சொல் வளம்'** என்ற உரைநடைப்பகுதி விவரிக்கிறது.

**ஆசிரியர் குறிப்பு**



- ➔ **இயற்பெயர்** : தேவநேயப் பாவாணர்
- ➔ **சிறப்புப்பெயர்** : மொழிஞாயிறு
- ➔ **சிறப்பு** : தமிழ் சொல்லாராய்ச்சியில் உச்சம் தொட்டவர்.
- ➔ **பணி** :
  - ◆ செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநர்
  - ◆ உலகத் தமிழ்க் கழகத்தின் தலைவர்

**பாடப்பகுதி**

தேவநேயப் பாவாணரின் **'சொல்லாய்வுக் கட்டுரைகள்'** நூலில் உள்ள **'தமிழ்சொல் வளம்'** எனும் கட்டுரையின் சுருக்கம் நமக்கு பாடப்பகுதியாக கொடுக்கப்பட்டுள்ளது.

# விரிவானம் : உரைநடையின் அணிநலன்கள்

**- எழில்முதல்வன்**

| | |
|---|---|
| **கதைமாந்தர்கள்** | ❖ சங்கப் புலவர் ❖ இணையத் தமிழன் |
| **பாடப்பகுதி** | எழில் முதல்வன் எழுதிய **'புதிய உரைநடை'** எனும் நூலிலுள்ள **'உரைநடையின் அணிநலன்கள்'** என்னும் கட்டுரையின் சுருக்கம், இங்கு பாடப்பகுதியாக தரப்பட்டுள்ளது. |
| **பாடச்சுருக்கம்** | கால இயந்திரத்தின் உதவியால் சங்கப் புலவரும், இணையத் தமிழனும் சந்தித்து, அக்கால தமிழ் இலக்கியம் மற்றும் இக்கால தமிழ் இலக்கியம் குறித்து உரையாடினால் எப்படியிருக்கும்? என்ற கற்பனையின் வெளிப்பாடே நம் **'உரைநடையின் அணிநலன்கள்'** என்ற பாடப்பகுதியாகும். |
| **ஆசிரியர் குறிப்பு**  | ➔ **ஆசிரியர் பெயர்** : எழில்முதல்வன்<br>➔ **இயற்பெயர்** : மா. இராமலிங்கம்<br>➔ **பயின்ற கல்லூரி** : சென்னை மாநிலக் கல்லூரி<br>➔ **பணி** : ◆ பேராசிரியர் - மாநிலக் கல்லூரி<br>◆ தமிழ்த்துறைத் தலைவர் - பாரதிதாசன் பல்கலைக்கழகம், குடந்தை அரசு ஆடவர் கல்லூரி<br>➔ **இயற்றிய நூல்கள்** : ◆ இனிக்கும் நினைவுகள் ◆ எங்கெங்கு காணினும் ◆ யாதுமாகி நின்றாய் ◆ புதிய உரைநடை<br>➔ **சிறப்பு:** ◆ மரபுக் கவிதை, புதுக்கவிதை படைப்பதில் வல்லவர்.<br>◆ சாகித்திய அகாதெமி **(புதிய உரைநடை)** விருதுபெற்றவர். |

# இலக்கணம் : எழுத்து, சொல்

| | |
|---|---|
| **எழுத்து** | 🕮 **முதலெழுத்து** (உயிர் 12 + மெய் 18) = 30<br>🕮 **சார்பெழுத்து (10):**<br>1. உயிர்மெய் 2. ஆய்தம் 3. உயிரளபெடை<br>4. ஒற்றளபெடை 5. குற்றியலிகரம் 6. குற்றியலுகரம்<br>7. ஐகாரக்குறுக்கம் 8. ஔகாரக்குறுக்கம் 9. மகரக்குறுக்கம்<br>10. ஆய்தக்குறுக்கம் |
| **சொல்** | ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். **எ.கா :** வா, பூ, மாடு, புல், கன்று |
| **மூவகை மொழி** | |
| **தனிமொழி** | ஒரு சொல் தனித்து நின்று பொருள் தந்தால் தனிமொழியாகும்.<br>**எ.கா :** கண், படி – பகாப்பதம்; கண்ணன், படித்தான்- பகுபதம் |
| **தொடர்மொழி** | இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும். **எ.கா :** கண்ணன் வந்தான், மலர் வீட்டுக்குச் சென்றாள். |
| **பொதுமொழி** | ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும், தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.<br>**எ.கா :** 'எட்டு' – என்பது எட்டு என்ற எண்ணையும், எள்+து – எள்ளை உண் என்ற பொருளையும் தருகிறது. |

| **அளபெடை** (நீண்டு ஒலித்தல்)<br>பேசும்போது உணர்வுக்கும் இனிய ஓசைக்கும் அளபெடை பயன்படுகிறது. | |
|---|---|
| **உயிரளபெடை** | செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவுசெய்ய, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும். அதைக்குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இது மூன்று வகைப்படும்.<br>1) **செய்யுளிசை அளபெடை** : செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தல் ஆகும். இதை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர். **எ.கா :** **ஓஒ**தல் வேண்டும்.<br>2) **இன்னிசை அளபெடை** : செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும். **எ.கா :** கெடுப்ப**தூ**உம்<br>3) **சொல்லிசை அளபெடை:** செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.<br>**எ.கா :** உரன**சை**இ உள்ளம் துணையாகச் சென்றார் |
| **ஒற்றளபெடை** | செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவுசெய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் ஆகிய பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை. **எ.கா :** **எ.ஃஃ**கிலங்கிய கையராய்.. |
| **தொழிற்பெயர்**<br>ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ, வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் ஆகும். **எ.கா :** நடத்தல், ஈதல் | |
| **விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்** | வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும். **எ.கா :** நடத்**தல்,** வாழ்க்**கை** |
| **எதிர்மறைத் தொழிற்பெயர்** | தொழிற்பெயர் எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர்.<br>**எ.கா :** நட**வாமை,** கொல்**லாமை** |
| **முதனிலைத் தொழிற்பெயர்** | விகுதி பெறாமல் வினைப் பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயர். **எ.கா :** தட்டு, உரை, அடி |
| **முதனிலை திரிந்த தொழிற்பெயர்** | விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயர். **எ.கா :** **கேடு** (கெடுதல்) – கெடு, **சூடு** (சுடுதல்) - சுடு |
| **வினையாலணையும் பெயர்** | ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும், வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும். **எ.கா :** **வந்தவர்** அவர்தான், **பொறுத்தார்** பூமியாள்வார். |

| **விகுதி பெற்ற தொழிற்பெயர்கள்** | | |
|---|---|---|
| **வினையடி** | **விகுதி** | **தொழிற்பெயர்** |
| நட | தல் | நடத்தல் |
| வாழ் | கை | வாழ்க்கை |
| ஆள் | அல் | ஆளல் |

| **தொழிற்பெயர்** | **முதனிலை** | **முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்** |
|---|---|---|
| கெடுதல் | கெடு | **கேடு** |
| சுடுதல் | சுடு | **சூடு** |

# திறன் அறிவோம் வினா விடை



## பலவுள் தெரிக

1. 'மெத்த வணிகலன்' என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது – **(செ- இரட்டுற மொழிதல்) [JUN – 2023]**
   **அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்** ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும் ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்
2. ***<u>'காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்'</u>*** நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது– **(உ-தமிழ்ச்சொல் வளம்) [APR-23, AUG-22, SEP-21, MDL-19]**
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
   இ) தாளும் ஓலையும் **ஈ) சருகும் சண்டும்**
3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்– **(செ- அன்னை மொழியே) [JUN – 23, SEP – 21]**
   அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா **இ) எம்+தமிழ்+நா** ஈ) எந்தம்+தமிழ்+நா
4. 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது'– தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே– **(இ-எழுத்து,சொல்) [MAR-24, PTA-3]**
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய
   இ) கேட்டவர்; பாடிய **ஈ) பாடல்; கேட்டவர்**
5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை **(உ - தமிழ்ச்சொல் வளம்)**
   அ) குலை வகை **ஆ) மணி வகை** இ) கொழுந்து வகை ஈ) இலை வகை **[PTA-4, MAY-22]**

### தேர்வில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்கள் மற்றும் QR CODE வினாக்கள் :

Online Test

6. உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு **[MAR-24]** **(உ - தமிழ்ச்சொல் வளம்)**
   அ) சிங்கப்பூர் **ஆ) மலேசியா** இ) இந்தியா ஈ) இலங்கை
7. 'சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் என்றன் சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்'–என்று கூறியவர் **[AUG – 22]** **(செ- அன்னை மொழியே)**
   அ) திரு.வி.க **ஆ) க. சச்சிதானந்தன்**
   இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்
8. 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுபவர் யார்? **(உ - தமிழ்ச்சொல் வளம்)[AUG – 22]**
   அ) தமிழழகனார் ஆ) கம்பர் **இ) தேவநேயப் பாவாணர்** ஈ) வைரமுத்து
9. மலர்விழி பாடினாள் - இத்தொடர் …… **(இ-எழுத்து,சொல்)[MAY – 22]**
   அ) பொதுமொழி ஆ) தனிமொழி **இ) தொடர்மொழி** ஈ) அடுக்குத்தொடர்
10. பொருத்துக. **[QR]** **(இ-எழுத்து,சொல்) [SEP – 2020]**

| | |
|---|---|
| 1. வினைமுற்று | - i) கெடு |
| 2. தொழிற்பெயர் | - ii) கட்டு |
| 3. முதனிலைத் தொழிற்பெயர் | - iii) எய்தல் |
| 4. வினையடி | - iv) வந்தான் |

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-iii | 3-ii | 4-i |
| ஆ) | 1-iii | 2-i | 3-iv | 4-ii |
| **இ)** | **1-iv** | **2-iiii** | **3-i** | **4-ii** |
| ஈ) | 1-i | 2-iii | 3-ii | 4-iv |

11. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல் **(உ - தமிழ்ச்சொல் வளம்)**

அ) எள்கசடு **ஆ) பிண்ணாக்கு** இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி **[PTA – 1, 2]**

12. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் **(உ - தமிழ்ச்சொல் வளம்)[PTA – 2]**

அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார்

இ) தேவநேயப் பாவாணர் ***ஈ) இரா. இளங்குமரனார்***

13. <u>சோலையில்</u> பூத்த மணமலர்களில் <u>சுரும்புகள்</u> மொய்த்துப் பண்பாடி மதுவுண்டன. இத்தொடரில் அடிக்கோடிட்ட சொற்களுக்குப் பொருத்தமான வேறுசொற்களை எழுதுக. **[PTA -1]**

அ) பூங்காவில், அரும்புகள், நீர் ஆ) பூஞ்சோலையில், எறும்புகள், தேன்

**இ) பூஞ்சோலையில், வண்டுகள், தேன்** ஈ) கரும்பில், எறும்புகள், கள்

14. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது **(இ-எழுத்து,சொல்)[PTA - 1]**

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்

இ) முதனிலைத் தொழிற்பெயர் ***ஈ) வினையாலணையும் பெயர்***

15. இலையுதிர்காலம் …… சருகாயின! **(இ-எழுத்து,சொல்)[QR] [PTA - 4]**
மழைக்காலம் …… தழைத்தன!
சருகுகளோ செழுமையான உரங்களாயின!

- புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.

அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின ஆ) காடெல்லாம், வளர்ந்தன

***இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்*** ஈ) மலையெல்லாம், முளைந்தன

16. வெ . . .குவார்க்கில்லை, உரனசைஇ- இச்சொற்களில் உள்ள அளபெடைகள் **(இ-எழுத்து,சொல்) [QR] [PTA -6]**

***அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை*** ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

17. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, **[QR] [PTA – 2, SEP - 2020]**
நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி - இத்தொடர்கள் உணர்த்தும் மரங்களின் பெயர்களையும் தமிழெண்களையும் குறிப்பிடுக.

அ) ஆலமரம், வேப்பமரம் - ரு, க ***ஆ) ஆலமரம், வேலமரம் - ச, உ***

இ) அரசமரம், வேங்கைமரம் - *க, உ* ஈ) வேப்பமரம், ஆலமரம் - *ச, சு*

18. 'இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே!' - இவ்வடிகளில் பத்தும் எட்டும் குறிப்பவை **(செ-அன்னை மொழியே)**

***அ) சங்க இலக்கியங்கள்*** ஆ) அற இலக்கியங்கள் **[QR]**

இ) காப்பியங்கள் ஈ) சிற்றிலக்கியங்கள்

19. பொருத்துக. **(உ - தமிழ்ச்சொல் வளம்) [QR]**

| | | | தெரிவுகள் |
|---|---|---|---|
| 1. மா | - i) நாற்று | | அ) 1-iv 2-i 3-ii 4-iii |
| 2. தென்னை | - ii) கன்று | | ஆ) 1-i 2-ii, 3-iii 4-iv |
| 3. பனை | - iii) பிள்ளை | | இ) 1-iii 2-ii 3-i 4-iv |
| 4. கத்திரி | - iv) வடலி | | **ஈ) 1-ii 2-iii 3-iv 4-i** |

20. "நித்தம் அணைகிடந்தே **(செ- இரட்டுற மொழிதல்) [QR]**
சங்கத் தவர் காக்க" - இவ்வடிகளை ஒத்திருக்கும் கடலின் செயல்

அ) கடலில் தோன்றும் சங்குகளைக் கரைகாணாதவாறு அணைத்தல்.

***ஆ) நீரலையைத் தடுத்து நிறுத்திச் சங்கினைக் காத்தல்.***

இ) மூவகைச் சங்கினைத்தரும் கடலைக் காத்தல்.

ஈ) கடல் தன் அலைகளால் சங்கினை வெளியே தள்ளுதல்.



Way to success

21. பொருத்துக. **(இ-எழுத்து,சொல்) [QR]**

| | | தெரிவுகள் |
|---|---|---|
| 1. சொல்லிசை அளபெடை | - i) இயற்றியவர் | அ) 1-iv 2-i 3-ii 4-iii |
| 2. பொதுமொழி | - ii) ஓஒதல் வேண்டும் | ஆ) 1-i 2-iv 3-iii 4-ii |
| 3. வினையாலணையும் பெயர் | - iii) உரனசைஇ | **இ) 1-iii 2-iv 3-i 4-ii** |
| 4. செய்யுளிசை அளபெடை | - iv) வேங்கை | ஈ) 1-iv 2-iii 3-i 4-ii |

22. சொல் என்பது **(இ-எழுத்து,சொல்) [QR]**

அ) ஓர் எழுத்து தனித்து உச்சரிக்கப்படுவது

ஆ) பல எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது

இ) இரண்டு எழுத்துகள் சேர்ந்து பொருள் தருவது

***ஈ) ஓர் எழுத்து தனித்தோ பல எழுத்துகளோடு சேர்ந்தோ பொருளைத் தருவது.***

23. பொதுமொழி என்பது **(இ-எழுத்து,சொல்) [QR]**

அ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளில் வருவது

ஆ) குறிப்பிட்ட ஒரு இனத்தவருக்கான பொதுவான மொழி

***இ) ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து பொதுவாய் அமைவது.***

ஈ) மக்களால் பொதுவாகப் பேசப்படும் மொழி.

24. சார்பெழுத்துகள் என்பவை **(இ-எழுத்து,சொல்) [QR]**

அ) ஒன்றிற்கும் மேற்பட்ட எழுத்துகளைச் சார்ந்து வருபவை.

ஆ) மூவகை அளபெடைகளை மட்டும் சார்ந்து வருபவை.

***இ) முதலெழுத்துகளைச் சார்ந்து வருபவை*** ஈ) ஒரு மொழியைச் சார்ந்து வருபவை.

25. **பொருத்துக.** **[QR]**

| | | தெரிவுகள் |
|---|---|---|
| 1. பாவலரேறு | - i) தமிழழகனார் | ***அ) 1-iv 2-iii 3-ii 4-i*** |
| 2. பன்மொழிப்புலவர் | - ii) தேவநேயப் பாவாணர் | ஆ) 1-ii 2-iii 3-ii 4-iv |
| 3. மொழிஞாயிறு | - iii) க.அப்பாத்துரையார் | இ) 1-ii 2-i 3-iv 4-iii |
| 4. சந்தக்கவிமணி | - iv) பெருஞ்சித்திரனார் | ஈ) 1-i 2-iv 3-iii 4-ii |

## குறுவினா

**1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.** **[MAR-24]**
**(இ-எழுத்து, சொல்) [PTA - 2]**

* வேங்கை - மரம் - தனிமொழி
* வேங்கை - வேம் + கை - வேகின்ற கை - தொடர்மொழி
* இவ்வாறு தனிமொழிக்கும் தொடர் மொழிக்கும் பொதுவாய் வருவதால் வேங்கை பொதுமொழி ஆகும்.

**2. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!** **[MDL - 19, MAY – 2022]**
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.** **(செ- அன்னை மொழியே)**

➔ எஞ்சியுள்ள காப்பியங்கள் மூன்று :

* சீவக சிந்தாமணி
* வளையாபதி
* குண்டலகேசி

**குறிப்பு :** கொடுக்கப்பட்டுள்ள பாடலில் இடம்பெற்றுள்ள இரண்டு காப்பியங்கள்

* சிலப்பதிகாரம்
* மணிமேகலை

Way to success

3. *ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.*
*ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.*
*ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.* **(உ - தமிழ்ச்சொல் வளம்)**
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.** **[MAR–24]**

| சரியான தொடர்கள் | பிழையான தொடர் |
|---|---|
| 1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.<br>2. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன. | ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன. |

**பிழைக்கான காரணம் :** ஒரு தாற்றில்தான் பல சீப்பு வாழைப்பழங்கள் இருக்கும்.
**தாறு** - வாழைக்குலை. **சீப்பு** - வாழைத்தாற்றின் ஒரு பகுதி.

4. **“உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்” - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.** **(இ-எழுத்து, சொல்) [PTA – 6, AUG – 2022]**

✱ **அளபெடை வகை :** உடுப்பதூஉம், உண்பதூஉம் இன்னிசை அளபெடை ஆகும்.

✱ **இலக்கணம் :** செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

5. **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.** **[MAR-24]**
**(செ- இரட்டுற மொழிதல்)**

✱ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது **இரட்டுற மொழிதல் அணி (அ) சிலேடை** எனப்படும்.
**எ.கா :** தமிழறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதன் பல் மருத்துவத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற நண்பர் ஒருவரை அறிமுகம் செய்து வைத்தபோது “இவர் பல்துறை வித்தகர்” என்று குறிப்பிட்டார்.

## தேர்வில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்கள் :

6. **தமிழ்நாட்டில் மட்டுமே விளையக்கூடிய சிறு கூலங்களின் பெயர்களை எழுதுக.** **[APR - 2023]**
✱ வரகு ✱ காடைக்கண்ணி ✱ குதிரைவாலி **(உ-தமிழ்ச்சொல் வளம்)**

7. **பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.** **(உ-தமிழ்ச்சொல் வளம்) [AUG - 2022]**
அ) அரும்பு - பூவின் தோற்றநிலை
ஆ) போது - பூ விரியத் தொடங்கும் நிலை
இ) மலர் (அலர்) - பூவின் மலர்ந்த நிலை
ஈ) வீ - மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை
உ) செம்மல் - பூ வாடின நிலை

8. **தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக. (உ-தமிழ்ச்சொல் வளம்) [PTA –1]**
**கால்டுவெல் குறிப்பிடும் கருத்து :**
✱ தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழில் உள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் பிற திராவிட மொழிகளில் இல்லை.
✱ தமிழில் மட்டும் பயன்படுத்தப்படும் சொற்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியதாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன.

9. **தாவரங்களின் இளம் பயிர் வகைகளைக் குறிக்கும் சொற்களில் நான்கினை எழுதுக.** **[MAY-22]**
✱ **நாற்று** - நெல், கத்தரியின் இளநிலை
✱ **கன்று** - மா, புளி, வாழையின் இளநிலை
✱ **குருத்து** - வாழையின் இளநிலை
✱ **பிள்ளை** - தென்னையின் இளநிலை
✱ **குட்டி** - விளாவின் இளநிலை
✱ **மடலி (அ) வடலி** - பனையின் இளநிலை
✱ **பைங்கூழ்** - நெல், சோளத்தின் இளநிலை

Way to success

**10. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடிஉண் டாயினும் இல்" - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.** [PTA - 5]

கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடைகள் **(இ-எழுத்து, சொல்)**

**11. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது? (இ - எழுத்து, சொல்)**

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| ✱ வினை, பெயர்த் தன்மையாகி வினையையே உணர்த்தி நிற்கும். | ✱ தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| ✱ காலம் காட்டாது. | ✱ காலம் காட்டும். [MDL – 19] |
| ✱ படர்க்கைக்கே உரியது | ✱ மூவிடத்திற்கும் உரியது. |
| ✱ **எ.கா.** பாடுதல், படித்தல் | ✱ **எ.கா.** பாடியவள், படித்தவர். |

## சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை? [PTA – 2, MAY-2022]**

**(செ- அன்னை மொழியே)**

- ✱ பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி தமிழ்.
- ✱ கடல்கொண்ட குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு தமிழ்.
- ✱ பாண்டிய மன்னனின் மகள் தமிழ்.
- ✱ திருக்குறளின் பெரும் பெருமைக்குரியது தமிழ்.
- ✱ பத்துப்பாட்டாகவும் எட்டுத்தொகையாகவும் விளங்குவது தமிழ்.
- ✱ பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகவும், சிலப்பதிகாரம், மணிமேகலையாகவும் சிறப்புறத் திகழ்வது, தமிழ்.
- ✱ எனவே, தமிழன்னையைத் தலைபணிந்து வாழ்த்துவதாகப் பாவலரேறு சுட்டிக்காட்டுகிறார்.

**2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க. (உ - தமிழ்ச்சொல் வளம்) [PTA – 3, MAY-2022]**

- ✱ **கன்று** - **புளியங்கன்று** ஆழமாக நடப்பட்டுள்ளது.
- ✱ **நாற்று** - சந்தையிலிருந்து **கத்தரி நாற்றுகள்** வாங்கி வந்தேன்.
- ✱ **குருத்து** - தோட்டத்தில் **வாழைக்குருத்துகள்** நன்கு வளர்ந்துள்ளன.
- ✱ **பிள்ளை** - நேற்று எங்கள் தோப்பில் **தென்னம் பிள்ளைகளை** நட்டோம்.
- ✱ **வடலி** - சாலை ஓரத்தில் நடப்பட்ட **பனை வடலிகள்** நன்கு வளர்ந்துள்ளன.
- ✱ **பைங்கூழ்** - எங்கள் **நெல்லின் பைங்கூழ்** நன்றாக வளர்ந்துள்ளது.

**3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது'** இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். **(இ - எழுத்து, சொல்) [MAR-24]**

**இக்கூற்றில் தடித்த எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | **அறிதல்** | அறியாதது | **அறியாமை** |
| புரிந்தது | **புரிதல்** | புரியாதது | **புரியாமை** |
| தெரிந்தது | **தெரிதல்** | தெரியாதது | **தெரியாமை** |
| பிறந்தது | **பிறத்தல்** | பிறவாதது | **பிறவாமை** |

Way to success

**4. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக. (செ- இரட்டுற மொழிதல்)**

சந்தக்கவிமணி தமிழழகனார் தமிழையும் கடலையும் ஒப்பிட்டு இரட்டுறமொழிந்து பாடுகிறார். இதன் மூலம் தமிழின் பெருமையை ஆழமாக உணரலாம். **[APR – 2023, PTA - 6]**

| பாடல் | தமிழ் | கடல் |
|---|---|---|
| *முத்தமிழ் துய்ப்பதால்* | இயல், இசை, நாடகம் என **முத்தமிழாய்** (மூன்று+தமிழ்) வளர்ந்தது. | கடல் **முத்தினையும்** (முத்து + அமிழ்) அமிழ்தினையும் தருகிறது. |
| *முச்சங்கம் கண்டதால்* | தமிழானது முதல், இடை, கடை ஆகிய **முச்சங்கங்களால்** வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம் பாஞ்சசன்யம் ஆகிய **மூன்று சங்குகளை** கடல் தருகிறது. |
| *மெத்த வணிகலமும் மேவலால்* | **ஐம்பெருங்காப்பியங்களை** அணிகலன்களாகப் பெற்றது. | மிகுதியான **வணிகக்கப்பல்கள்** செல்லும்படி இருக்கிறது. |
| *நித்தம் அணைகிடந்தே சங்கத் தவர் காக்க* | சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் **தமிழ்காக்கப்பட்டது.** (சங்கத்தவர் - சங்கப்புலவர்கள்) | கடல் அலையைத் தடுத்து நிறுத்தி **சங்கினைக் காக்கிறது.** (சங்கத்தவர் - சங்கினைத் காத்தல்) |
| *ஆழிக்கு இணைகிடந்ததே தேதமிழ் ஈண்டு* | இவ்வாறாக, தமிழையும் கடலையும் இரட்டுற மொழிதல் பாடல்வழி தமிழழகனார் ஒப்பிடுகிறார். | |

## நெடுவினா

**1. மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக. (செ- அன்னை மொழியே) [PTA – 5, AUG – 2022]**

அ) வரவேற்புரை **[JUN – 2023]**

தமிழை உயிராய் நேசிக்கும் ஆன்றோர்களே…! சான்றோர்களே…! அனைவருக்கும் வணக்கம். நாம் நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பாடும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் பொருளையும், நம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்துப்பாடலையும் ஒப்பிட்டு, அதனைப் பற்றிய விளக்கங்களை விரிவாக பேச வந்துள்ளேன்.

**ஆ) தமிழின் பிறப்பு – குமரிக்கண்டம்**

✷ **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடை உடுத்திய நிலமெனும் பெண்ணாக தமிழைச் சுந்தரனார் வருணிக்கின்றார்.

*நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்*

✷ **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து :**

கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து மண்ணுலகம் போற்ற அரசாண்ட பேரரசு என பெருஞ்சித்திரனார் வருணிக்கின்றார்.

*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!*

way to success

**இ) தமிழ்த்தாயின் பெருமைகள்**

✷ **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

தமிழ்த்தாயின் அழகிய முகமாக பாரதக் கண்டம் திகழ்கிறது. அம்முகத்திற்குப் பிறைநிலவு போன்ற நெற்றியாக தக்காணப்பகுதி அமைந்துள்ளது. அந்த நெற்றியில் நறுமணமிக்க பொட்டு வைத்ததுபோல் தமிழகம் உள்ளது என சுந்தரனார் கூறுகிறார்.

***தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்***
***தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!***

✷ **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து :**

தமிழன்னை பாண்டியனின் மகள் எனவும், திருக்குறளின் பெருமைக்குரியவள் எனவும் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற உலகம் போற்றும் இலக்கியங்களைத் தந்தவள் தமிழ்த்தாய் எனவும் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

***தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!***
***இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!***

**ஈ) உலகெங்கும் நிறைந்த மொழி – தமிழ்**

✷ **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

தமிழ்த்தாயின் பிறைபோன்ற நெற்றியில் இருந்து வரும் திலகத்தின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வதுபோல தமிழ் மொழி உலகின் எல்லாத் திசைகளிலும் புகழ்பெற்ற மொழியாக இருக்கிறது.

***அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற***

✷ **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து :**

'பழம்பெருமையும் தனிச்சிறப்பும் கொண்ட தமிழ்மொழி, வேற்றுமொழியார் புகழ்ந்துரைக்கும் அளவிற்கு உலகின் எல்லாத் திசைகளிலும் உயிர்ப்போடு விளங்குகிறது' எனப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

***விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்***

**உ) தமிழ் வாழ்க!**

✷ **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து :**

இளமையாக இருக்கின்ற தமிழ்மொழியே, உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துகிறோம் என சுந்தரனார் வியந்து கூறுகிறார்.

***உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!***

✷ **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து :**

வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று, நாங்கள் தமிழாகிய உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்று பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்.

***அந்தும்பி பாடும் அதுபோல யாம்பாடி***
***முந்துற்றோம் யாண்டும் முழங்கத் தனித்தமிழே!***

**ஊ) முடிவுரை**

மனோன்மணீயம் சுந்தரனார் மற்றும் பெருஞ்சித்திரனார் இருவரும் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தமிழ் வாழ்த்துப் பாடல் மூலம் தமிழ் மொழியின் பெருமைகளையும், சிறப்புகளையும் அழகாக சிறப்பித்து புகழ்ந்ததை விளக்கினேன். இந்த வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி ! வணக்கம் !

2. **தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.(உ - தமிழ்ச்சொல் வளம்) [PTA - 3, SEP – 2021, MAY-2022]**

**குறிப்புச் சட்டகம்**

* முன்னுரை
* தமிழ் சொல்வளம் குறித்து கால்டுவெல்லின் கருத்து
* தமிழின் சொல்வளம்
* சொல்லாக்கத்திற்கான தேவை
* முடிவுரை

**முன்னுரை:**

காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை? என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குகிறது நம் செந்தமிழ்மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடைபகர்கிறது, நம் தமிழ்ச்சொல் வளம்.

**தமிழ் சொல்வளம் குறித்து கால்டுவெல்லின் கருத்து:**

* தமிழல்லாத திராவிட மொழிகளின் அகராதிகளை ஆராயும்போது, தமிழில் உள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் பிற திராவிட மொழிகளில் இல்லை.
* தமிழில் மட்டும் பயன்படுத்தப்படும் சொற்கள் மட்டுமின்றி தெலுங்கு, கன்னடம் முதலிய பிற திராவிட மொழிகளுக்கு உரியதாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன.

**தமிழின் சொல்வளம்:**

* சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவாயினும், தமிழ் அதில் தலைசிறந்ததாகும்.
* ஒரு பொருள் குறித்துவரும் பல சொற்களும் பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லும் தமிழ்மொழியின் சொல்வளங்களுள் ஒன்று.
* உதாரணமாக, ஆங்கிலத்தில் இலையைக் குறிக்க Leaf என்ற ஒரேசொல் மட்டும்தான் உள்ளது. ஆனால் தமிழில், தாள், இலை, தோகை, ஓலை,…என பல சொற்கள் உள்ளன.
  **எ.கா:** புளி, வேம்பு முதலியவற்றின் இலை - இலை;
  தென்னை, பனை முதலியவற்றின் இலை - ஓலை;

**சொல்லாக்கத்திற்கான தேவை:**

* மொழியே பண்பாட்டின் அடையாளம். அதை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
* சொல்லாக்கத்திற்கான தேவையானது அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது.
* நம் தமிழ்மொழியில் இன்றைய அறிவியல் முன்னேற்றத்திற்கேற்ப சொல் வளத்தைப் பெருக்க வேண்டும்.
* இன்றைய அவசர யுகத்தில் தமிழின் பயன்பாடு குறைந்து வருவதால் இலக்கியங்களும் அதில் கையாளும் சொல்வளமும் குறைந்து வருகின்றன.
* தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
* இலக்கிய மேன்மைக்கும் மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும் புதிய சொல்லாக்கம் தேவை.
* உலகின் ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியாத தமிழரும் அவற்றை அறிந்து கொள்ள முடியும்.
* மக்களிடையே பரந்த மனப்பான்மை, ஆளுமையை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
* பிறமொழிச்சொற்கள் கலவாமல் இருக்க காலத்திற்கேற்ப புதிய கலைச்சொல்லாக்கம் தமிழில் தேவைப்படுகிறது.

**முடிவுரை:**

மென்மையான தமிழை மேன்மையான தமிழாக்க அறிவியல் தொழில்நுட்பச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி தமிழின் பெருமையை உலகிற்குக் கொண்டு செல்வோம். காலத்திற்கு ஏற்பச் சொல்வளம் பெருகும் வகையில் நம் இலக்கியங்களை இயற்றிடுவோம்.

*தமிழ்வளம் காப்போம்! சொல்வளம் பெருக்குவோம்!*

way to success

**3. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.** **(து - உரைநடையின் அணிநலன்கள்) [PTA – 2]**

**சூழல்** - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**இத்தாலியிலிருந்து, தமிழ்நாட்டிற்குத் திரும்பிய பழனியின் அண்ணன் மகள் சசிகலாவும், பழனியும் தமிழ் உரைநடையின் சிறப்புகளைப் பற்றி உரையாடுகின்றனர்.**

**பழனி** : அன்பு மகளே! பல ஆண்டுகள் கழித்து உன்னை நேரில் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**சசிகலா** : அயல்நாட்டில் வாழ்ந்தாலும், தாய்நாட்டிற்கு வந்தால் தனி புத்துணர்ச்சிதான் சித்தப்பா.

**பழனி** : அலைபேசியில் தமிழ் உரைநடையின் சிறப்புகள் பற்றி கேட்டிருந்தாயல்லவா? இப்போது பேசுவோமா?

**சசிகலா** : நான் ஆவலுடன் உள்ளேன்! உரைநடைக்கும் உரையாடலுக்கும் வித்தியாசம் என்ன?

**பழனி** : நாம் பேசுகிறோமே அதுதான் உரையாடல். பேசினால் உரையாடல், எழுதினால் உரைநடை.

**சசிகலா** : உரைநடைக்கு ஏதேனும் எடுத்துக்காட்டுக் கூற முடியுமா சித்தப்பா!

**பழனி** : ஏன் முடியாது! "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய் உன் புன்னகைதான் அதற்குச் சான்று" இது அறிஞர் அண்ணாவின் உரைநடை.

**சசிகலா** : சிறப்பு!. ஆங்கிலத்தில் analogy என்பதற்கு தமிழில் என்ன பயன்படுத்துகிறீர்கள் சித்தப்பா?

**பழனி** : இதற்கு உதாரணம், "புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையால் காணப் படும்"

என்ற திருக்குறளில் உவம உருபு மறைந்து வந்ததால், அதற்கு **எடுத்துக்காட்டு உவமை அணி** என்று பெயர். இதனை உரைநடையில் பயன்படுத்துகையில் **இணை ஒப்பு** என்கிறோம்.

**சசிகலா** : இலக்கணை என்பதன் பொருள் என்ன சித்தப்பா!

**பழனி** : அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து எழுதுவதே இலக்கணை என்கிறோம்.

**எ.கா.** தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் எழுதியுள்ள

சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும், விருந்து வைக்கும்……..மனம் அமைதி எய்தும்"

இதில் அஃறிணையான மரங்களை உயர்திணையாகக் கருதி எழுதியிருக்கிறார்.

**சசிகலா** : அருமை சித்தப்பா! இதுதவிர வேறு ஏதேனும் சிறப்பு உரைநடையில் உண்டா?

**பழனி** : ம்… இன்னும் உள்ளதே! சொல்கிறேன் கேள்.

- முரண்படுவது போல இருக்கும்; உண்மையில் முரண்படாத சொற்கள் '**முரண்படு மெய்ம்மை**'.
  **எ.கா.** 'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?'
- முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுவது **சொல் முரண்**. எ.கா. 'கலப்பில்லாத பொய்…'
- சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவதை **எதிரிணை இசைவு** என்கிறோம்.
- சொல்லையோ, கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறையில் உள்ள சிறப்பு **உச்சநிலை**.
  **எ.கா.** "இந்தியாதான் என்னுடைய மோட்சம்;….என் கிழக்காலத்தின் காசி" என்று பாரதி நம் நாட்டை உயர்த்திக் கூறுகிறார். இது போன்று பல உள்ளன.

**சசிகலா** : மிக்க நன்றி சித்தப்பா! நீங்கள் தமிழ் உரைநடைச் செழுமை பற்றிக் கூறக் கூற மேலும் அவற்றைப் படித்து இன்புற அவாவுறுகிறேன் சித்தப்பா!

Way to success

# மொழியை ஆள்வோம்!



## படித்துச் சுவைக்க

**பாடலில், மரம் என்னும் சொல், இடத்திற்கேற்பப் பொருள் தருவதாய் 11 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பொருள்களைப் பொருத்திப் படித்துச் சுவைக்க.**

| | பாடலின் பொருள் |
|---|---|
| “ மரமது[1] மரத்தில்[2] ஏறி | **அரசன் குதிரையில்** ஏறி |
| மரமதைத்[3] தோளில் வைத்து | **வேலைத்** தோளில் வைத்து |
| மரமது[4] மரத்தைக்[5] கண்டு | **அரசன் புலியைக்** கண்டு |
| மரத்தி[6] னால் மரத்தைக்[7] குத்தி | **வேலினால் புலியைக்** குத்தி |
| மரமது[8] வழியே சென்று | **காட்டு** வழியே சென்று |
| வளமனைக் கேகும் போது | அரண்மனையை அடையும்போது |
| மரமது[9] கண்ட மாதர் | **அரசனைக்** கண்ட பெண்கள் |
| மரமுடன்[10] மரம்[11] எடுத்தார்” | **ஆரத்தி** (ஆல் + அத்தி) எடுத்தனர். |
| தனிப்பாடல் திரட்டு – சுந்தரகவிராசர் | |

| | |
|---|---|
| 1 | அரசன் (அரசமரம்) |
| 2 | மா - குதிரை (மாமரம்) |
| 3 | வேல் (கருவேலம்) |
| 4 | அரசன் |
| 5 | புலி (வேங்கை) |
| 6 | வேல் |
| 7 | புலி (வேங்கை) |
| 8 | காடு |
| 9 | அரசன் |
| 10 | ஆல் (ஆலமரம்) |
| 11 | அத்தி (அத்தி மரம்)<br>ஆல் + அத்தி = ஆரத்தி |

## மொழிபெயர்ப்பு

**[PTA - 2, SEP - 2021]**

| | | |
|---|---|---|
| 1. | If you talk to a man in a language he understands, that goes to his head. If you talk to him in his own language that goes to his heart.<br>– Nelson Mandela | நீ ஒரு மனிதனிடம் அவன் புரிந்து கொள்ளும் மொழியில் பேசினால், அது அவனது மூளையைச் சென்றடையும். ஆனால் அவனிடம் அவன் தாய்மொழியில் பேசினால், அது அவனுடைய இதயத்தைச் சென்றடையும்.<br>- நெல்சன் மண்டேலா |
| 2. | Language is the road map of a culture. It tells you where its people come from and where they are going<br>– Rita Mae Brown | மொழி என்பது பண்பாட்டின் சாலை வரைபடமாகும். அதுவே அதன் மக்கள் எங்கிருந்து வருகிறார்கள், எங்கே சென்றுகொண்டு இருக்கிறார்கள் என்பதை உனக்குச் சொல்லும்.<br>- ரீட்டா மே பிரௌன். |

Way to success

## சந்தக் கவிதையில் வந்த பிழைகளைத் திருத்துக

**[JUN – 2023, PTA – 5, MAY – 2022]**

| பிழையான கவிதை | திருத்தப்பட்ட கவிதை |
|---|---|
| "தேணிலே ஊரிய செந்தமிழின் - சுவை<br>தேரும் சிலப்பதி காறமதை<br>ஊனிலே எம்முயிர் உல்லலவும் - நிதம்<br>ஓதி யுனர்ந்தின் புருவோமே" | "தே**னி**லே ஊ**றி**ய செந்தமிழின் - சுவை<br>தேரும் சிலப்பதி கா**ர**மதை<br>ஊனிலே எம்முயிர் உ**ள்ளள**வும் - நிதம்<br>ஓதி யு**ண**ர்ந்தின் பு**று**வோமே" |

**குறிப்பு:** PTA-5-ல் **'செந்தமிளின்'**, **'உம்முயிற்'** என்று கூடுதலாக பிழைகள் கொடுக்கப்பட்டுள்ளது. அதனால் வினாவை நன்கு கவனித்து பிறகு விடையளிக்கவும்.

## வினைமுற்றை வினையாலணையும் பெயராக மாற்றித் தொடர்களை இணைத்து எழுதுக

| வ.எண் | வினைமுற்றுத் தொடர்கள் | வினையாலணையும் தொடர்கள் |
|---|---|---|
| 1. | கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறார். அவரை அழைத்து வாருங்கள். | கலையரங்கத்தில் எனக்காகக் காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள். |
| 2. | ஊட்டமிகு உணவு உண்டார். அவர் நீண்ட வாழ்நாள் பெற்றார். | ஊட்டமிகு உணவு உண்டவர் நீண்ட வாழ்நாள் பெற்றார். |
| 3. | நேற்று என்னைச் சந்தித்தார். அவர் என் நண்பர். | நேற்று என்னைச் சந்தித்தவர் என் நண்பர். |
| 4. | பொதுஅறிவு நூல்களைத் தேடிப் படித்தார். போட்டித் தேர்வில் வென்றார். | பொது அறிவு நூல்களைத் தேடிப் படித்தவர் போட்டித் தேர்வில் வென்றார். |

## தொடர்களில் உள்ள வண்ணச் சொற்களுக்குப் பதிலாக அதே பொருளுடைய வேறு சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை மீள எழுதுக.

| | |
|---|---|
| 1. | ***உலகில்*** *வாழும்* ***மக்களில்*** *சிலர்* ***கனி****யிருக்கக் காய்* ***புசி****த்தலைப்போல, இன்சொல் இருக்க வன்சொல் பேசி* ***இன்னற்****படுகின்றனர்.* |
| | **புவியில்** வாழும் **மனிதர்களில்** சிலர் **பழமிருக்கக்** காய் **உண்பதை**ப்போல, *இன்சொல்* இருக்க வன்சொல் பேசி **துன்பப்**படுகின்றனர். |
| 2. | *வள்ளல் குமணன்* ***வறுமையால்*** *வாடிவந்த* ***புலவனுக்குத்*** *தனது தலையைக்* ***கொடுத்து*** *மங்காப்****புகழ்*** *பெற்றான்.* |
| | வள்ளல் குமணன் **ஏழ்மையால்** வாடிவந்த **கவிஞனுக்குத்** தனது தலையை **வழங்கி** மங்காப் **பெருமை** பெற்றான். |
| 3. | *நளனும் அவனது* ***துணைவியும்*** *நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை****முகில்*** *கண்ட* ***மஞ்ஞை*** *போலக்* ***களி*** *கொண்டனர்.* |
| | நளனும் அவனது **மனைவியும்** நிடதநாட்டுக்கு வந்ததைக் கண்டு, அந்நாட்டு மக்கள் மழை**மேகம்** கண்ட **மயில்** போல **மகிழ்ச்சி** கொண்டனர். |
| 4. | ***சோலையிற்*** *பூத்த மணமலர்களில்* ***சுரும்புகள்*** *மொய்த்துப் பண்பாடி* ***மது****வுண்டன.* **[PTA - 1]** |
| | **பூங்காவில்** பூத்த மணமலர்களில் **வண்டுகள்** *மொய்த்துப் பண்பாடி* **தேன்** உண்டன. |
| 5. | ***பசு****ப்போல்* ***சாந்தமும்*** ***புலி****போல்* ***தீரமும்*** ***யானை*** *போல உழைப்பும் மனிதனுக்கு வேண்டும்.* |
| | **ஆ**ப்போல் **அமைதியும், வேங்கை**போல் **துணிவும், களிறு** போல உழைப்பும், மனிதனுக்கு வேண்டும். |

## கீழ்க்காணும் சொற்களின் கூட்டப்பெயர்களைக் கண்டுபிடித்து எழுதுக

*(குவியல், குலை, மந்தை, கட்டு)* **[JUN-23, PTA-4, MDL-19, SEP-21, MAY-22]**

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|
| கல் | **கற்குவியல்** | புல் | **புற்கட்டு** |
| பழம் | **பழக்குலை** | ஆடு | **ஆட்டுமந்தை** |
| **கூடுதல் வினாக்கள்** | | | |
| மக்கள் | **மக்கள் கூட்டம்** | கீரை | **கீரைக்கட்டு** |

## கட்டுரை எழுதுக

குமரிக் கடல்முனையையும் வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். **[PTA – 1, MDL - 19]**

**இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.**

**தலைப்பு – 'சான்றோர் வளர்த்த தமிழ்'**

* **முன்னுரை**

  நம் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறருடைய உணர்வுகளை நாம் புரிந்துகொள்ளவும் உதவுவது மொழியே ஆகும். நாகரிகம் வளர வளர, பேச்சு வழக்கு மொழியெல்லாம் எழுத்து வடிவம் பெற்றன. மொழி வளர்ச்சியின் தொடக்கத்தில் அரும்பணி புரிந்த சான்றோர்களின் தமிழ்ப்பணி குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

* **பைந்தமிழ் சிறப்பு :**

  பண்டைய காலத்தில் வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பரவியிருந்தது. காலங்கள் பல மாறினாலும், கண்டங்கள் பல அழிந்தாலும், அழியாத சிறப்புடைய மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. செந்தமிழாய், வண்டமிழாய், பைந்தமிழாய் வலம் வரும் ஒரே மொழி தமிழ் மொழியாகும்.

  *வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்*

* **பிள்ளைத்தமிழுக்குக் குமரகுருபரர் :**

  கடவுளரையோ மக்களுள் சிறந்தவரையோ குழந்தையாக எண்ணி, குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் அமையப்பாடுவது பிள்ளைத்தமிழ் ஆகும். பிள்ளைத்தமிழ் பாடல்களில் சிறந்த பாடலாகக் கருதப்படுவது குமரகுருபரர் முருகக் கடவுளைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் ஆகும்.

  *செம்பொ னடிச்சிறு கிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்*
  *திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாட*

* **சதகத்திற்கு முன்னோடி மாணிக்கவாசகர் :**

  அகப்பொருள் பற்றியோ, புறப்பொருள் பற்றியோ நூறு செய்யுள்களில் உரைப்பது சதகம் எனப்படும். தமிழில் தோன்றிய முதல் சதகம் மாணிக்கவாசகரின் திருச்சதகம் ஆகும்.

  *பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பதுதான் சதகம்*



Way to success

* **பரணிக்கோர் செயங்கொண்டார் :**

போரிலே ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றிபெறும் வீரர்கள்மேல் பாடப்படுவது பரணி இலக்கியமாகும். செயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணி, பரணி இலக்கியங்களில் சிறப்பானது ஆகும்.

| *ஆனை அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி* |
|---|

* **கலம்பகத்திற்கு இரட்டையர்கள் :**

இறைவனையோ, அரசனையோ, தலைவனாகக் கொண்டு பல வகை செய்யுள்களைக் கலந்து பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம் ஆகும். இவை, பலவகைப் பாக்களாலும், பாவகைகளாலும் பாடப்படுகிறது. முதுசூரியர், இளஞ்சூரியர் என்ற இரட்டையர்களால் பாடப்பெற்ற தில்லைக்கலம்பகம் மிகச்சிறப்பானது ஆகும்.

| *கலம்பகம் புனைந்த அலங்கல் அம் தொடையல்* |
|---|

* **கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர் :**

கோவை என்றால் வரிசை; வரிசையாகக் கோக்கப்பட்டது என்று பொருள். இலக்கியங்களில் அகப்பொருள் மற்றும் புறப்பொருள் பற்றிய நிகழ்ச்சிகளை வரிசையாகப் பாடுவது கோவை இலக்கியம் எனப்படும். பாட்டுடைத்தலைவன் உலா வருதலும் அவனைக்கண்டு ஏழு பருவ மகளிர் மனம் மகிழ்தலும் உலா இலக்கியம் ஆகும். ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்து வரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதி ஆகும். இம்மூன்று சிற்றிலக்கிய வகைகளைப் பாடுவதில் ஒட்டக்கூத்தர் மிகவும் திறமையானவர் ஆவார்.

* **முடிவுரை :**

தமிழ் தனித்தியங்கும் இயல்புடையது. காலத்தால் அழியாத கன்னித் தமிழாய் இளமையுடன் திகழக்கூடியது. தமிழின் தொன்மையும் தூய்மையும் வண்மையும் வனப்பும் உலக அளவில் உள்ள அனைவரையும் ஈர்த்துள்ளது. தமிழ் வளர்ச்சிபெற இளைய தலைமுறையினரான நாம் நாளும் சான்றோர் வழி தொண்டாற்றுவோம்!

| ***தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!*** |
|---|

## நயம் பாராட்டுக

தேனினும் இனியநற் செந்தமிழ் மொழியே
    தென்னாடு விளங்குறத் திகழுந்தென் மொழியே
ஊனினும் ஒளிர்வுறும் ஒண்டமிழ் மொழியே
    உணர்வினுக் குணர்வதாய் ஒளிர்தமிழ் மொழியே
வானினும் ஓங்கிய வண்டமிழ் மொழியே
    மாந்தருக் கிருகணா வயங்குநன் மொழியே
தானனி சிறப்புறுந் தனித்தமிழ் மொழியே
    தழைத்தினி தோங்குவாய் தண்டமிழ் மொழியே

**- கா. நமச்சிவாயர்**

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| அ) திரண்ட கருத்து<br>ஆ) மையக்கருத்து<br>இ) தொடை நயங்கள்<br>✷ மோனை நயம்<br>✷ எதுகை நயம்<br>✷ இயைபு நயம் | ஈ) சொல் நயம்<br>உ) அணி நயம்<br>ஊ) தலைப்பு |

Way to success

**அ) திரண்ட கருத்து :**

வாழைக்கு அழகு குருத்து! பாடலுக்கு அழகு கருத்து!!

தமிழ்மொழியானது தேனைவிட இனிமையான, தென்னாட்டில் சிறந்து விளங்குகின்ற மொழி. உடலினும் மேலாக ஒளி பெற்றுத் திகழ்கிறது. எல்லா உணர்விலும் ஒளிர்கின்றது. வானைக் காட்டிலும் உயர்ந்து விளங்குகின்ற வலிமையான மொழி. மக்களுக்கு இரு கண்களாக விளங்குகின்ற சிறந்த மொழி தமிழாகும். தனியாகச் சிறப்புற்றுத் திகழும் தமிழ்மொழியே தழைத்தினிது ஓங்குவாயாக! என்று புலவர் வாழ்த்துகிறார்.

**ஆ) மையக்கருத்து :**

பல்வேறு சிறப்புகளைக் கொண்ட தமிழ் செழித்து வளரவேண்டும் என கவிஞர் வாழ்த்தியுள்ளார்.

**இ) தொடை நயங்கள் :**

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்!

என்பதற்கு ஏற்பத் தொடைநயங்கள் அமையப் பாடல் இயற்றப்பட்டுள்ளது.

**✳ மோனை நயம் :**

குயவனின் கைவண்ணம் பானையிலே! புலவனின் கைவண்ணம் மோனையிலே!!

- ♣ செய்யுளில் சீர்தோறும் (அ) அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயமாகும்.
- ♣ ***எ.கா.*** **தே**னினும்-**தெ**ன்னாடு; **ஊ**னினும்-**உ**ணர்வினுக்;
  **தா**னனி-**த**னித்தமிழ்; **த**ழைத்தினி-**த**ண்டமிழ்

**✳ எதுகை நயம் :**

பாடலுக்கு எது கைகொடுக்காவிட்டாலும், எதுகை கைக்கொடுக்கும்!!

- ♣ செய்யுளில் சீர்தோறும், அல்லது அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை நயமாகும்.
- ♣ ***எ.கா.*** தே**னி**னும் - ஊ**னி**னும் - வா**னி**னும்

**✳ இயைபு நயம் :**

கண்ணுக்கு மை அழகு! செய்யுளுக்கு இயைபு அழகு!!

- ♣ ஒரு செய்யுளின் அடிதோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றிவரத்தொடுப்பது இயைபுத் தொடையாகும்.
- ♣ ***எ.கா.*** செந்தமிழ் ***மொழியே;*** ஒண்டமிழ் ***மொழியே***

**ஈ) சொல்நயம் :**

வீரனுக்கு அழகு வில்! பாடலுக்கு அழகு சொல்!!

என்பதற்கிணங்கப் புலவர் பாடலில் நயம்மிக்க சொற்களைப் பயன்படுத்தியுள்ளார்.

- ♣ ***எ.கா.*** செந்தமிழ், ஒண்டமிழ், வண்டமிழ், தனித்தமிழ்.

**உ) அணி நயம் :**

கோயிலுக்கு மணி அழகு, பாடலுக்கு அணி அழகு!!

இப்பாடலில் தமிழின் பெருமையைப் புலவர் உயர்த்திக் கூறியுள்ளமையால் **'உயர்வு நவிற்சி அணி'** ஆகும்.

**தலைப்பு: 'இனிய தமிழ்மொழி'**

way to success

# மொழியோடு விளையாடு



## சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்குக.

**[APR-23, SEP-21, PTA-1]**

**எ.கா :** பூமணி

(தேன், விளக்கு, மழை, விண், மணி, விலங்கு, செய், மேகலை, வான், பொன், பூ)

| | | | | |
|---|---|---|---|---|
| ♣ தேன்மழை<br>♣ வான்மழை<br>♣ செய்வான் | ♣ பொன்விலங்கு<br>♣ மணிமேகலை<br>♣ மணிவிளக்கு | ♣ பொன்மணி<br>♣ பொன்செய்<br>♣ பொன்வான் | ♣ பூவிலங்கு<br>♣ பூமழை | ♣ விண்மழை<br>♣ செய்தேன் |

## குறிப்புகளைக் கொண்டு வினாவிலேயே விடை இருப்பது போன்று வினாத்தொடர்கள் அமைக்க.

(குறளின்பம், சுவைக்காத இளநீர், காப்பியச் சுவை, மனிதகுல மேன்மை, விடுமுறைநாள்)

| | |
|---|---|
| **எ.கா.** குறளின்பம் | குறளின்பத்தில் திளைக்காத தமிழன் உண்டா? |
| சுவைக்காத இளநீர் | மன்னன் சுவைக்காத இளநீர் உண்டோ? **[MAR–24]** |
| காப்பியச் சுவை | சீவகசிந்தாமணியில் காப்பியச்சுவையை உணராதவர் உண்டா? |
| மனிதகுல மேன்மை | மனிதகுல மேன்மையைப் போற்றாத தமிழ் இலக்கியம் உண்டோ? |
| விடுமுறைநாள் | விடுமுறை நாள் கண்டு மகிழாத மாணவர் உண்டோ? **[MAR–24]** |


## எண்ணுப்பெயர்களைக் கண்டு, தமிழ் எண்களில் எழுதுக.

| செய்யுள் அடி | எண்ணுப்பெயர் | தமிழ் எண் |
|---|---|---|
| நாற்றிசையும் செல்லாத நாடில்லை **[APR - 23]** | **நான்கு** | ச |
| எறும்புந்தன் கையால் எண்சாண் | **எட்டு** | அ |
| ஐந்துசால்பு ஊன்றிய தூண் **[APR - 23]** | **ஐந்து** | ரு |
| நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி | **நான்கும் இரண்டும்** | ச உ |
| ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி | **ஆயிரம்** | க000 |

## அகராதியில் காண்க.

* அடவி - காடு, சோலை, நந்தவனம், திரள், கூட்டம், தொகுதி
* அவல் - விளைநிலம், பள்ளம், குளம்
* சுவல் - முதுகு, மேடு, தொல்லை
* செறு - வயல், குளம், கோபம்
* பழனம் - வயல், மருத நிலம், பொய்கை
* புறவு - காடு, புறா, முல்லை நிலம், பயிரிடும் நிலம், முல்லைக்காடு

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.** [PTA -1]



### நூல் பல கல்...

அறிவைப் பூட்டி வைக்காதே!
அறியாமை இருளில் தலைகுனியாதே!
புத்தகங்கள் என்னும் திறவுகோல் கொண்டே
அறிவுப்பூட்டைத் திறந்திடு!
அறம் பொருள் இன்பம் கற்றிடு!
அவனியில் உயர்ந்து சிறந்திடு!

**செயல்திட்டம்**

**நீங்கள் வாழும் பகுதியிலுள்ள எவையேனும் ஐந்து பயிர்வகைச் சொற்களுக்கான படத்தொகுப்பை உருவாக்குக.**

| நெல் | கம்பு | கேழ்வரகு |
|---|---|---|
|  |  |  |
| **வாழை** | **உளுந்து** | **கரும்பு** |
|  |  |  |

**நிற்க அதற்குத் தக...**

| இன்சொல் வழி | தீய சொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

**இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?**

❋ நான் இன்சொல் வழியே நடப்பேன்.
❋ இன்சொல் வழி நடந்தால், அறம் வளரும்; புகழ் பெருகும்; அன்பு நிறையும்; பிறர் மனம் மகிழும் என்று சொல்லி என் நண்பர்களுக்கு வழிக்காட்டுவேன்.

## கூடுதல் வினா

1. **இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் ஐந்தினை எழுதுக.** [JUN – 2023, MAY – 2022]


**இன்சொற்களைப் பேசுவதனால் விளையும் நன்மைகள் :**

❋ நாம் எப்பொழுதும் நல்ல வார்த்தைகளை பேசும்போது, நல்லதே நமக்கு நடக்கும்.
❋ இன்சொல் பேசுவதால் நமக்கும், நம் எதிரில் இருப்பவர்களுக்கும் மன மகிழ்ச்சி ஏற்படும்.
❋ இன்சொல் பேசினால் வாழ்க்கையில் அறம் வளரும், புகழ், பெருகும், பெருமை சேரும்.
❋ நாம் பேசக்கூடிய நல்ல நல்ல வார்த்தைகள் மூலம் நமக்கு நல்ல நண்பர்கள் சேருவர்.
❋ நாம் இன்சொற்களை எங்கு பேசினாலும் அந்த இடத்தில் அன்பு நிறையும்.



# கற்பவை கற்றபின்...

(கீழே கொடுக்கப்பட்டுள்ள பகுதி எடுத்துக்காட்டிற்காக மட்டுமே, நீங்கள் நம் கற்பனை வளத்திற்கேற்றாற் போல எழுதிப் பழகுக)



## செய்யுள் : அ) அன்னை மொழியே

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

1. *"நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு*
*ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்*
*கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம்புறம் என்று*
*இத்திறத்த எட்டுத் தொகை"*

**இச்செய்யுளில் இடம்பெற்றுள்ள எட்டுத்தொகை நூல்களைப் பெயர்க்காரணத்துடன் எடுத்துக்காட்டுக.**

| எட்டுத்தொகை நூல்கள் - பெயர்க்காரணம் | |
|---|---|
| **நற்றிணை** | நல்-நல்ல; திணை-ஒழுக்கம்; நல்ல ஒழுக்கத்தைக் கூறும் நூல். |
| **குறுந்தொகை** | குறைந்த அடிகள் கொண்ட நூல் தொகுப்பு. |
| **ஐங்குறுநூறு** | குறுகிய அடிகளை உடைய ஐநூறு பாடல்களைக் கொண்டது. |
| **பதிற்றுப்பத்து** | பத்து சேர மன்னர்களைப் புகழ்ந்து பத்துப் புலவர்கள் பத்துப் பத்தாகப் பாடிய பாடல்களின் தொகுப்பு. (பத்து + பத்து = பதிற்றுப்பத்து) |
| **பரிபாடல்** | பரிந்து வரும் இசைப்பாடல்களால் ஆன பாவகை பரிபாடல் ஆகும். |
| **கலித்தொகை** | கலிப்பாவினால் அமைந்த பாடல்களைக் கொண்டது. |
| **அகநானூறு** | அகப்பொருள் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. (அகம் + நான்கு + நூறு = அகநானூறு) |
| **புறநானூறு** | புறம் பற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. (புறம் + நானூறு = புறநானூறு) |

2. **''எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரைவிரிக்கும்'' என்ற பாடலடியைக் கொண்டு வகுப்பறையில் ஐந்து நிமிட உரை நிகழ்த்துக.**

***அவையோர் அனைவருக்கும் வணக்கம்!***

"எந்தமிழ்நா நின் பெருமை எடுத்தே உரை விரிக்கும்" என்ற தலைப்பிலே அன்னைத் தமிழின் பெருமைகளை எடுத்துரைக்க வந்துள்ளேன்.

*"கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மூத்தகுடி நம் தமிழ்க்குடி"* என்று சான்றோர் உரைத்தது போல், குமரிக்கண்டத்திலே நிலைத்து நின்று அரசாண்ட பேரரசி நம் தமிழ்மொழி!

உலக நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கும் சிறந்த பங்களிப்பினைத் தமிழ்மொழி அளித்திருக்கிறது. உலகில் உள்ள உயரிய மனித இனத்தின் மரபுச் செல்வமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் மட்டுமல்லர்... பிறநாட்டு அறிஞர்களும் தமிழ்மொழியின் பெருமைகளை அறிந்து, பயின்று அதன் பெருமையை எண்ணி வியந்திருக்கின்றனர். தமிழ் இலக்கணம், படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்கவல்லது.

தமிழன்னை இயல், இசை, நாடகம் என்ற முப்பெரும் பிரிவுகளால் மொழியை ஆளுகின்றாள். ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாக அணிந்திருக்கின்றாள். தன் சொல் வளத்தால் உலக மொழிகளுக்கெல்லாம் தாயாக விளங்குகின்றாள். காலத்திற்கு ஏற்றவகையில் இலக்கிய வடிவங்களில் வளர்ந்து மொழியையும் ஏற்றம் பெற வைத்திருக்கிறாள்...

அருந்தமிழே! நின் பெருமைகள் எண்ணில் அடங்கா... எந்தமிழ்நா அதனை விரித்துரைக்கக் காலம் இல்லாத காரணத்தால் என்னுரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி! வணக்கம்!

way to success

# செய்யுள் : ஆ) இரட்டுற மொழிதல்

- சந்தக்கவிமணி தமிழழகனார்

1. **சிலேடை சொல்நயங்களைப் தொகுத்துப் பதிவு செய்து கலந்துரையாடுக.** **புத்தக பக்க எண் : 10**

➔ **பணத்தட்டு :**

வள்ளல் ஒருவர் புலவருக்குப் பணத்தினை, ஒரு வெள்ளித்தட்டில் தர, புலவர் 'பணத்தட்டு' யாருக்கு என்று வினவ, வள்ளல் 'பணத்தட்டு புலவருக்குத்தான்' என்றாராம். (பணத்தட்டு - பணத்தட்டுப்பாடு என்ற பொருளிலும் வரும்)

➔ **வாயிலில் போடுவேன்..? :**

"சாப்பிட்ட பிறகு வெற்றிலை போடும் பழக்கம் தங்களுக்கு உண்டா?" என்று ஒருவர் கி.வா.ஜகந்நாதனிடம் கேட்டார். அதற்கு "ஓ…! உண்டே! வாயில் போடமாட்டேன். வாயிலில் போடுவேன்" என்றார். சாப்பிட்ட பிறகு வெறும் இலையை வாயிலில் உள்ள குப்பைத்தொட்டியில் போடத்தானே வேண்டும்," என்று கூறி அனைவரையும் சிரிக்க வைத்தார்.

➔ **பிஞ்சும் இருக்கிறது :**

ஒருமுறை ஆன்மீகச் சொற்பொழிவாளர் கிருபானந்தவாரியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தப்பட்டது. அவ்வாடை கிழிந்திருந்தது. அதனை அவர் நகைச்சுவையாக 'இவ்வாடையில் பூ இருக்கின்றது, காய் இருக்கின்றது, பிஞ்சும் (கிழிந்தும்) இருக்கின்றது' என்று குறிப்பிட்டார்.

2. **மொழியின் சிறப்புகளைப் பாடும் கவிதைகளுள் உங்களுக்குப் பிடித்தவற்றை வகுப்பறையில் படித்துக்காட்டுக.**

**<u>எங்கள் தமிழ்</u>**

தென் பொதிகை பிறந்த மொழி!
தென்பாண்டி வளர்த்த மொழி!
தேனினும் இனிய மொழி!
தெவிட்டாத செந்தமிழ் மொழி!
அமிழ்தினும் இனிய மொழி!
ஆண்டாண்டுகளாய் வாழும் மொழி!
அன்னை மடியை விஞ்சும் மொழி!
அணைத்து என்னை மகிழும் மொழி!
என் உயிரினும் மேலான தமிழ் மொழி!

# உரைநடை : தமிழ்ச்சொல் வளம் - தேவநேயப் பாவாணர்

1. **பின்வரும் நிலவகைகளின் பெயர்களுக்கான காரணங்களைக் கேட்டறிந்து வகுப்பறையில் பகிர்க.**

* தரிசு - பயிர் செய்யப்படாத நிலம், நீரில்லா வறண்ட நிலம்
* சிவல் - செம்மண் நிலம்
* கரிசல் - கருமண் நிலம்
* முரம்பு - மேட்டு நிலம், உடைப்பதற்குக் கடினமான நிலம், கல்லுள்ள மேட்டுநிலம்
* புறம்போக்கு - பயன்படாத அரசுக்கு சொந்தமான நிலம்
* சுவல் - மேடான நிலம்
* அவல் - விளைநிலம், பள்ளமான நிலப்பகுதி



Waytosuccess

**2. ஒருபொருள் தரும் பல சொற்களைப் பட்டியலிடுக.**

**எ.கா. சொல்லுதல் - பேசுதல், விளம்புதல், செப்புதல், உரைத்தல், கூறல், இயம்பல், மொழிதல்...**

- மிகுதி - சால, தவ, நனி, கூர், கழி
- சூரியன் - ஞாயிறு, கதிரவன், பரிதி, பகலவன், வெய்யோன்
- குழந்தை - பிள்ளை, குழவி, மகவு, சேய்
- செய்யுள் - பா, கவிதை, யாப்பு
- உலகம் - புவனம், புவி, தரணி, நானிலம், பார், வையம்

# விரிவானம் : உரைநடையின் அணிநலன்கள்

*- எழில்முதல்வன்*

**1. நீங்கள் படித்தவற்றுள் நினைவில் நீங்கா இடம்பெற்ற இலக்கியத் தொடர்கள், நயங்களை எழுதுக.**

| வ.எண் | இலக்கியத் தொடர் | இடம்பெற்றுள்ள நயம் |
|---|---|---|
| 1. | உள்ளங்கை நெல்லிக்கனி போல | உவமை |
| 2. | விழிக்கயல் | உருவகம் |
| 3. | மரமது மரத்தில் ஏறி<br>மரமதைத் தோளில் வைத்து | எதுகை, மோனை |
| 4. | இலவு காத்த கிளி போல | உவமை |
| 5. | கரகமலம் குவித்தாள் | உருவகம் |
| 6. | உந்தி உணர்வெழுப்பு | மோனை |

**2. கொடுத்த தலைப்பில் பேசுவோம்.**

**தலைப்பு** : நேரம் **தவிர்க்க வேண்டிய சொல்** : கடிகாரம்

**குறிப்பு** : ஒரு நிமிடம் பேச வேண்டும். தமிழ்ச்சொற்களை மட்டும் பயன்படுத்த வேண்டும். ஐந்து வினாடிகளுக்குமேல் இடைவெளி இருத்தல் கூடாது.

- அனைவருக்கும், வணக்கம்!
- நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்துபவன் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவான். நேரத்தை வீணாக்கியவன் வாழ்க்கையை வீணாக்கியவன் ஆவான்.
- நேரத்தின் அருமை நமக்குத் தெரிய வேண்டுமானால் ஒலிம்பிக் போட்டிகளில் வெள்ளிப் பதக்கம் வென்றவரிடம் கேட்க வேண்டும். தங்கப்பதக்கம் வென்றவருக்கும், வெள்ளிப் பதக்கம் வென்றவருக்கும் இடையில் ஒரு கணப்பொழுதுதான் வித்தியாசம்இருக்கும். ஒரு கணப்பொழுது என்பது ஒரு வினாடியில் நூறில் ஒரு பங்கு. காலத்தின் அருமை அப்போதுதான் தெரியும்.
- நேரத்தை சரியாக பயன்படுத்துவதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன தெரியுமா? வேலைகளை அவசரமாக மற்றும் மெதுவாகச் செய்ய வேண்டியவை என வகைப்படுத்தி, செய்ய வேண்டும்.
- நேரத்தைச் சரியாகப் பயன்படுத்துகிறவனே, வாழ்க்கையில் வெற்றிக்கனியைச் சுவைப்பான். நன்றி!

waytosuccess

# இலக்கணம் : எழுத்து, சொல்

**1. தேன், நூல், பை, மலர், வா - இத்தனிமொழிகளுடன் சொற்களைச் சேர்த்துத் தொடர்மொழிகளாக்குக.**

| | |
|---|---|
| **தேன்** | **தேன்** எடுத்தான். |
| **நூல்** | **நூல்** படித்தான். |
| **பை** | **பை**யைத் திறந்தான். |
| **மலர்** | **மலர்** சூட்டினாள். |
| **வா** | கண்ணா **வா.** |

**2. வினை அடியை விகுதிகளுடன் இணைத்துத் தொழிற்பெயர்களை உருவாக்குக.**

*(காண், சிரி, படி, தடு)*

| வினையடி | தொழிற்பெயர் |
|---|---|
| காண் | காட்சி, காணுதல், காணல், காணாமை |
| சிரி | சிரிப்பு, சிரித்தல், சிரிக்காமை |
| படி | படிப்பு, படித்தல், படிக்காமை |
| தடு | தடுப்பு, தடுத்தல், தடுக்காமை |

**3. தனிமொழி, தொடர்மொழி ஆகியவற்றைக் கொண்டு உரையாடலைத் தொடர்க.**

***அண்ணன்*** : எங்கே செல்கிறாய்? (தொடர்மொழி)
**தம்பி** : **கடைக்கு** (தனிமொழி)
***அண்ணன்*** : **என்ன பொருள்** வாங்குகிறாய்? (தொடர்மொழி)
**தம்பி** : **மட்டைப்பந்து வாங்கப் போகிறேன்.** (தொடர்மொழி)
***அண்ணன்*** : **எதற்கு?** (தனிமொழி)
**தம்பி** : **நண்பர்களுடன் விளையாடுவதற்காக வாங்குகிறேன்.** (தொடர்மொழி)
***அண்ணன்*** : **நானும் உன்னுடன் வரலாமா?** (தொடர்மொழி)
**தம்பி** : **வா** (தனிமொழி)

**4. 'மலை என்னை அடிக்கடி அழைக்கும், மலைமீது ஏறுவேன்; ஓரிடத்தில் அமர்வேன்; மேலும் கீழும் பார்ப்பேன்; சுற்றுமுற்றும் பார்ப்பேன்; மனம் அமைதி எய்தும்.' இத்தொடர்களில் உள்ள வினைமுற்றுகளைத் தனியே எடுத்தெழுதித் தொழிற்பெயர்களாக மாற்றுக.**

| வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|
| அழைக்கும் | அழைத்தல் |
| ஏறுவேன் | ஏறுதல் |
| அமர்வேன் | அமர்தல் |
| பார்ப்பேன் | பார்த்தல் |
| எய்தும் | எய்தல் |

**5. கட்டு, சொட்டு, வழிபாடு, கேடு, பாடுதல் - இத்தொழிற்பெயர்களை வகைப்படுத்துக.**

| தொழிற்பெயர்கள் | வகைகள் |
|---|---|
| கட்டு | முதனிலைத் தொழிற்பெயர் |
| சொட்டு | முதனிலைத் தொழிற்பெயர் |
| வழிபாடு | விகுதிபெற்ற தொழிற்பெயர் |
| கேடு | முதனிலைத்திரிந்த தொழிற்பெயர் |
| பாடுதல் | விகுதி பெற்ற தொழிற்பெயர் |

**தொழிற்பெயர் விகுதிகள்**

தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆணை, மை, து, ஆல்.



Way to success

# கூடுதல் வினாக்கள்

## செய்யுள் : அ) அன்னை மொழியே

- பாவலரேறு பெருஞ்சித்திரனார்

### பலவுள் தெரிக

1. பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் மற்றும் சிறப்புப்பெயர் _______, _______ ஆகும்.
   அ) துரைசாமி, கவியரசர் ஆ) இளங்குமரனார், பண்டிதமணி
   இ) க. சச்சிதானந்தன், கவிமணி **ஈ) துரை. மாணிக்கம், பாவலரேறு**
2. **கூற்று** : பெருஞ்சித்திரனார் தென்மொழி, தமிழ்ச்சிட்டு போன்ற இதழ்களை நடத்தினார்.
   **காரணம்** : பெருஞ்சித்திரனார் இவ்விரு இதழ்களின் வாயிலாகத் தமிழுணர்வை உலகெங்கும் பரப்பினார்.
   ***அ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கமாகும்.***
   ஆ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. காரணம் கூற்றின் சரியான விளக்கமல்ல.
   இ) கூற்று மட்டும் சரி காரணம் தவறு. ஈ) கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.
3. பேரரசே, பேரரசு - இலக்கணக்குறிப்பு தருக.
   அ) உம்மைத்தொகை, எண்ணும்மை ஆ) பண்புத்தொகை, வினைத்தொகை
   இ) பண்புத்தொகை, விளித்தொடர் ***ஈ) விளித்தொடர், பண்புத்தொகை***
4. தமிழின் கருவூலமாக அமைந்துள்ள நூல்
   ***அ) திருக்குறள் மெய்ப்பொருளுரை*** ஆ) திருக்குறள் பொருளுரை
   இ) திருக்குறள் தெளிவுரை ஈ) திருக்குறள் விரிவுரை
5. தென்னன் எனக்குறிப்பிடப்படுபவர் யார்?
   அ) சோழன் ஆ) சேரன் ***இ) பாண்டியன்*** ஈ) களப்பிரர்
6. <u>மன்னி</u> அரசிருந்த மண்ணுலகப் பேரரசே – அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?
   ***அ) நிலைத்த*** ஆ) செம்மையான இ) நிறைந்த ஈ) செழுமையான

### குறுவினாக்கள்

**1. தமிழ் நிலையாக இருந்து அரசாண்ட இடமாகப் பெருஞ்சித்திரனார் கூறுவது யாது?**

கடல்கொண்ட குமரிக்கண்டத்தில், தமிழ் நிலைத்து அரசாண்டதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகிறார்.

**2. பெருஞ்சித்திரனாரின் மனத்தில் பற்றுணர்வை எழுப்புவது யாது?**

தமிழின் நீண்ட நிலைத்த தன்மையும், வேற்று மொழியார் தமிழைப்பற்றிக் கூறிய புகழுரைகளும் பெருஞ்சித்திரனார் மனத்தில் பற்றுணர்வை எழுப்புகின்றன.

**3. தமிழின் பெருமை எதனைப் போன்று முழங்குவதாகப் பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்?**

வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று, நாங்கள் தமிழாகிய உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்று பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்.

**4. எட்டுத்தொகை நூல்கள் யாவை?**

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு

**5. பாவலரேறு பெருஞ்சித்திரனார் படைத்த நூல்களுள் எவையேனும் இரண்டின் பெயர்களை எழுதுக.**

- உலகியல் நூறு
- பாவியக்கொத்து
- நூறாசிரியம்
- கனிச்சாறு
- எண்சுவை எண்பது
- மகபுகு வஞ்சி
- பள்ளிப் பறவைகள்

## சிறுவினாக்கள்

**1. பெருஞ்சித்திரனார் எந்தெந்த நூல்களை மேற்கோள் காட்டி தமிழை வாழ்த்துகிறார்?**

- திருக்குறள் - திருக்குறளின் மாண்புகழே!
- பத்துப்பாட்டு - இன்னறும் பாப்பத்தே!
- எட்டுத்தொகை - எண்தொகையே!
- பதினெண்கீழ்க்கணக்கு - நற்கணக்கே!
- சிலப்பதிகாரம் - மன்னுஞ் சிலம்பே!
- மணிமேகலை - மணிமேகலை வடிவே!

## நெடுவினாக்கள்

**1. 'அன்னை மொழியே' என்னும் பாடலின் வழியாக பெருஞ்சித்திரனார் எடுத்துரைக்கும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.**

**அ) தமிழன்னையின் பெருமைகள் :**

தமிழன்னை அறிவைப் பெருக்குபவள்; அன்பை தன்வசப்படுத்துபவள்; சொல்லுவதற்கு அரிய பெருமைகளைப் பெற்றவள். அவற்றை **'அன்னை மொழியே'** பாடலின் வழியாக பெருஞ்சித்தரனார் எடுத்துரைப்பதை காணலாம்.

**ஆ) மண்ணுலகப் பேரரசு தமிழ் :**

*அன்னை மொழியே! அழகார்ந்த செந்தமிழே!*
*முன்னைக்கும் முன்னை முகிழ்த்த நறுங்கனியே!*

தமிழானது தாய்மொழியாகவும், பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனியாகவும் உள்ளது.

*கன்னிக் குமரிக் கடல்கொண்ட நாட்டிடையில்*
*மன்னி அரசிருந்த மண்ணுலகப் பேரரசே!*

கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசாகவும் தமிழ்மொழி திகழ்கிறது.

**இ) நிலைத்த இலக்கியங்களின் வடிவம் தமிழ் :**

**தென்னன் மகளே! திருக்குறளின் மாண்புகழே!**
**இன்னறும் பாப்பத்தே! எண்தொகையே! நற்கணக்கே!**
**மன்னுஞ் சிலம்பே! மணிமே கலைவடிவே!**

தமிழ்மொழியானது, பாண்டிய மன்னனின் மகளாகவும், திருக்குறளின் பெருமைக்கு உரியதாகவும், பத்துப்பாட்டாகவும் எட்டுத்தொகையாகவும் விளங்குகிறது. மேலும் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகவும், ஐம்பெருங்காப்பியங்களாகவும் நிலைப்பெற்ற இலக்கியங்களின் வடிவமாக விளங்குகிறது.

**ஈ) வேற்றுமொழியார் புகழ்ந்துரைக்கும் மொழி தமிழ் :**

**விந்தை நெடுநிலைப்பும் வேறார் புகழுரையும்**

தமிழின் நீண்ட நிலைத்த தன்மையும், வேற்று மொழியார் தமிழைப்பற்றிக் கூறிய புகழுரைகளும் மொழியின் சிறப்பை எடுத்துரைக்கின்றன.

**உ) உள்ளத்தில் கனல்மூளச்செய்யும் மொழி :**

**உந்தி உணர்வெழுப்ப உள்ளக் கனல்மூளச்**
**செந்தா மரைத்தேனைக் குடித்துச் சிறகார்ந்த**

வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று, நாங்கள் தமிழாகிய உன்னைச் சுவைத்து உள்ளத்தில் கனல் மூள, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்று பெருஞ்சித்திரனார் கூறுகின்றார்.



Way to success

# உரைநடை : தமிழ்ச்சொல் வளம்

## - தேவநேயப் பாவாணர்

## பலவுள் தெரிக

1. தூறு என்பது எவற்றின் அடிப்பகுதியைக் குறிக்கின்றது?
அ) நெல், கேழ்வரகு ஆ) கீரை, வாழை இ) கம்பு, சோளம் **ஈ) குத்துச்செடி, புதர்**

2. அடி மரத்தினின்று பிரியும் மாபெரும் கிளையின் பிரிவுக்கு வழங்கும் சொல் _______.
**அ) கவை** ஆ) கிளை இ) போத்து ஈ) இணுக்கு

3. காய்ந்த கொம்பும் கவையும் அடியும் தாவரத்தின் எப்பகுதிக்கு வழங்கும் சொல்லாகும்?
அ) கள்ளி ஆ) விறகு இ) வெங்கழி **ஈ) கட்டை**

4. ___________ என்பது வாழைத்தாற்றின் பகுதி.
அ) கொத்து **ஆ) சீப்பு** இ) குலை ஈ) கதிர்

5. நெல், புல் முதலியவற்றின் நுனிப்பகுதியை _________ என்பர்.
அ) முறி (அ) கொழுந்து ஆ) குருத்து
இ) கொழுந்தாடை **ஈ) துளிர் அல்லது தளிர்**

6. **கூற்று 1** : பூவின் நிலையை அரும்பு, போது, மலர், வீ, செம்மல் என்று குறிப்பர்.
**கூற்று 2** : செம்மல் என்பது மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலையைக் குறிக்கும்.
அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1 தவறு, 2 சரி இ) கூற்று 1, 2 தவறு **ஈ) கூற்று 1 சரி, 2 தவறு**

| **சரியான கூற்று :** செம்மல் என்பது பூ வாடின நிலை. |
|---|

7. திருவள்ளுவர் தவச்சாலை அமைந்துள்ள இடம் _______.
**அ) அல்லூர்** ஆ) திருவள்ளூர் இ) கல்லூர் ஈ) நெல்லூர்

8. ஒரு நாட்டின் வளத்திற்குத் தக்கபடியே, அந்நாட்டு மக்களின் ____________ அமைந்திருக்கும்.
அ) கற்பொழுக்கம் **ஆ) அறிவொழுக்கம்** இ) அன்பொழுக்கம் ஈ) களவொழுக்கம்

9. உலகத் தமிழ்க் கழகத்தை நிறுவித் தலைவராகவும், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராகவும் இருந்தவர் ________ ஆவார்.
**அ) தேவநேயப் பாவாணர்** ஆ) இளங்குமரனார் இ) மு. வரதராசனார் ஈ) திரு.வி.க

10. சம்பா நெல்லின் உள் வகைகள் _______.
அ) 70 ஆ) 50 இ) 80 **ஈ) 60**

11. திராவிட மொழிகளின் ஒப்பியல் இலக்கணம் என்ற நூலினை எழுதியவர் _______.
அ) பாவாணர் ஆ) திரு.வி.க **இ) கால்டுவெல்** ஈ) இளங்குமரனார்

12. இளங்குமரனார் யாரிடம் இருந்து இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டார்?
அ) கால்டுவெல் **ஆ) திரு.வி.க** இ) இளங்குமரனார் ஈ) பாவாணர்

13. பாவாணர் நூலகத்தை உருவாக்கியவர் _______.
**அ) இளங்குமரனார்** ஆ) திரு.வி.க இ) கால்டுவெல் ஈ) பாவாணர்

14. தாவரங்களின் அடி வகைகளைக் குறிக்கும் சொற்களுள் சரியானவற்றைத் தேர்ந்தெடு
அ) தாள், தளிர், குருத்து, தோகை ஆ) தண்டு, கோல், வெங்கழி, சண்டு
இ) கவை, கோல், முறி, தாள் **ஈ) தாள், தண்டு, கோல், தூறு, கழி**

15. 'பன்மொழிப் புலவர்' என்றழைக்கப்பட்டவர் _______.
அ) இளங்குமரனார் **ஆ) க.அப்பாத்துரையார்** இ) கால்டுவெல் ஈ) பாவாணர்

16. இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறிய மொழி _______.
அ) தெலுங்கு ஆ) இந்தி இ) கன்னடம் **ஈ) தமிழ்**

17. போர்ச்சுக்கீசிய தலைநகர் லிசுபனில் _______ என்னும் நூல் தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
**அ) கார்டிலா** ஆ) அகரமுதலி இ) திருக்குறள் ஈ) புறநானூறு

18. ஒரு நாட்டார் அல்லது இனத்தாரின் நாகரிகத்தை அளந்தறிவதற்குச் சிறந்த வழி _______.
அ) கலாச்சாரம் ஆ) அறிவு **இ) மொழி** ஈ) செல்வம்

## குறுவினாக்கள்

**1. தாவரத்தின் இலை வகைகளைக் குறிக்கும் சொற்களை எழுதுக.**

* இலை - புளி, வேம்பு முதலியவற்றின் இலை
* தாள் - நெல், புல் முதலியவற்றின் இலை
* தோகை - சோளம், கரும்பு முதலியவற்றின் இலை
* ஓலை - தென்னை, பனை முதலியவற்றின் இலை
* சண்டு - காய்ந்த தாளும் தோகையும்
* சருகு - காய்ந்த இலை

**2. தாவரத்தின் நுனிப்பகுதிகளைக் குறிக்கும் சொற்கள் யாவை?**

* துளிர் அல்லது தளிர் - நெல், புல் முதலியவற்றின் கொழுந்து
* முறி அல்லது கொழுந்து - புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து
* குருத்து - சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
* கொழுந்தாடை - கரும்பின் நுனிப்பகுதி

**3. பிஞ்சு வகைகளைக் குறிக்கும் சொற்கள் நான்கினை எழுதுக.**

* பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு
* பிஞ்சு - இளம் காய்
* வடு - மாம்பிஞ்சு
* கச்சல்- வாழைப்பிஞ்சு
* மூசு - பலாப்பிஞ்சு
* கவ்வை - எள் பிஞ்சு
* நுழாய் - இளம்பாக்கு
* கருக்கல் - இளநெல்

**4. தாவரங்களின் அடியிலிருந்து பிரியும் பிரிவுகளைக் குறிக்கும் சொற்கள் நான்கினை எழுதுக.**

* கவை - அடிமரத்தினின்று பிரியும் மாபெரும் கிளை
* சினை - கிளையின் பிரிவு
* கொம்பு அல்லது கொப்பு - கவையின் பிரிவு
* போத்து - சினையின் பிரிவு
* கிளை - கொம்பின் பிரிவு
* குச்சு - போத்தின் பிரிவு
* இணுக்கு - குச்சியின் பிரிவு

**5. காய்ந்த தாவரத்தின் பகுதிகளுக்கு வழங்கும் சொற்கள் யாவை?**

* சுள்ளி - காய்ந்த குச்சு (குச்சி)
* விறகு - காய்ந்த சிறுகிளை
* வெங்கழி - காய்ந்த கழி
* கட்டை - காய்ந்த கொம்பும் கவையும் அடியும்

**6. கோதுமையின் வகைகளை எழுதுக.**

* சம்பாக் கோதுமை
* குண்டுக் கோதுமை
* வாற்கோதுமை

**7. தமிழ்நாட்டில் விளையும் நெல்லின் வகைகளை எழுதுக.**

* செந்நெல்
* வெண்ணெல்
* கார்நெல்
* சம்பா
* மட்டை
* கார்

**8. சம்பாவின் வகைகளை எழுதுக.**

* ஆவிரம்பூச்சம்பா
* ஆனைக்கொம்பன் சம்பா
* குண்டுச்சம்பா
* குதிரைவாலிச்சம்பா
* சிறுமணிச்சம்பா
* சீரகச்சம்பா முதலிய

அறுபது உள்வகைகள் உள்ளன.

**9. உலகத்தமிழ் மாநாடு குறித்து க. அப்பாத்துரையார் கூறுவன யாவை?**

* "உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல்நாடு மலேசியா.
* அம்மாநாட்டுக்குரிய முதல் மொழியும் தமிழே!" என்று பன்மொழிப் புலவர் க.அப்பாத்துரையார் கூறுகின்றார்.

Way to success

## சிறுவினாக்கள்

**1. பழங்களின் மேற்பகுதியினைக் குறிக்க வழங்கும் சொற்களை எழுதுக.**

* **தொலி** - மிக மெல்லியது
* **தோல்** - திண்ணமானது
* **தோடு** - வன்மையானது
* **ஓடு** - மிக வன்மையானது
* **குடுக்கை** - சுரையின் ஓடு
* **மட்டை** - தேங்காய் நெற்றின் மேற்பகுதி
* **உமி** - நெல், கம்பு முதலியவற்றின் மூடி
* **கொம்மை** - வரகு, கேழ்வரகு முதலியவற்றின் உமி

**2. கெட்டுப்போன காய்க்கும் கனிக்கும் தாவரத்திற்கேற்ப வழங்கும் சொற்களை எழுதுக.**

* **சூம்பல்** - நுனியில் சுருங்கிய காய்
* **சிவியல்** - சுருங்கிய பழம்
* **வெம்பல்** - சூட்டினால் பழுத்த பிஞ்சு
* **அளியல்** - குளுகுளுத்த பழம்
* **சொண்டு** - பதராய்ப் போன மிளகாய்
* **அழுகல்** - குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
* **தேரைக்காய்** - தேரை அமர்ந்ததினால் கெட்டகாய்
* **அல்லிக்காய்** - தேரை அமர்ந்ததினால் கெட்ட தேங்காய்
* **ஒல்லிக்காய்** - தென்னையில் கெட்டகாய்.
* **சொத்தை** - புழு பூச்சி அரித்த காய் அல்லது கனி
* **கோட்டான்காய் அல்லது கூகைக்காய்** - கோட்டான் உட்கார்ந்ததினால் கெட்ட காய்

**3. தானியங்களுக்குத் (மணிவகை) தமிழில் வழங்கும் சொற்களைப் பட்டியலிடுக.**

| | |
|---|---|
| ✱ **தேங்காய்** - தென்னையின் வித்து | ✱ **கூலம்** - நெல், புல் (கம்பு) முதலிய தானியங்கள் |
| ✱ **கொட்டை** - மா, பனை முதலியவற்றின் வித்து | ✱ **கடலை** - வேர்க்கடலை, கொண்டைக்கடலை |
| ✱ **முதிரை** - அவரை, துவரை முதலிய பயறுகள் | ✱ **விதை** - கத்தரி, மிளகாய் முதலியவற்றின் வித்து |
| ✱ **பயறு** - அவரை, உளுந்து முதலியவை | ✱ **காழ்** - புளி, காஞ்சிரை (நச்சு மரம்) முதலிய வித்து |
| ✱ **முத்து** - வேம்பு, ஆமணக்கு முதலிய வித்து | |

**4. தாவரங்களின் குலை வகைகளைக் குறிப்பதற்கான சொற்களை எழுதுக.**

* **கொத்து** - அவரை, துவரை முதலியவற்றின் குலை
* **கதிர்** - கேழ்வரகு, சோளம் முதலியவற்றின் கதிர்
* **அலகு அல்லது குரல்** - நெல், தினை முதலியவற்றின் கதிர்
* **தாறு** - வாழைக் குலை
* **சீப்பு** - வாழைத்தாற்றின் பகுதி
* **குலை**-கொடி, முந்திரி போன்றவற்றின் குலை

**5. இரா.இளங்குமரனாரின் தமிழ்ப்பணியை தரம் உயர்த்திய நல்முத்துகள் யாவை? (அல்லது) இரா.இளங்குமரனாரின் படைப்புகள் யாவை?**

* இலக்கண வரலாறு
* யாப்பருங்கலம் உரை
* தமிழிசை இயக்கம்
* தேவநேயம்
* பாவாணர் வரலாறு
* காக்கைப் பாடினிய உரை
* திருக்குறள் தமிழ் மரபுரை
* புறத்திரட்டு உரை
* தனித்தமிழ் இயக்கம்
* குண்டலகேசி உரை

**6. இரா.இளங்குமரனார் பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.**

* இரா. இளங்குமரனார் ஒரு தமிழாசிரியர்; நூலாக்கப் பணிகளை விரும்பிச் செய்தவர்.
* சொல்லாராய்ச்சியில் பாவாணரும் வியந்த பெருமகனார்;"பாவாணர் நூலகத்தை" உருவாக்கியவர்.
* திருச்சிராப்பள்ளிக்கு அருகில் அல்லூரில் "திருவள்ளுவர் தவச்சாலை" ஒன்றை அமைத்தவர்.
* தமிழகம் முழுவதும் திருக்குறள் சொற்பொழிவுகளை வழங்கியவர்; தமிழ்வழித் திருமணங்களை நடத்தியவர்.
* விழிகளை இழக்க நேரிட்டால் கூட தாய்த்தமிழினை இழந்துவிடக்கூடாது என்று எண்ணியவர்.
* தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர்.

**7. கடல்கடந்து முதலில் அச்சேறிய தமிழ் நூலைப் பற்றி எழுதுக.**

* இந்திய மொழிகளிலேயே மேலைநாட்டு எழுத்துருவில் முதலில் அச்சேறியது தமிழ்தான்.
* போர்ச்சுகீசு நாட்டின் தலைநகர் லிசுபனில் 1554ல் கார்டிலா என்னும் நூல் முதன் முதலாக தமிழ்மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது.
* இது ரோமன் வரிவடிவில் அச்சிடப்பட்டுள்ளது.
* ரோமன் எழுத்துருவில் வெளிவந்த இதன் முழுப்பெயர் **'Carthila de linguoa Tamul e Portugues'**.
* இது அன்றே இரு வண்ணங்களில் (கறுப்பு, சிவப்பு) மாறிமாறி நேர்த்தியாக அச்சிடப்பட்டுள்ளது.

## நெடுவினாக்கள்

**1. தமிழ்மொழி சொல் வளமுடையதென்றும் தமிழ்நாடு பொருள் வளமுடையதென்றும் தெளிவாக விளங்குவதற்கான காரணங்கள் சிலவற்றைத் தொகுத்தெழுதுக.**

**முன்னுரை**

தமிழ்மொழி சொல் வளமுடையது, தமிழ்நாடு பொருள் வளமுடையது என்பதைப் பாவாணர், சொல்லாய்வுக் கட்டுரைகள் என்ற நூலில், 'தமிழ்ச் சொல்வளம்' என்னும் கட்டுரையில் எடுத்துரைக்கிறார்.

**தமிழ் மொழியின் சொல்வளம் :**

- ✓ சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவாக இருந்தாலும், தமிழ்மட்டும் அதில் தலைசிறந்ததாகும்.
- ✓ உதாரணமாக, ஆங்கில மொழியிலும் நூலிலும் இலையைக் குறிக்க leaf என்ற ஒரே சொல் மட்டுமே உள்ளது. ஆனால் தமிழிலோ இலையின் வன்மை மென்மையைப் பொறுத்து தாள், இலை, தோகை, ஓலை எனப் பாகுபாடு செய்துள்ளனர்.

➢ **தாவரங்களின் அடிவகை :**

- ✱ தாள் - நெல், கேழ்வரகு முதலியவற்றின் அடி
- ✱ தண்டு - கீரை, வாழை முதலியவற்றின் அடி
- ✱ கோல் - நெட்டி, மிளகாய்ச்செடி ஆகியவற்றின் அடி
- ✱ தூறு - குத்துச்செடி, புதர் முதலியவற்றின் அடி
- ✱ தட்டு (அ) தட்டை - கம்பு, சோளம் ஆகியவற்றின் அடி
- ✱ கழி - கரும்பின் அடி

➢ **இலை வகை :**

- ✱ இலை - புளி, வேம்பு முதலியவற்றின் இலை
- ✱ தாள் - நெல், புல் முதலியவற்றின் இலை
- ✱ தோகை - சோளம், கரும்பு ஆகியவற்றின் இலை
- ✱ ஓலை - தென்னை, பனை ஆகியவற்றின் இலை
- ✱ சண்டு - காய்ந்த தாளும் தோகையும்
- ✱ சருகு - காய்ந்த இலை

➢ **கொழுந்து வகை :**

- ✱ துளிர் அல்லது தளிர் : நெல், புல் முதலியவற்றின் கொழுந்து
- ✱ முறி அல்லது கொழுந்து : புளி, வேம்பு முதலியவற்றின் கொழுந்து
- ✱ குருத்து : சோளம், கரும்பு, தென்னை, பனை முதலியவற்றின் கொழுந்து
- ✱ கொழுந்தாடை : கரும்பின் நுனிப்பகுதி

➢ **பூவின் நிலைகள் :**

- ✱ அரும்பு - பூவின் தோற்ற நிலை
- ✱ போது - பூ விரியத் தொடங்கும் நிலை
- ✱ மலர் (அலர்) - பூவின் மலர்ந்த நிலை
- ✱ வீ - மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை

➢ **பிஞ்சு வகை :**

- ✱ பூம்பிஞ்சு - பூவோடு கூடிய இளம்பிஞ்சு
- ✱ பிஞ்சு - இளம் காய்
- ✱ வடு - மாம்பிஞ்சு
- ✱ கச்சல்- வாழைப்பிஞ்சு
- ✱ மூசு - பலாப்பிஞ்சு
- ✱ கவ்வை - எள் பிஞ்சு
- ✱ நுழாய் - இளம்பாக்கு
- ✱ கருக்கல் - இளநெல்

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளின் மூலம் தமிழ்மொழி சொல் வளமுடையதென்று புலப்படுகிறது.

**தமிழ்நாட்டின் பொருள்வளம் :**

- ✓ தமிழ்நாடு பொருள் வளமுடையதென்பது, அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.
- ✓ பிறநாடுகளை ஒப்பிடும் போது தமிழ்நாட்டிலுள்ள கூலங்கள் பல வகைப்பட்டவையாக உள்ளன.
- ✓ உதாரணமாக, கோதுமையில் சம்பாக்கோதுமை, குண்டுக்கோதுமை, வாற்கோதுமை போன்ற சில வகைகளே உண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல், சம்பா, மட்டை என பல வகைகளுண்டு. சம்பாவில் மட்டும் சீரகச்சம்பா, சிறுமணிச்சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. மேலும் வரகு, குதிரைவாலி முதலிய சிறுகூலங்கள் தமிழ்நாட்டில் குறிப்பாக தென்னாட்டில் மட்டுமே விளைகின்றன.
- ✓ மேற்கண்ட எடுத்துக்காட்டிலிருந்து தமிழ்நாடு பொருள் வளமுடையதென்று விளங்குகிறது.

**முடிவுரை**

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்' என்பதற்கிணங்க தமிழானது சொல்வளத்தையும் தமிழ்நாடானது பொருள் வளத்தையும் பெற்றுள்ளது என்பது தெளிவாக விளங்குகின்றது.

# செய்யுள் : ஆ) இரட்டுற மொழிதல்

- சந்தக்கவிமணி தமிழழகனார்

## பலவுள் தெரிக

1. ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது ________அணியாகும்.
   அ) வஞ்சப் புகழ்ச்சி ஆ) இயல்பு நவிற்சி ***இ) சிலேடை அணி*** ஈ) நிரல்நிறை
2. சந்தக்கவிமணி எனக் குறிப்பிடப்படுவர் _________.
   அ) இளவழகனார் ஆ) இளங்குமரனார் இ) பாரதியார் ***ஈ) தமிழழகனார்***
3. தமிழழகனாரின் இயற்பெயர் _________.
   ***அ) சண்முகசுந்தரம்*** ஆ) சந்தக்கவிமணி இ) இளங்குமரன் ஈ) கண்ணதாசன்
4. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 1. ஆழி | - | i) அணிகலன்கள் |
| 2. தமிழழகனார் | - | ii) இரட்டுறமொழிதல் |
| 3. ஐம்பெருங்காப்பியங்கள் | - | iii) கடல் |
| 4. இருபொருள் | - | iv) சந்தக்கவிமணி |

தெரிவுகள்

| | | | |
|---|---|---|---|
| **அ) 1-iii** | **2-iv** | **3-i** | **4-ii** |
| ஆ) 1-iii | 2-iv | 3-ii | 4-i |
| இ) 1-ii | 2-iv | 3-i | 4-iii |
| ஈ) 1-iv | 2-i | 3-iii | 4-ii |

5. தமிழழகனார் படைத்த சிற்றிலக்கிய நூல்களின் எண்ணிக்கை _________.
   ***அ) 12*** ஆ) 10 இ) 14 ஈ) 8

## குறுவினாக்கள்

**1. தமிழ் எவ்வாறு வளர்க்கப்பட்டது? யாரால் காக்கப்பட்டது?**

தமிழ் முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. சங்கப்பலகையில் அமர்ந்திருந்த சங்கப்புலவர்களால் காக்கப்பட்டது.

**2. கடலில் கிடைக்கும் மூன்று வகையான சங்குகள் பெயர்களைத் தருக.**

✷ வெண்சங்கு ✷ சலஞ்சலம் ✷ பாஞ்சசன்யம்

## சிறுவினாக்கள்

**1. இரட்டுற மொழிதல் அணி (சிலேடை அணி) - சான்றுடன் விளக்குக.**

<table>
<tr><td>அணி இலக்கியம்</td><td colspan="2">ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது இரட்டுற மொழிதல் அணி எனப்படும். இதனைச் சிலேடை அணி என்றும் அழைப்பர்.</td></tr>
<tr><td>சான்று</td><td colspan="2">முத்தமிழ் துய்ப்பதால் முச்சங்கம் கண்டதால்…..…<br>………கிடந்தே தேதமிழ் ஈண்டு.</td></tr>
<tr><td rowspan="2">அணி விளக்கம்</td><td>தமிழ்</td><td>கடல்</td></tr>
<tr><td>✷ தமிழ் இயல், இசை, நாடகமென முத்தமிழாய் வளர்ந்தது.<br>✷ முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது.<br>✷ ஐம்பெருங்காப்பியங்களை அணிகலன்களாகப் பெற்றது.<br>✷ சங்கப் பலகையில் அமர்ந்திருந்த சங்கப் புலவர்களால் காக்கப்பட்டது.</td><td>✷ கடல் முத்தினையும், அமிழ்தினையும் தருகிறது.<br>✷ வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது.<br>✷ மிகுதியான வணிகக் கப்பல்கள் செல்லும்படி இருக்கிறது.<br>✷ கடல் தன் அலையில் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காக்கிறது.</td></tr>
<tr><td colspan="3">இச்செய்யுள் இருபொருள்பட நின்று தமிழையும் கடலையும் ஒன்றாகக் கூறுவதால், இஃது இரட்டுற மொழிதல் அணியாகும்.</td></tr>
</table>

waytosuccess

# விரிவானம் : உரைநடையின் அணிநலன்கள்

- எழில்முதல்வன்

## நெடுவினாக்கள்

1. **'உரைநடையின் அணிநலன்கள்' என்ற துணைப்பாடப்பகுதியின் வாயிலாக இலக்கியம் மற்றும் உரைநடை ஆகியவற்றின் சிறப்புகளை கட்டுரை வடிவில் எழுதுக.**

**முன்னுரை**

நம் இலக்கியங்களின் வரிசையில் முதலில் சங்கப்பாடல்களும், அதனைத் தொடர்ந்து அறஇலக்கியம், காப்பியம், சிற்றிலக்கியம், சந்தக் கவிதைகள், புதுக்கவிதைகள் என்ற நவீன வடிவங்களில் வளர்ந்து வருகின்றன. அதே போல உரைநடை, சிறுகதை, கட்டுரை, புதினம் என்றும் இலக்கியங்கள் பல வடிவங்களில் நம்மிடம் உள்ளன. அவற்றின் அணிநலன்களை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**உரைநடையின் தொன்மை :**

* கருத்துகளை எளிதில் புரியுமாறு சொல்லும் எழுத்து வடிவமே உரைநடையாகும்.
* எந்த இலக்கண மரபுகளுமின்றி பேசுவது போல எழுதுவது இதன் தனிச்சிறப்பாகும்.
* தமிழ்மொழியில் எழுதப்பெற்ற முதல் இலக்கண நூலான தொல்காப்பியத்தில், உரைநடை தொடர்பான குறிப்பு இடம்பெற்றுள்ளது. இதிலிருந்து இதன் தொன்மையை அறியலாம்.
* இருவர் பேசிக்கொண்டால் உரையாடல், அதையே எழுதினால் உரைநடை. தற்போதைய இலக்கியங்கள் பெரும்பாலும் சிறுகதை, கட்டுரை, புதினம் என்று உரைநடை வடிவில்தான் படைக்கப்படுகின்றன.

**உரைநடையின் உத்திகள் :**

**உவமை :**

* இலக்கியத்தில் உணர்ச்சிகளை வெளிப்படுத்த உவமை பயன்படுத்தப்படுகிறது.
* **எடுத்துக்காட்டு :** 'திருப்பரங்குன்றத்தின் அழகைப் பார்ப்பதற்கென்றே இயற்கை பதித்து வைத்த இரண்டு பெரிய நிலைக்கண்ணாடிகளைப் போல வடபுறமும் தென்புறமும் நீர்நிறைந்த கண்மாய்கள்' என்று குறிஞ்சிமலர் நூலில் நா. பார்த்தசாரதி உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

**உருவகம் :**

* இலக்கியங்களில் உவமையை விட உருவகமே உணர்வுகளைத் தூண்டி வெற்றிபெறுகிறது.
* இதை முன்னரே தண்டி என்பவர், 'உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து ஒன்றென மாட்டின் அஃது உருவகமாகும்' என்று எழுதியிருக்கிறார்.
* **எடுத்துக்காட்டு:** "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய்; உன் புன்னகைதான் அதற்குச் சான்று" -அண்ணா

**இணை ஒப்பு :**

* எடுத்துக்காட்டு உவமை அணியை உரைநடையில் பயன்படுத்தும் போது அதை இணை ஒப்பு என்கிறோம்.
* **எடுத்துக்காட்டு :** "ஊர் கூடிச் செக்குத் தள்ள முடியுமா? என்று கேட்கிறார்கள், ஊர் கூடின பிறகுதான் செக்குத் தள்ள வேண்டும் என்று காத்திருப்பவர்களின் காரியம் கைகூடாது. புரோகிதருக்காக அமாவாசை காத்திருப்பதில்லை" என வ. ராமசாமி 'மழையும் புயலும்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**இலக்கணை :**

* அஃறிணைப் பொருள்களை உயர்திணையாகக்கருதிக் கற்பனை செய்து எழுதுவதே இலக்கணை எனப்படும்.
* இது உயிர் இல்லாத பொருள்களை உயிர் உள்ளன போலவும், உணர்வு இல்லாத பொருள்களை உணர்வுடையன போலவும் கற்பனை செய்வதாகும்.
* "ஞாயிறு, திங்கள், நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள், சொல்லுந போலவும், கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்" என்று தொல்காப்பியர் கூறுகிறார்.
* **எடுத்துக்காட்டு :** "சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும், விருந்து வைக்கும்,...மனம் அமைதி எய்தும் – தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார்.



Way to success

**மோனையும் எதுகையும் :**

* மோனையும் எதுகையும் செய்யுளில் வரும்போது இனிய ஓசையின்பத்தை கொடுப்பது போல உரைநடையிலும் கொடுக்கும்.
* **எடுத்துக்காட்டு :** "தென்றல் அசைந்துவரும் தென்தமிழ் நாட்டில்...கொஞ்சிக் குலாவும்.- என சொல்லின் செல்வர் இரா.பி.சேதுப்பிள்ளை **'தமிழின்பம்'** என்னும் நூலில் எழுதியுள்ளார்.

**முரண்படு மெய்ம்மை :**

* படிப்பவருக்கு முரண்படுவதுபோல இருக்கும். உண்மையில் முரண்படாத மெய்ம்மையைச் சொல்வது 'முரண்படு மெய்ம்மை' ஆகும்.
* **எ.கா :** 'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்பட வேண்டும்?'

**உச்சநிலை :**

* சொல்லையோ, கருத்தையோ அடுத்தடுத்து வைக்கும் முறையிலே உள்ள சிறப்பு தான் உச்சநிலை எனப்படும்.
* **எடுத்துக்காட்டு:** "இந்தியாதான் என்னுடைய மோட்சம்,...என் கிழக்காலத்தின் காசி" என்று பாரதி என்னும் தமிழ்க்கவிஞர் நம் நாட்டை உயர்த்திக் கூறுகிறார்.

**முடிவுரை**

மேற்சொன்ன உத்திகள் அனைத்தும் இலக்கியத்திற்கான அணிநலன்கள் மட்டுமின்றி இலக்கியத்தை வாசிக்கக்கூடிய ஒவ்வொருவருக்கும் அழகுணர்வை தரக்கூடிய வகையில் இருப்பதால் இவற்றை நாம் பயன்படுத்துவோம்.

# இலக்கணம் : எழுத்து, சொல்

## பலவுள் தெரிக

1. சார்பெழுத்துகள் ________ வகைப்படும்.
   அ) 2 ஆ) 5 இ) 8 ***ஈ) 10***
2. செய்யுளிசை அளபெடையின் மற்றொரு பெயர்
   ***அ) இசைநிறை அளபெடை*** ஆ) இன்னிசை அளபெடை
   இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
3. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது ________ எனப்படும்.
   அ) தொடர் மொழி ***ஆ) தனிமொழி*** இ) பொதுமொழி ஈ) இரட்டைகிளவி
4. வினையாலணையும் பெயர் ________ காட்டும்.
   ***அ) காலம்*** ஆ) இடம் இ) குணம் ஈ) பண்பு
5. பொருத்துக.

| | | | தெரிவுகள் |
|---|---|---|---|
| 1. தனிமொழி | - | அ) எட்டு | ***அ) 1-ஆ 2-ஈ 3-அ 4-இ*** |
| 2. தொடர்மொழி | - | ஆ) கண் | ஆ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ |
| 3. பொதுமொழி | - | இ) பொறுத்தார் | இ) 1-இ 2-ஆ 3-அ 4-ஈ |
| 4. வினையாலணையும் பெயர் | - | ஈ) கண்ணன் வந்தான் | ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ |

6. வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாகும் தொழிற்பெயர் ________ ஆகும்.
   அ) எதிர்மறைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்
   ***இ) விகுதி பெற்ற தொழிற்பெயர்*** ஈ) வினையாலணையும் பெயர்
7. பொருத்துக.

| | | | தெரிவுகள் |
|---|---|---|---|
| 1. தொழிற்பெயர் | - | அ) கேடு | அ) 1-இ 2-அ 3-ஈ 4-ஆ |
| 2. எதிர்மறைத் தொழிற்பெயர் | - | ஆ) நடத்தை | ஆ) 1-ஈ 2-அ 3-ஆ 4-இ |
| 3. விகுதிபெற்ற தொழிற்பெயர் | - | இ) நடவாமை | ***இ) 1-ஈ 2-இ 3-ஆ 4-அ*** |
| 4. முதனிலைத் திரிந்த தொழிற்பெயர் | - | ஈ) நடத்தல் | ஈ) 1-அ 2-இ 3-ஆ 4-ஈ |

Way to Success

## குறுவினாக்கள்

**1. அளபெடை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?**

- அளபெடை என்பது நீண்டு ஒலித்தல் ஆகும்.
- **எ.கா.** அம்மாஅ, தம்பீஇ.
- இஃது உயிரளபெடை, ஒற்றளபெடை என இரு வகைப்படும்.

**2. உயிரளபெடையின் வகைகள் யாவை?**

உயிரளபெடை மூன்று வகைப்படும். அவை,

1. செய்யுளிசை அளபெடை / இசைநிறை அளபெடை 2. இன்னிசை அளபெடை 3. சொல்லிசை அளபெடை

**3. தொழிற்பெயர் என்றால் என்ன?**

- ஒரு வினை அல்லது செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது தொழிற்பெயர் எனப்படும்.
- **எ.கா.** *ஈதல், நடத்தல்*

**4. எதிர்மறைத் தொழிற்பெயர் என்றால் என்ன?**

- எதிர்மறைப் பொருளில் வருவது எதிர்மறைத் தொழிற்பெயர் ஆகும்.
- **எ.கா.** *நடவாமை, கொல்லாமை*

**5. விகுதி பெற்ற தொழிற்பெயர் என்றால் என்ன?**

- வினையடியுடன் விகுதி சேர்வதால் உருவாவது விகுதி பெற்ற தொழிற்பெயர் ஆகும்.
- **எ.கா.** *நடத்தல், வாழ்க்கை*

**6. சொல் என்றால் என்ன?**

ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும்.

**7. முதனிலைத் தொழிற்பெயரை விளக்குக.**

- விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் முதனிலைத் தொழிற்பெயராகும்.
- **எ.கா** : *தட்டு, உரை, அடி.*
- இச்சொற்கள் முறையே தட்டுதல், உரைத்தல், அடித்தல் என்று பொருள்படும்போது முதனிலைத் தொழிற்பெயர்களாகின்றன.

**8. முதனிலை திரிந்த தொழிற்பெயரை விளக்குக.**

- விகுதி பெறாமல் முதனிலை திரிந்து வரும் தொழிற்பெயர் முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்.
- **எ.கா** : *கெடு - கேடு, சுடு - சூடு*

**9. ஒற்றளபெடை என்றால் என்ன? சான்று தருக.**

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளான **ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள்** ஆகிய பத்தும் ∴ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.
- **சான்று** : எங்ங்கிறைவன், எஃஃகிலங்கிய கையராய் இன்னுயிர்

**10. 'எட்டு' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.**

- எட்டு - ஓர் எண்ணைக் குறிக்கிறது - இது தனிமொழி
- எட்டு - **'எள் + து'** எனப் பிரிந்து எள்ளை உண் என்ற பொருளைத் தருகிறது. இது தொடர்மொழி
- ஆகவே எட்டு என்பது பொதுமொழியாயிற்று

## சிறுவினாக்கள்

**1. உயிரளபெடையைச் சான்றுடன் விளக்குக.**

- செய்யுளில் ஓசை குறையும்போது, அதனை நிறைவு செய்ய, மொழிக்கு முதலிலும் இடையிலும் இறுதியிலும் நிற்கிற உயிர் நெட்டெழுத்துகள் ஏழும் தத்தம் அளவில் நீண்டு ஒலிக்கும்.
- அதைக் குறிக்க நெட்டெழுத்துகளின் இனமான குற்றெழுத்துகள் அவற்றின் பின்னால் வரும். இவ்வாறு வருவது உயிரளபெடை எனப்படும்.
- எ.கா. *அம்மாஅ, தம்பீஇ*



Way to success

**2. செய்யுளிசை அளபெடையை (இசைநிறை அளபெடை) விளக்குக.**

- செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய, நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் செய்யுளிசை அளபெடை என்பர்.
- இதனை இசைநிறை அளபெடை என்றும் கூறுவர்.
- **எ.கா.**
  - ***ஓஒ**தல் வேண்டும்* - *மொழி முதல்*
  - *உ**றாஅ**ர்க்கு உறுநோய்* - *மொழியிடை*
  - *நல்ல **படாஅ** பறை* - *மொழியிறுதி*
- மொழி முதல், இடை, இறுதி ஆகிய மூவிடங்களிலும் வரும்.

**3. இன்னிசை அளபெடையை விளக்குக.**

- செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.
- எ.கா. *கெடுப்ப**தூஉ**ம் கெட்டார்க்குச் சார்வாய் மற்றாங்கே*
  *எடுப்ப**தூஉ**ம் எல்லாம் மழை.*
- கெடுப்பதும், எடுப்பதும் என்ற சொற்கள் கெடுப்பதூஉம், எடுப்பதூஉம் என்று குறில் நெடிலாகி ஓசை இன்பத்திற்காக அளபெடுத்து ஒலிப்பதால் இ∴து இன்னிசை அளபெடையாகும்.

**4. சொல்லிசை அளபெடையைச் சான்றுடன் விளக்குக.**

- செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச்சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை.
- சான்று : *உரன**சைஇ** உள்ளம் துணையாகச் சென்றார்*
  *வரன**சைஇ** இன்னும் உளேன்.*
- நசை – விருப்பம். விருப்பம் என்னும் சொல் விரும்பி என எச்சப் பொருளைத் தருவதற்காக நசைஇ என அளபெடுத்தது. பெயர்ச்சொல், வினை அடையாக மாறியதால் இது சொல்லிசை அளபெடையாகும்.

**5. மூவகை மொழியைச் சான்றுடன் விளக்குக.**

மொழி மூன்று வகைப்படும். அவை: தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி

1. **தனிமொழி :**
   - ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது தனிமொழி எனப்படும்.
   - **எ.கா.** *கண், படி* - *பகாப்பதம்*
     *கண்ணன், படித்தான்* - *பகுபதம்*
2. **தொடர்மொழி :**
   - இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது தொடர்மொழி ஆகும்.
   - **எ.கா.** *கண்ணன் வந்தான்.*
     *மலர் வீட்டுக்குச் சென்றாள்.*
3. **பொதுமொழி :**
   - ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும், அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது பொதுமொழி எனப்படும்.
   - **சான்று :** *எட்டு* - *எட்டு என்ற எண்ணைக் குறிக்கும்.*
     *வேங்கை* - *வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கும்.*
   - இவையே **எள் + து** எனவும் **வேம் + கை** எனவும் தொடர்மொழிகளாகப் பிரிந்து நின்று எள்ளை உண், வேகின்ற கை எனவும் பொருள் தரும்.
   - தனிமொழிக்கும், தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவதால் இது பொதுமொழியாகும்.

**6. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.**

- ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வேறொரு பயனிலையைக் கொண்டு முடிவது வினையாலணையும் பெயர் எனப்படும்.
- அது தன்மை, முன்னிலை, படர்க்கை ஆகிய மூன்று இடங்களிலும் மூன்று காலங்களிலும் வரும்.
- எ.கா: வந்தவர் அவர்தான். பொறுத்தார் பூமியாள்வார்.

Way to success

# வினாத்தாள் வடிவமைப்பின் தொகுப்புகள்

## வினாத்தாள் வடிவமைப்பு மற்றும் நேர மேலாண்மை

**வினாத்தாள் வாசித்தல் (15 நிமிடம்)**

| உட்பிரிவு | வினா.எண் | தலைப்பு | கேட்கப்படும் கேள்விகள் | எழுத வேண்டிய கேள்விகள் | மதிப்பெண்கள் | நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **பகுதி - I : ஒரு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 15)** | | | | | | |
| 1-15 | 1 - 11 | உரைநடை | 3 | 3 | 15 | 20 நிமிடம் |
| | | செய்யுள் | 2 | 2 | | |
| | | இலக்கணம் | 3 | 3 | | |
| | | மொழிப்பயிற்சி | 3 | 3 | | |
| | 12 - 15 | செய்யுள் - 4 வினாக்கள் | 4 | 4 | | |
| | | ஒவ்வொரு பகுதிகளிலும் கேள்விகளின் எண்ணிக்கை மாறுதலுக்குட்பட்டது. | | | | |
| | | **குறிப்பு :** பாடப்பகுதியிலுள்ள ஏதேனும் ஒரு செய்யுள் கொடுக்கப்பட்டு, அதிலிருந்து 4 பலவுள் தெரிக வினாக்கள் கேட்கப்படும். | | | | |
| **பகுதி – II : இரண்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | | | | | |
| பிரிவு: 1 | 16 - 20 | உரைநடை மற்றும் செய்யுள் | 5 | 3 | 6 | 25 நிமிடம் |
| | | **குறிப்பு :** இதில் '**விடைக்கேற்ற வினா அமைத்தல்**' வினா கேட்கப்படும். | | | | |
| | 21* | **கட்டாய வினா - மனப்பாடத் திருக்குறள்** | 1 | 1 | 2 | |
| பிரிவு: 2 | 22 - 28 | இலக்கணம் (ம) மொழிப்பயிற்சி | 7 | 5 | 10 | |
| | | **குறிப்பு :** செவிமாற்றுத் திறனாளர்களுக்காக கலைச்சொல்லுக்கு மாற்றாக, மொழித்திறன் வினா கேட்கப்படும். | | | | |
| **பகுதி – III : மூன்று மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 18)** | | | | | | |
| பிரிவு: 1 | 29 - 31 | உரைநடை | 3 | 2 | 6 | 30 நிமிடம் |
| | | **குறிப்பு :** இதில் ஒன்றில் **உரைப்பத்தி** கொடுத்து அது தொடர்பான 3 வினாக்கள் கேட்கப்படும். | | | | |
| பிரிவு: 2 | 32 - 33 | செய்யுள் | 2 | 1 | 3 | |
| | 34 * | **கட்டாய வினா - மனப்பாடச் செய்யுள்** | 2 | 1 | 3 | |
| பிரிவு: 3 | 35 - 37 | இலக்கணம் | 3 | 2 | 6 | |
| **பகுதி – IV : ஐந்து மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 25)** | | | | | | |
| 38 - 42 | 38 | செய்யுள் நெடுவினா | 2 | 1 | 5 | 45 நிமிடம் |
| | 39 | கடிதம் | 2 | 1 | 5 | |
| | 40 | படம் உணர்த்தும் கருத்து எழுதுதல். | 1 | 1 | 5 | |
| | 41 | படிவம் | 1 | 1 | 5 | |
| | | **குறிப்பு :** அரசு வெளியிட்டுள்ள 4 படிவங்களிலிருந்து ஒரு படிவம் மட்டுமே கேட்கப்படும். | | | | |
| | 42 | நிற்க அதற்குத் தக (அ) மொழிபெயர்ப்பு | 2 | 1 | 5 | |
| | | **குறிப்பு :** செவிமாற்றுத் திறனாளர்களுக்கு மொழிபெயர்ப்பு வினாவிற்கு மாற்றாக, உரைப்பத்தியைப் படித்து 5 வினாக்களுக்கு விடையளிக்கும் பகுதி இடம்பெறும். | | | | |
| **பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் (மதிப்பெண்கள் : 24)** | | | | | | |
| 43 - 45 | 43 | உரைநடை நெடுவினா | 2 | 1 | 8 | 45 நிமிடம் |
| | 44 | துணைப்பாடம் நெடுவினா | 2 | 1 | 8 | |
| | 45 | பொதுக்கட்டுரை | 2 | 1 | 8 | |
| | **குறிப்பு :** பாடம் சார்ந்து உருவாக்கப்பட்ட வினாக்களும் இப்பகுதியில் இடம்பெறும். | | | | | |
| **திருப்புதல்** | | | | | | 15 நிமிடம் |
| **வெற்றிக்கு வழி தமிழ் கையேட்டினை படித்து, வெற்றி வாகை சூட வாழ்த்துகள் ! ! !** | | | | | | |

**குறிப்பு:** இப்பகுதியில் **அரசு பொதுத்தேர்வு மார்ச் 2024, ஏப்ரல் 2023, ஜுன் 2023, மே 2022, ஆகஸ்ட் 2022, செப்டம்பர் 2021 மற்றும் 2020, அரசு மாதிரி வினாத்தாள் 2019** மற்றும் **6 PTA வினாத்தாள்களின்** அடிப்படையில் சில முக்கிய பகுதிகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் எளிதாக தேர்வுக்குத் தயாராகும் வகையில் புத்தக வினாக்களின் பக்க எண்கள் அந்தந்த தொகுப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இதனையும் மாணவர்கள் நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.

Waytosuccess

| வி.எண் : 1 – 15 | பகுதி – I : சரியான விடை | 15 × 1 = 15 |
|---|---|---|

## வி.எண் : 1 – 11 செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப்பயிற்சி கேள்விகள்

குறிப்பு : வினா எண் 1 முதல் 11 வரை செய்யுள், உரைநடை, இலக்கணம், மொழிப்பயிற்சி பகுதியிலிருந்து ஒரு மதிப்பெண் வினாக்கள் சரியான விடையைத் தேர்வு செய்க என்ற அமைப்பில் கேட்கப்படும்.

* செய்யுள் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக்குறிப்பு, சொல்லும் பொருளும் ஆகியவற்றில் தடித்த எழுத்துக்களில் உள்ளவற்றை நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.

1. "நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே **[SEP – 2021]**
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம்;" - பாரதியார்

இப்பாடலில் இடம்பெற்றுள்ள அடிஎதுகைச் சொற்களைத் தேர்ந்தெடுக்கவும். **(இயல் - 4)**

அ) வானத்து - வைத்தாங்கே
ஆ) காற்றையும் - குடித்தொரு
**இ) நிலாவையும் - குலாவும்**
ஈ) வைத்தாங்கே - வெறிபடைத்தோம்

2. கொடுக்கப்பட்டுள்ள பழமொழிகளுள் உணவு தொடர்பான பழமொழியைத் தேர்ந்தெடுக்கவும். **[SEP – 2021]**

அ) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
**ஆ) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு**
இ) வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
ஈ) ஆடிக்காற்றில் அம்மியும் நகரும்.

3. கொடுக்கப்பட்ட சொற்கள் அமைந்த பொருத்தமான தொடரைத் தெரிக. **[QR]**
(ஏரி, ஆறு, மலை, மழை, மேகம், குளம்)

அ) மலைமீது மழைபெய்து ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது **[PTA - 1]**
**ஆ) கருத்த மேகம் மலைமீது மழையைப் பொழிய ஆறு, ஏரி, குளம் அனைத்தும் நீரால் நிரம்பின**
இ) திரண்ட மேகங்கள் மலையில் மாரியாகி ஆறு, ஏரி, குளங்களில் நிறைந்தன
ஈ) மலைமீது மழைபெய்ய ஏரி குளங்கள் நிறைந்து பின் கடலில் சென்று கலந்தது

4. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக.
பச்சரிசியைக் கொண்டு ________ செய்து பாசிப்பருப்பினை வறுத்து ________ பிடித்து கேரட்டைத் துரவி நெய்யிட்டு ________ செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக் கிழங்கைச் சீவி ________ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார். **[PTA - 4]**

அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா
ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்
**இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்**
ஈ) உருண்டை சீவல், அல்வா, பொங்கல்

5. பழமொழிகளைப் பொருத்துக. **[PTA – 5]**

| | |
|---|---|
| அ) ஆறில்லா ஊருக்கு | 1. சோற்றுக்கு ஒரு சோறு பதம் |
| ஆ) உப்பில்லாப் பண்டம் | 2. நூறு வயது |
| இ) நொறுங்கத் தின்றால் | 3. குப்பையிலே |
| ஈ) ஒரு பானை | 4. அழகு பாழ் |

**தெரிவுகள்**

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ) | அ - 4 | ஆ - 1 | இ - 3 | ஈ - 2 |
| **ஆ)** | **அ - 4** | **ஆ - 3** | **இ - 2** | **ஈ - 1** |
| இ) | அ - 2 | ஆ - 4 | இ - 1 | ஈ - 3 |
| ஈ) | அ - 3 | ஆ - 1 | இ - 4 | ஈ - 2 |

6. பின்வருவனவற்றுள் முறையான தொடர் :-

அ) தமிழர்கள் நன்கு அறிந்திருந்தனர் உணவு பரிமாறும் முறையை
ஆ) தமிழர்கள் அறிந்திருந்தனர் நன்கு உணவு பரிமாறும் முறையை
இ) தமிழர்கள் பரிமாறும் உணவு முறையை நன்கு அறிந்திருந்தனர்
**ஈ) தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர்**

7. வெளிநாட்டில் வேலை செய்து கொண்டிருக்கும் தாயைப் பிரிந்திருக்கும் மகள்______வருந்திக் கொண்டிருந்தாள்.
- விடுபட்ட இடத்தில் பொருத்தமான உவமையைப் பயன்படுத்தித் தொடரை நிறைவு செய்க.

அ) தாமரை இலை நீர்போல
ஆ) வாழையடி வாழையாக
**இ) மழைமுகம் காணாப் பயிர்போல**
ஈ) கண்ணினைக் காக்கும் இமை போல

கூடுதல் வினாக்களுக்கு அந்தந்த பகுதியில் உள்ள பலவுள் தெரிக வினாக்களை பார்க்கவும்.


Way to success

## வி.எண் : 12 – 15 பாடல் பொருளுணர் திறன்

**குறிப்பு :** வினா எண் 12 முதல் 15 வரை செய்யுள் பகுதியிலிருந்து பாடல் ஒன்று கொடுக்கப்பட்டு நான்கு ஒரு மதிப்பெண் வினாக்கள் கேட்கப்படும்.

❋ பாடல் இடம்பெற்ற நூல்பெயர், ஆசிரியர் பெயர், பிரித்து எழுதுதல், விரித்து எழுதுதல், சொற்பொருள், எதுகை, இலக்கணக்குறிப்பு ஆகியவற்றுடன் பாடல் பொருள் ஆகியவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

### மோனை, எதுகை

| மோனை | எதுகை |
|---|---|
| செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் **முதல் எழுத்து** ஒன்றிவரத் தொடுப்பது மோனை ஆகும். | செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் **இரண்டாம் எழுத்து** ஒன்றிவரத் தொடுப்பது **எதுகை** ஆகும். |
| ***எ.கா:*** கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்<br>அத்தமிக்கும் போது அரிசிவரும் - குத்தி<br>உலையிலிட ஊரடங்கும் ஓர்அகப்பை அன்னம்<br>இலையிலிட வெள்ளி எழும்" - **காளமேகப் புலவர்** | ***மோனை:*** **க**த்துகடல் **கா**த்தான்; **அ**த்தமிக்கும் **அ**ரிசிவரும்; **உ**லையிலிட **ஊ**ரடங்கும்.<br>***எதுகை:*** க**த்**துகடல் அ**த்**தமிக்கும்; உ**லை**யிலிட இ**லை**யிலிட; ச**த்**திரத்தில் கு**த்**தி. |

| பிரித்து எழுதுதல் | சேர்த்து எழுதுதல் |
|---|---|
| ஒரு வார்த்தையை இரண்டு அல்லது மூன்று சொற்களாக பிரித்து, அவை தனியாக நின்று பொருள் தருவது. | இரண்டு சொற்கள் ஒன்றோடொன்று சேர்வதைப் சேர்த்து எழுதுதல் (புணர்ச்சி) என்கிறோம். |
| ***எ.கா:*** நன்மொழி = நன்மை + மொழி<br>நற்செங்கோல் = நன்மை + செம்மை + கோல் | ***எ.கா:*** மரம் + நிழல் = மரநிழல்<br>சமையல் + கலை = சமையற்கலை |

1. "செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாடத்
திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாடப்
பைம்பொ னசும்பிய தொந்தி யொடுஞ்சிறு பண்டி சரிந்தாடப்
பட்ட நுதற்பொலி பொட்டொடு வட்டச் சுட்டி பதிந்தாடக்
கம்பி விதம்பொதி குண்டல முங்குழை காது மசைந்தாடக்"

i) இப்பாடலின் ஆசிரியர் **[PTA – 2, SEP – 2020]**
அ) கீரந்தையார் ***ஆ) குமரகுருபரர்***
இ) நம்பூதனார் ஈ) செய்குதம்பிப் பாவலர்

ii) 'குண்டலமும் குழைகாதும், ஆடுக"- இலக்கணக்குறிப்பு தருக. **[6.ஆ]**
அ) எண்ணும்மை, வினையெச்சம்
***ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று***
இ) முற்றும்மை, வினையெச்சம்
ஈ) உம்மைத்தொகை, வியங்கோள் வினைமுற்று

iii) இப்பாடலில் இடம்பெற்றுள்ள பிள்ளைத்தமிழ்ப் பருவம்-
அ) அம்மானை ஆ) சப்பாணி இ) சிறுதேர் ***ஈ) செங்கீரை***

iv) பாடலின் இலக்கிய வகை
அ) பத்துப்பாட்டு ***ஆ) சிற்றிலக்கியம்***
இ) எட்டுத்தொகை ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

v) கிண்கிணி, அரைநாண், சுட்டி என்பன முறையே -
அ) காலில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
ஆ) நெற்றியில் அணிவது, இடையில் அணிவது, தலையில் அணிவது
***இ) காலில் அணிவது, இடையில் அணிவது, நெற்றியில் அணிவது***
ஈ) இடையில் அணிவது, காதில் அணிவது, தலையில் அணிவது

vi) சீர் எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.
***அ) பட்ட, பொட்டொடு*** ஆ) செம்பொன், பைம்பொன்
இ) சரிந்தாட, பதிந்தாட ஈ) பண்டி, குண்டலம்

2. "நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை **[2.ஆ]**
நீர் செல, நிமிர்ந்த மாஅல் போல, **[MAR - 24]**
பாடுஇமிழ் பனிக்கடல் பருகி, வலன் ஏர்பு,
கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி
பெரும்பெயல் பொழிந்த சிறுபுன் மாலை" **[MDL-19]**

i) இப்பாடல் இடம் பெற்ற நூல் **[PTA – 1]**
***அ) முல்லைப்பாட்டு*** ஆ) மலைபடுகடாம்
இ) நற்றிணை ஈ) குறுந்தொகை

ii) நனந்தலை உலகம் - இத்தொடரின் பொருள்
அ) சிறிய உலகம்
ஆ) தலையாய உலகம்
இ) நனைந்த உலகம்
***ஈ) அகன்ற உலகம்***

iii) பாடலில் இடம் பெற்றுள்ள அடிஎதுகை சொற்கள்
அ) பெரும்பெயல், பொழிந்த
ஆ) பாடுஇமிழ், பனிக்கடல்
***இ) பாடுஇமிழ், கோடுகொண்டு***
ஈ) நீர்செல, நிமிர்ந்த

iv) 'தடக்கை'- இலக்கணக் குறிப்புத் தேர்க.
***அ) உரிச்சொல் தொடர்*** ஆ) பண்புத் தொகை
இ) வினைத் தொகை ஈ) வேற்றுமைத் தொடர்

v) பாடலில் இடம் பெற்றுள்ள அளபெடை
அ) தடக்கை ***ஆ) வளைஇ***
இ) பெரும்பெயல் ஈ) கொடுஞ்செலவு

vi) இப்பாடலின் ஆசிரியர்
அ) ஔவையார் ***ஆ) நப்பூதனார்***
இ) நல்வேட்டனார் ஈ) பெருங்கௌசிகனார்

## 1 மதிப்பெண் வினாக்களுக்கு தேவையான பாடத்தலைப்புகள் மற்றும் ஆசிரியர் பெயர்கள்

### 1. அமுத ஊற்று

**செ: அன்னை மொழியே**
- ✓ **ஆசிரியர்** : பாவலரேறு பெருஞ்சித்திரனார்
- ✓ **இயற்பெயர்** : துரை. மாணிக்கம்
- ✓ **சிறப்புப்பெயர்:** பாவலரேறு
- ✓ **படைப்புகள்** : உலகியல் நூறு,பாவியக்கொத்து

**செ: இரட்டுற மொழிதல்**
- ✓ **ஆசிரியர்** : சந்தக்கவிமணி தமிழழகனார்
- ✓ **சிறப்புப்பெயர்:** சந்தக்கவிமணி

**உ: தமிழ்ச்சொல் வளம்**
- ✓ **ஆசிரியர்** : தேவநேயப் பாவாணர்
- ✓ **சிறப்புப்பெயர்** : மொழி ஞாயிறு

**வி: உரைநடையின் அணிநலன்கள்**
- ✓ **ஆசிரியர்** : எழில்முதல்வன்
- ✓ **இயற்பெயர்** : மா. இராமலிங்கம்
- ✓ **படைப்புகள்** : புதிய உரைநடை, யாதுமாகி நின்றாய்
- ✓ **விருது:** சாகித்திய அகாதெமி (புதிய உரைநடை)

### 2. உயிரின் ஓசை

**செ: காற்றே வா!**
- ✓ **ஆசிரியர்** : பாரதியார்
- ✓ **படைப்புகள்:** பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு கண்ணன் பாட்டு, புதிய ஆத்திசூடி
- ✓ **சிறப்புப்பெயர்:** மகாகவி, சிந்துக்குத் தந்தை, பாட்டுக்கொரு புலவன்

**செ: முல்லைப்பாட்டு**
- ✓ **ஆசிரியர்:** காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார் மகனார் நப்பூதனார்

**வி: புயலிலே ஒரு தோணி**
- ✓ **ஆசிரியர்** : ப. சிங்காரம்
- ✓ **படைப்பு** : புயலிலே ஒரு தோணி (புதினம்)

### 3. கூட்டாஞ்சோறு

**செ - அ: காசிக்காண்டம்**
- ✓ **ஆசிரியர்:** அதிவீரராம பாண்டியர்
- ✓ **படைப்பு** : நைடதம், நறுந்தொகை

**செ - ஆ: மலைபடுகடாம்**
- ✓ **ஆசிரியர்:** இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்
- ✓ **நூலின் சிறப்புப்பெயர்:** கூத்தராற்றுப்படை

**வி: கோபல்லபுரத்து மக்கள்**
- ✓ **ஆசிரியர்** : கி. ராஜநாராயணன்
- ✓ **சிறப்புப்பெயர்:** கி.ரா. கரிசல் எழுத்தாளர்
- ✓ **விருது:** கோபல்லபுரத்து மக்கள்(சாகித்திய அகாதெமி)

**வா: திருக்குறள்**
- ✓ **ஆசிரியர்** : திருவள்ளுவர்
- ✓ **சிறப்புப்பெயர்:** தெய்வப்புலவர், முதற்பாவலர்

### 4. நான்காம் தமிழ்

**செ - அ: பெருமாள் திருமொழி**
- ✓ **ஆசிரியர்** : குலசேகராழ்வார்

**செ - ஆ: பரிபாடல்**
- ✓ **ஆசிரியர்** : கீரந்தையார்

### 5. மணற்கேணி

**செ - அ: நீதிவெண்பா**
- ✓ **ஆசிரியர்:** கா.ப. செய்குதம்பிப் பாவலர்
- ✓ **சிறப்புப்பெயர்:** சதாவதானி

**செ - ஆ: திருவிளையாடற் புராணம்**
- ✓ **ஆசிரியர்** : பரஞ்சோதி முனிவர்

**வி: புதிய நம்பிக்கை**
- ✓ **ஆசிரியர்** : கமலாலயன் (வே. குணசேகரன்)

### 6. நிலா முற்றம்

**செ - அ: பூத்தொடுத்தல்**
- ✓ **ஆசிரியர்:** உமா மகேஸ்வரி
- ✓ **படைப்பு:** நட்சத்திரங்களின் நடுவே, கற்பாவை

**செ - ஆ: முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்**
- ✓ **ஆசிரியர்:** குமரகுருபரர்
- ✓ **படைப்பு:** மதுரைக்கலம்பகம், நீதிநெறி விளக்கம்

**செ - இ: கம்பராமாயணம்**
- ✓ **ஆசிரியர்:** கம்பர்
- ✓ **படைப்பு:** ஏரெழுபது, சிலைஎழுபது

**வி: பாய்ச்சல்**
- ✓ **ஆசிரியர்:** சா. கந்தசாமி
- ✓ **விருது:** விசாரணைக் கமிஷன் (சாகித்திய அகாதெமி)

### 7. விதைநெல்

**உ: சிற்றகல் ஒளி**
- ✓ **ஆசிரியர்:** ம.பொ. சிவஞானம்
- ✓ **சிறப்புப்பெயர்** : சிலம்புச்செல்வர்
- ✓ **விருது** : வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு (சாகித்திய அகாதெமி)

**செ - அ: ஏர் புதிதா?**
- ✓ **ஆசிரியர்:** கு.ப. ராஜகோபாலன்

**செ - ஆ: மெய்க்கீர்த்தி**
- ✓ **ஆசிரியர்:** இரண்டாம் இராசராச சோழன்

**செ - இ: சிலப்பதிகாரம்**
- ✓ **ஆசிரியர்:** இளங்கோவடிகள்
- ✓ **நூலின் சிறப்புப்பெயர்** : குடிமக்கள் காப்பியம்

### 8. பெருவழி

**செ - அ: ஞானம்**
- ✓ **ஆசிரியர்:** தி.சொ. வேணுகோபாலன்
- ✓ **படைப்பு:** கோடை வயல், மீட்சி விண்ணப்பம்

**செ - ஆ: காலக்கணிதம்**
- ✓ **ஆசிரியர்:** கண்ணதாசன் (முத்தையா)
- ✓ **விருது:** சேரமான் காதலி (சாகித்திய அகாதெமி)

### 9. அன்பின் மொழி

**செ - அ: சித்தாளு**
- ✓ **ஆசிரியர்:** நாகூர் ரூமி (முகம்மதுர.ஃபி)
- ✓ **படைப்பு:** நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல்

**செ - ஆ: தேம்பாவணி**
- ✓ **ஆசிரியர்:** வீரமாமுனிவர்
- ✓ **இயற்பெயர்:** கான்சுடான்சு சோசப் பெசுகி

**வி: ஒருவன் இருக்கிறான்**
- ✓ **ஆசிரியர்:** கு. அழகிரிசாமி

Way to Success

# சொல்லும் பொருளும்

**குறிப்பு :** சொல்லும் பொருளும், இலக்கணக்குறிப்பு வினா எண் 1 – 15 வரை உள்ள வினாக்களில் எங்கு வேண்டுமானாலும் கேட்கப்படலாம்.

* செய்யுள் பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள சொல்லும் பொருளும், இலக்கணக்குறிப்பு ஆகியவற்றில் தடித்த எழுத்துக்களில் உள்ளவற்றை நன்கு பயிற்சி செய்து கொள்ளவும்.

## இயல் 1. அமுதஊற்று

### அன்னை மொழியே

| | | |
|---|---|---|
| 1. முகிழ்த்த - தோன்றிய | 2. தும்பி - வண்டு | 3. எண்தொகை - எட்டுத்தொகை |
| 4. மாண் - உயர்ந்த, சிறந்த | 5. உந்தி - எழுப்பி | 6. செப்பரிய - சொல்லுதற்கரிய |
| 7. மன்னி,மன்னுஞ் - நிலைத்த | 8. தென்னன் - பாண்டியன் | 9. முந்துற்றோம் - முழங்குகின்றோம் |
| 10. நற்கணக்கு - பதினெண்கீழ்க்கணக்கு | | |

### இரட்டுற மொழிதல்

| | | |
|---|---|---|
| 11. **துய்ப்பது - கற்பது, தருதல்** | 12. ஆழி - கடல், சங்கப்பலகை | 13. ஈண்டு - இங்கு |
| 14. **மேவலால் - பொருந்துதலால், பெறுதலால்** | 15. மெத்த - மேன்மையான | 16. இணை - ஈடு |

## இயல் 2. உயிரின் ஓசை

### காற்றே வா!

| | | |
|---|---|---|
| 1. **லயத்துடன் - சீராக** | 2. மடித்து - நிறுத்தி | 3. அவித்து - அணைத்து |
| 4. **ப்ராண - ரஸம் - உயிர்வளி** | 5. புகழ்ச்சிகள் - பாராட்டுகள் | 6. **மயலுறுத்து - மயங்கச்செய்** |

### முல்லைப்பாட்டு

| | | | |
|---|---|---|---|
| 7. **நேமி - சக்கரம்** | 8. **தூஉய் - தூவி** | 9. எழிலி - மேகம் | 10. சிறுதாம்பு - சிறுகயிறு |
| 11. **கோடு - மலை** | 12. **விரிச்சி - நற்சொல்** | 13. புன் - துன்பம் | 14. பசலைக்கன்று - இளங்கன்று |
| 15. **சுவல் - தோள்** | 16. அரும்பு - மொட்டு | 17. போகி - சென்று | 18. நீர் செல் - நீரை வார்க்க |
| 19. மா - திருமகள் | 20. தாயர் - தாய்ப்பசு | 21. நன்னர் - நன்மை | 22. பாடுஇமிழ் - ஒலி முழங்கும் |
| 23. வீ - மலர்கள் | 24. மாஅல் - திருமால் | 25. வலம்புரி - சங்கு | 26. பனிக்கடல் - குளிர்ந்த கடல் |
| 27. ஆர்ப்ப - ஆரவாரிக்க | 28. தடக்கை - பெரிய கை | | 29. வலன் - வலப்பக்கமாக |
| 30. அலரி - மலர்ந்த பூ | 31. மருங்கில் - பக்கத்தில் | | 32. மூதூர் - பழைய ஊர் |

| | |
|---|---|
| 33. **நனந்தலை உலகம் - அகன்ற உலகம்** | 34. அருங்கடி - அரிய காவல் |
| 35. **கொடுஞ்செலவு - விரைவாகச் செல்லுதல்** | 36. உறுதுயர் - அடைகின்ற துயர் |
| 37. **நறுவீ - நறுமணமுடைய மலர்கள்** | 38. ஆய்மகள் - ஆயர் குலப்பெண் |
| 39. பெருமுது பெண்டிர் - வயதான பெண்கள் | 40. கோவலர் - ஆயர் குலத்தவர் |
| 41. உய்த்தர - செலுத்தலைச் செய்ய | 42. கொடுங்கோல் - வளைந்த கோல் |
| 43. ஏர்பு - எழுந்து, உயர்ந்து | 44. பெரும்பெயல் - பெருமழை |

## இயல் 3. கூட்டாஞ்சோறு

### காசிக்காண்டம்

| | |
|---|---|
| 1. **அருகுற - அருகில்** | 2. திருந்துற - முகமலர்ச்சியுடன் |
| 3. நன்மொழி - நல்ல சொற்கள் | 4. வழிபடும் - விருந்தோம்பும் |
| 5. **முகமன் - ஒருவரை நலம் வினவிக் கூறும் விருந்தோம்பல் சொற்கள்** | 6. செப்பல் - பேசுதல் |

### மலைபடுகடாம்

| | | | |
|---|---|---|---|
| 7. **இறடி - தினை** | 8. **பொம்மல் - சோறு** | 9. **அல்கி - தங்கி** | 10. **கடும்பு - சுற்றம்** |
| 11. **வேவை - வெந்தது** | 12. **நரலும் - ஒலிக்கும்** | 13. **அசைஇ - இளைப்பாறி** | |
| 14. **ஆரி - அருமை** | 15. **வயிரியம் - கூத்தர்** | 16. சிலம்பு - மலைச்சரிவு | |
| 17. அலங்கு - அசைதல் | 18. **படுகர் - பள்ளம்** | 19. செப்பம் - பொருத்தமான | |
| 20. நரல் - ஒலி | 21. குரூ - நிறம் | 22. கிழவிர் - உரிமை உடையவர் | |
| 23. கழை - மூங்கில் | 24. பாக்கம் - சிற்றூர் | 25. நோன்தாள் - வலிய முயற்சி | |
| 26. மலைந்து - அணிந்து | 27. விறல் - கூத்தர்கள் | 28. ஒள் இணர் - ஒளிரும் பூங்கொத்து | |

## இயல் 4. நான்காம் தமிழ்

### பெருமாள் திருமொழி

| | | | |
|---|---|---|---|
| 1. **சுடினும் - சுட்டாலும்** | 2. **மாளாத - தீராத** | 3. **மாயம் - விளையாட்டு** | 4. துயர் - துன்பம் |

### பரிபாடல்

| | | | |
|---|---|---|---|
| 5. **விசும்பு - வானம்** | 6. **ஊழ் - முறை** | 7. **ஊழி - யுகம்** | 8. **பீடு - சிறப்பு** |
| 9. **ஆர்தருபு - வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்த** | 10. இருநிலம் - நிலைபெற்ற நிலம் | 11. வளி - காற்று | |
| 12. **ஈண்டி - செறிந்து திரண்டு** | 13. **தண்பெயல் - குளிர்ந்த மழை** | 14. உள்ளீடு - உள்ளே இடப்பட்டது | |

Way to Success

## இயல் 8. பெருவழி

### ஞானம்

| | | | |
|---|---|---|---|
| 1. சாளரம் - சன்னல் | 2. புழுதி - மண்துகள் | 3. ஓய்வு - தளர்வு | 4. சாயம் - வண்ணம் |
| 5. தூரிகை - வண்ணமடிக்கப் பயன்படும் கருவி | | 6. கந்தைத்துணி - கிழிந்த துணி | |

### காலக்கணிதம்

| | | | |
|---|---|---|---|
| 7. உருப்பட - பயன்பட | 8. முனைவேன் - முயற்சிப்பேன் | 9. எமர் இல்லம் - நண்பர் வீடு | |
| 10. இயம்புவது - கூறுவது | 11. பண்டோர்- பண்டைய நாளில் | 12. புல்லரிக்காது - சிலிர்க்காது | |
| 13. தர்பார் - ஆட்சி | 14. மகத்துவம் - பெருமை | 15. அட்சயம் - வளரும் | 16. ஏகும் - செல்லும் |

## இயல் 9. அன்பின் மொழி

### சித்தாளு

| | |
|---|---|
| 1. தலைக்கனம் - இறுமாப்பு, தற்பெருமை | 2. இன்னல் - துன்பம் |
| 3. அலுக்காமல் - சளைக்காமல் | 4. சலனங்கள் - கவலைகள் |

### தேம்பாவணி

| | | | | |
|---|---|---|---|---|
| **5. கான் - காடு** | **6. அசும்பு - நிலம்** | **7. கொம்பு - கிளை** | **8. பிணித்து - கட்டி** | **9. வாய்ந்த - பயனுள்ள** |
| **10. தேம்ப - வாட** | **11. புழை - துளை** | **12. படலை - மாலை** | **13. தயங்கி - அசைந்து** | **14. ஓர்ந்து - நினைத்து** |
| **15. சேக்கை - படுக்கை** | **16. துணர் - மலர்கள்** | **17. யாக்கை - உடல்** | **18. கடிந்து - விலக்கி** | |
| 19. புள் - பறவை | 20. கொய்த - பறித்த | 21. வீ - மலர் | 22. நவமணி - ஒன்பது வகையான மணி | |
| **23. காய்ந்தேன் - வருந்தினேன்** | **24. உவமணி - மணமலர்** | 25. வாய்மை - உண்மை | | |
| **26. உய்முறை - வாழும் பூமி** | **27. இளங்கூழ் - இளம்பயிர்** | 28. காய்மணி - நெல் மணி | | |
| 29. நுதிநச்சு - நுனியில் நஞ்சைக்கொண்ட அம்பு | 30. இரும்பு புழை - இரும்பில் போடப்பட்ட துளை | | | |

## இலக்கணக்குறிப்பு

| இலக்கணக்குறிப்பு | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|
| பெயரெச்சம் | வினைச்சொல் பெயரைக்கொண்டு முடிவது. | படித்த புத்தகம் |
| வினையெச்சம் | தொழில், காலத்தை உணர்த்தி வினையைக் கொண்டு முடிவது. | வந்து சென்றான் |
| முற்றெச்சம் | இரண்டு வினைமுற்றுகள் தொடர்ந்து வருவது. | பாடினர் மகிழ்ந்தனர் |
| வினைத்தொகை | பெயர்ச்சொல்லின் முதற்பகுதி வினையாகி முக்காலமும் மறைவது. | காய்நெல் |
| பண்புத்தொகை | சொல்லைப் பிரித்தால் நிலைமொழியில் ‘மை விகுதி’ வருவது. | செந்நிறம்=செம்<u>மை</u>+நிறம் |
| | நிறம், குணம், சுவை, வடிவம் போன்றவற்றைக் குறிப்பது. | வட்டத்தொட்டி=***<u>வட்டமான</u>***தொட்டி |
| வினைமுற்று | முடிவு பெற்ற வினைச்சொல். | படித்தான் |
| வினையாலணையும் பெயர் | வினைமுற்று வினை செய்தவனைக் குறிக்கும் பெயராக வருவது. | வந்தவர், சென்றனன் |
| உவமைத்தொகை | பொருளுக்கும் உவமைக்குமிடையே உவம உருபுகள் மறைவது | மலரடி (மலர் போன்ற அடி) |
| உருவகம் | பொருள் முதலாகவும் உவமை பின்னாகவும் வருவது. | அடிமலர் |
| உம்மைத்தொகை | இரு சொற்களுக்கிடையே ‘உம்’ என்ற சொல் மறைந்து வரும். | தாய் தந்தை |
| எண்ணும்மை | சொற்களில் ‘உம்’ எனும் விகுதி வெளிப்படையாக வருவது. | இரவும் பகலும் |
| வேற்றுமைத்தொகை | இரு சொற்களுக்கிடையே வேற்றுமை உருபு மறைவது. | தலைகுனிந்து |
| அன்மொழித்தொகை | உருபுகளும் அவை அல்லாத வேறு சொற்களும் மறைந்து பொருள் தருவது. | பூங்கொடி பேசினாள் |
| அடுக்குத்தொடர் | ஒரே சொல் 2 முறைக்கு மேல் அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தரும். | பாம்பு! பாம்பு! |
| இரட்டைக்கிளவி | ஒரே சொல் இரண்டு முறை அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தராது. | கலகல, பளபள |
| ஆகுபெயர் | ஒன்றன் இயற்பெயர் அதன் தொடர்பான வேறொன்றுக்கு ஆகி வருவது. | நாடே அழுதது. |
| ஒருபொருட்பன்மொழி | ஒரே பொருள் தரும் இரண்டு சொற்கள் சேர்ந்து வருவது. | உயர்ந்தோங்கு |
| உரிச்சொற்றொடர் | உரிச்சொற்கள் பெயர்ச்சொல்லோடு வருவது. | மாநகரம் |
| தொழிற்பெயர் | ஏதேனும் ஒரு தொழிலை உணர்த்துவது. | செய்தல் |
| அளபெடை | செய்யுளோசையை நிறைவு செய்ய எழுத்துகள் நீண்டு ஒலிப்பது. | ஆடூஉ, மகடூஉ |
| போலி | முதல் / இடை / ஈற்றெழுத்து மாறினாலும் பொருள் மாறுபடாது. | **மை**ஞ்சு, அ**ரை**யர், சாம்**பர்** |
| முற்றுப்போலி | அனைத்து எழுத்துகளும் மாறினாலும் பொருள் மாறுபடாது. | **ஐந்து - அஞ்சு** |
| முன் பின்னாகத் தொக்க போலி | சொல் முன்னும் பின்னும் இடம் மாறி வந்தும் பொருள் மாறாமல் இருப்பது. | **இல்**வாய் - வா**யில்** |
| உருபும் பயனும் உடன் தொக்கதொகை | வேற்றுமை உருபும், பயனும் மறைந்து வருவது. | பணப்பை(பண**த்தைக் கொண்ட** பை) |
| மரூஉ | சொற்கள் மருவி(மாறி) வருவது. | <u>நும் தந்தை</u> - <u>நுந்தை</u> |
| உடன்பாடு | ஒரு செயலைச் செய்வதற்கு உடன்பட்ட நிலை. | செய்வேன் |
| எதிர்மறை | ஒரு தொழிலைச் செய்ய உடன்படா நிலை. | செய்யேன் |
| செய்வினை | செய்பவரை முதன்மைப்படுத்துவது. | ஆசிரியர் புத்தகத்தை எழுதினார். |
| செயப்பாட்டுவினை | செயப்படு பொருளை முதன்மைப்படுத்துவது. | புத்தகம் ஆசிரியரால் எழுதப்பட்டது. |
| தன்வினை | ஒருவர் தானே தன் செயலைச் செய்வது. | கற்றேன். |
| பிறவினை | பிறரைச் செய்யும்படி ஆக்குவது. | கற்பித்தேன். |

| வி.எண் : 16 – 21★ | பகுதி – II : பிரிவு – 1<br>உரைநடை மற்றும் செய்யுள் வினாக்கள் | 4× 2= 8 |
|---|---|---|

குறிப்பு :

- இப்பகுதியில் செய்யுள் மற்றும் உரைநடைப் பகுதியில் இருந்து இரண்டு மதிப்பெண் வினாக்களில் **6** வினாக்கள் கொடுத்து **4** எழுதுமாறு கேட்கப்படும்.
- அவற்றுள் ஒரு வினா **'விடைகளுக்கேற்ற வினா அமைத்தல்'** கேட்கப்படும்.
- வினா எண் **21 கட்டாய வினாவாகும்.** இது திருக்குறள் பகுதியில் அமையும்.

*(தொடக்கம் அல்லது முடிவு கொடுத்து ஒரு குறள் கேட்கப்படும் அல்லது திருக்குறள் தொடர்பான கேள்விகள் இடம்பெறும்.)*

## விடைகளுக்கேற்ற வினா அமைத்தல்

1. அ) **அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது.** **[MAR - 2024]**
அறிவியலின் வளர்ச்சி எதை விரிவாக்குகிறது? / மனிதனின் அறிவை விரிவாக்குவது எது?
ஆ) **பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது குறிஞ்சி.**
குறிஞ்சி எத்தனை ஆண்டுகளுக்கு ஒரு முறை மலரும்? / பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலர்வது எது?

2. அ) **'தமிழாதுள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கையை கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே ம.பொ.சி. வழங்கினார்.** **[JUN - 2023]**
'தமிழாதுள்ளி எழு' என்னும் தலைப்புடைய துண்டறிக்கையை கடற்கரையில் குழுமியிருந்த மக்களிடையே வழங்கியவர் யார்?
ஆ) **விருந்தோம்பலை வலியுறுத்த ஓர் அதிகாரமே திருக்குறளில் அமைந்திருக்கிறது.**
விருந்தோம்பலை வலியுறுத்தும் அதிகாரம் அமைந்துள்ள நூல் எது?

3. அ) **கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினர்.**
பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தியவர் யார்? **[APR - 2023]**
ஆ) **தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது புலி ஆட்டமாகும்.**
தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது?

4. அ) **சதாவதானம் என்னும் கலையில் சிறந்து விளங்கியவர் செய்குதம்பிப் பாவலர்.** **[AUG-2022]**
செய்குதம்பிப் பாவலர் எந்த கலையில் சிறந்து விளங்கினார்?
ஆ) **பரஞ்சோதி முனிவர் திருமறைக் காட்டில் பிறந்தவர்.** பரஞ்சோதி முனிவர் எங்கு பிறந்தார்?

5. அ) **சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி இலக்கிய அறிவு பெற்றார்.** **[MAY-2022]**
ம.பொ.சி எதன் மூலம் இலக்கிய அறிவு பெற்றார்?
ஆ) **1906 -ஆம் ஆண்டு வ.உ. சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.**
எந்த ஆண்டு வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயர்களுக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்?

6. அ) **உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா.** **[SEP-2021]**
உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு எது?
ஆ) **தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் தமிழ்த்திரு. இரா. இளங்குமரனார்.**
தமிழ்த்தென்றல் திரு.வி.க. போல இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக்கொண்டவர் யார்?

7. அ) **ம.பொ.சி. அம்மானைப் பாடல்களை அடிக்கடி பாடிப்பாடி பிள்ளைப்பருவத்திலேயே இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்.** **[SEP - 2020]**
ம.பொ.சி. பிள்ளைப்பருவத்தில் எவ்வாறு இலக்கிய அறிவை வளர்த்துக் கொண்டார்?
ஆ) **நெய்தல் நிலத்தவர் பாணர்களை வரவேற்றுக் குழல் மீன் கறியும் பிறவும் கொடுத்தனர்.**
நெய்தல் நிலத்தவர் பாணர்களை எவற்றை கொடுத்து வரவேற்றனர்?

8. அ) **தப்பாட்டம் நிகழ்த்தப்படும் சூழலுக்கேற்ப பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது.** **[PTA - 1]**
தப்பாட்டம் எதைப் பொறுத்து பல்வேறு ஆட்டக்கூறுகளைக் கொண்டுள்ளது?
ஆ) **ஒயிலாட்டத்தில் தோலால் கட்டப்பட்ட குடம், தவில், சிங்கி, டோலக், தப்பு போன்ற இசைக்கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன.** ஒயிலாட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் யாவை?

9. அ) **நாயக்கர், மராட்டியர் ஆட்சிக் காலங்களில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோருக்காகக் கட்டப்பட்டன.**
யாருடைய ஆட்சிக் காலத்தில் மிகுதியான சத்திரங்கள் வழிச்செல்வோருக்காகக் கட்டப்பட்டன?
ஆ) **அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் 'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது.** **[PTA - 2]**
'வாழை இலை விருந்து விழாவை' ஆண்டுதோறும் கொண்டாடும் தமிழ்ச்சங்கம் எது?



Way to Success

| வி.எண் : 22 – 28 | பகுதி – II : பிரிவு – 2<br>இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சி | 5 × 2 = 10 |
|---|---|---|

**குறிப்பு :** இப்பகுதியில் இலக்கணம் மற்றும் மொழிப்பயிற்சிப் பகுதியில் இருந்து இரண்டு மதிப்பெண் வினாக்களில் **7** வினாக்கள் கொடுத்து **5** எழுதுமாறு கேட்கப்படும்.

- பகுபத உறுப்பிலக்கணம் ஒரு வினாவாகவும் கலைச்சொற்கள் ஒரு வினாவாகவும் கேட்கப்படும்.
- இலக்கண கேள்வி 1 கேட்கப்படும். அதனை இலக்கணப் பகுதியில் பயிற்சி செய்யவும்.
- மொழிப்பயிற்சி கேள்விகளுக்கு பாடப்பகுதியில் உள்ள அனைத்து மொழிப்பயிற்சி பகுதிகளையும் நன்கு பயிற்சி செய்யவும். மேலும் இங்கு கூடுதலாகச் சில தலைப்புகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. அவற்றையும் பயிற்சி செய்துகொள்ளவும்.

## பகுபத உறுப்பிலக்கணம்

எ.கா : **தணிந்தது = தணி + த் (ந்) + த் + அ + து** **(இயல்–5)**

தணி - பகுதி; த் - சந்தி, ந் ஆனது விகாரம்; த் - இறந்தகால இடைநிலை;

அ - சாரியை; து - படர்க்கை வினைமுற்று விகுதி

| | |
|---|---|
| **1. பகுதி** | பகுபதத்தின் முதலில் நிற்கும். (வினைப்பகுபதத்தில் ஏவல்வினை போல் வரும்) |
| **2. விகுதி** | பகுபதத்தின் கடைசியில் வரும். (பால், எண், இடம், ஆகியவற்றை உணர்த்தும்) |
| **3. இடைநிலை** | பெயருக்கேற்றாற்போல் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் வரும். (காலம் காட்டும்) |
| **4. சந்தி** | பகுதிக்கும் இடைநிலைக்கும் நடுவில் வரும். |
| **5. சாரியை** | இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும். |
| **6. விகாரம்** | மேற்கண்ட உறுப்புகளில் ஏற்படும் மாற்றம் விகாரம் எனப்படும். |

| நினைவிற்கொள்ள வேண்டியவை........... | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன், கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம்,ஏம்,அம்,ஆம்,ஒம்,ஓம்,கும்,டும்,தும்,றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய் |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர் |
| ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி | இ |
| ஏவல் பன்மை வினைமுற்று விகுதி | மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று |
| படர்க்கை பலவின்பால் வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ,(உம்) |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ, இ |

### முக்கிய குறிப்புகள்

- த், க், ப் - என்னும் மூன்று எழுத்துகளுள் ஒன்றே பெரும்பாலும் சந்தியாக வரும்.
- அன், அ - என்னும் இரண்டனுள் ஒன்றே சாரியையாக வரும்.
- சந்தி வரவேண்டிய இடத்தில் புள்ளியில்லாத எழுத்து வந்தால் அதை சாரியை எனக் குறிப்பிட வேண்டும்.
- பொதுவாக அ - பெயரெச்ச விகுதி; இ, உ - வினையெச்ச விகுதி; இவற்றிற்குச் சில விதிவிலக்குகள் உண்டு. உதாரணமாக "இயக்க வேண்டும்" - இதில் 'இயக்க' என்பது 'அ' என்ற ஒலியில் கொண்டு முடிவதால் பெயரெச்ச விகுதி எனக் குறிப்பிடக்கூடாது. இங்கு 'அ' என்பது வினையெச்ச விகுதியாகும். எனவே பெயரெச்ச/வினையெச்ச விகுதி கண்டறியும்போது சொல்லை நன்கு கவனித்து விகுதியைக் கண்டறிக.

## மொழிப்பயிற்சிப் பகுதி

### 1. கலைச்சொல் தருக.

**குறிப்பு :** கொடுக்கப்பட்ட ஆங்கில கலைச்சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல் எழுதவேண்டும்.

| இயல் - 1 | இயல் - 2 |
|---|---|
| ♣ Vowel - உயிரெழுத்து[JUN-23,AUG-22, PTA-1] | ♣ Storm - புயல் [APR - 2023] |
| ♣ Consonant - மெய்யெழுத்து | ♣ Tornado - சூறாவளி [PTA – 6] |
| ♣ Homograph - ஒப்பெழுத்து [PTA –1] | ♣ Tempest - பெருங்காற்று [PTA – 6] |
| ♣ Monolingual - ஒரு மொழி | ♣ Land Breeze - நிலக்காற்று |
| ♣ Conversation - உரையாடல் | ♣ Sea Breeze - கடற்காற்று |
| ♣ Discussion - கலந்துரையாடல் [AUG – 22] | ♣ Whirlwind - சுழல்காற்று |

| இயல் - 3 | இயல் - 4 |
|---|---|
| ♣ Classical literature - செவ்விலக்கியம் | ♣ Nanotechnology - மீநுண்தொழில்நுட்பம் |
| ♣ Epic literature- காப்பிய இலக்கியம் [PTA – 5] | ♣ Biotechnology- உயிரித் தொழில்நுட்பம்[MAR-24] |
| ♣ Devotional literature - பக்தி இலக்கியம் | ♣ Ultraviolet rays - புற ஊதாக் கதிர்கள் [PTA – 2] |
| ♣ Ancient literature - பண்டைய இலக்கியம் | ♣ Space Technology- விண்வெளித் தொழில்நுட்பம் [PTA – 2] |
| ♣ Regional literature - வட்டார இலக்கியம் | ♣ Cosmic rays - விண்வெளிக் கதிர்கள் |
| ♣ Folk literature -நாட்டுப்புற இலக்கியம் [PTA- 5, SEP-2021] | ♣ Infrared rays - அகச்சிவப்புக் கதிர்கள் |
| ♣ Modern literature - நவீன இலக்கியம் [MDL – 19] | |

| இயல் - 5 | இயல் - 6 |
|---|---|
| ♣ Emblem - சின்னம் [JUN-23] | ♣ Playwright - நாடக ஆசிரியர் |
| ♣ Thesis - ஆய்வேடு | ♣ Storyteller - கதை சொல்லி |
| ♣ Intellectual - அறிவாளர் | ♣ Screenplay - திரைக்கதை |
| ♣ Symbolism - குறியீட்டியல் | ♣ Aesthetics - அழகியல், முருகியல் [PTA –4] |

| இயல் - 7 | |
|---|---|
| ♣ Consulate - துணைத்தூதரகம் [SEP-2021] | ♣ Guild - வணிகக்குழு |
| ♣ Patent - காப்புரிமை [APR - 2023] | ♣ Irrigation - பாசனம் |
| ♣ Document - ஆவணம் | ♣ Territory - நிலப்பகுதி |

| இயல் - 8 | இயல் - 9 |
|---|---|
| ♣ Belief - நம்பிக்கை[PTA-3, MAY-2022] | ♣ Humanism - மனிதநேயம் |
| ♣ Renaissance - மறுமலர்ச்சி [PTA – 3] | ♣ Cabinet - அமைச்சரவை |
| ♣ Philosopher - மெய்யியலாளர் [MAY-2022] | ♣ Cultural Boundaries - பண்பாட்டு எல்லை |
| ♣ Revivalism - மீட்டுருவாக்கம் | ♣ Cultural values - பண்பாட்டுவிழுமியங்கள் |

| கூடுதல் வினாக்கள் (இயல் - 6) (நீக்கப்பட்ட பாடப்பகுதி) | |
|---|---|
| ♣ Artifacts - கலைப்படைப்புகள்[SEP-2020] | ♣ Terminology - கலைச்சொல் |
| ♣ Myth - தொன்மம் [MAR-24,PTA-4, SEP-20] | ♣ Cultural element - பண்பாட்டுக் கூறு |

Way to success

## 2. கூட்டப்பெயர்கள், வினைமரபு(செயல் மரபு)

**குறிப்பு :** கொடுக்கப்பட்டுள்ள சொல்லுக்கான கூட்டப்பெயர்களை எழுதுதல்.

| சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் | சொல் | கூட்டப்பெயர் |
|---|---|---|---|---|---|
| 1. திராட்சை, வாழை | குலை | 2. சாவி | கொத்து | 3. யானை | கூட்டம் |
| 4. மக்கள் **[PTA – 4]** | கூட்டம் | 5. பூ | தோட்டம் | 6. பசு | நிரை |
| 7. கீரை **[PTA – 4]** | கட்டு | 8. பனை | காடு | 9. நெல் | வயல் |
| 10. புளி, தென்னை | தோப்பு | | | | |

### பறவை - விலங்குகளின் இளமைப் பெயர்கள்

| பறவை | இளமைப் பெயர் | விலங்கு | இளமைப் பெயர் |
|---|---|---|---|
| கோழி | கோழிக் குஞ்சு | மான் | மான் கன்று |
| கிளி | கிளிக் குஞ்சு | ஆடு | ஆட்டுக் குட்டி |
| **விலங்கு** | **இளமைப் பெயர்** | எலி | எலிக்குஞ்சு |
| அணில் | அணிற்பிள்ளை | குதிரை | குதிரைக்குட்டி |
| கீரி | கீரிப்பிள்ளை | பன்றி | பன்றிக்குட்டி |
| பசு | பசுவின் கன்று | குரங்கு | குரங்குக்குட்டி |
| நாய் | நாய்க்குட்டி | கழுதை | கழுதைக்குட்டி |
| புலி | புலிப் பறழ் | பூனை | பூனைக்குட்டி |
| சிங்கம் | சிங்கக் குருளை | யானை | யானைக் கன்று |

### பறவை, விலங்குகளின் இருப்பிடம்

| பறவை, விலங்கு | இருப்பிடம் |
|---|---|
| கோழி | கோழிக்கூண்டு |
| குருவி | குருவிக்கூடு |
| சிலந்தி | சிலந்திவலை |
| ஆடு | ஆட்டுப்பட்டி |
| மாடு | மாட்டுத் தொழுவம் |
| குதிரை | குதிரைக் கொட்டில் |
| யானை | யானைக்கூடம் |
| கறையான் | கறையான்புற்று |
| எலி | எலிவளை |
| நண்டு | நண்டுவளை |

### வினை மரபு {செயல் மரபு}

| | | | |
|---|---|---|---|
| 1. சோறு உண்டான் | 16. செடி நடு | 31. மருந்து புகட்டு | 46. மாத்திரை விழுங்கு |
| 2. முறுக்குத் தின்றான் | 17. தீ மூட்டு | 32. விளக்கை ஏற்று | 47. உணவைப் பரிமாறு |
| 3. பால் பருகினான் | 18. அம்பு எய்தார் | 33. வேப்பிலை பறி | 48. தயிர் கடைந்தாள் |
| 4. தண்ணீர் குடித்தான் | 19. அடுப்பு மூட்டு | 34. நீர்பாய்ச்சு | 49. பால் காய்ச்சினாள் |
| 5. பூ பறித்தாள் | 20. இலை பறி | 35. படம் வரை | 50. கூரை வேய்ந்தார் |
| 6. ஓவியம் புனைந்தார் | 21. அப்பம் தின் | 36. பாடல் இயற்று | 51. நெய்யை உருக்கு |
| 7. கூடை முடைந்தார் | 22. இட்லி அவி | 37. வேல் எறி | 52. சிற்பம் செதுக்கினார் |
| 8. நூல் நூற்றார் | 23. சோறு உண் | 38. செய்யுள் இயற்று | 53. வாடை அடித்தது |
| 9. உணவு சமைத்தார் | 24. தண்ணீர் பருகு | 39. உப்பை இடு | 54. அவலை மெல்லு |
| 10. பாய் பின்னினர் | 25. நகை அணி | 40. சோற்றை வடி | 55. மாலை தொடுத்தாள் |
| 11. ஆடை நெய்தார் | 26. உணவூட்டு | 41. தயிர் கடை | 56. பழம் தின் |
| 12. சுவர் எழுப்பினர் | 27. கதவைச்சாத்து | 42. நாவை மடி | 57. வெற்றிலை கிள்ளு |
| 13. மரம் வெட்டினார் | 28. குடம் வனை | 43. கல் உடை | 58. சாறு பிழி |
| 14. உமி கருக்கினான் | 29. சுவர் எழுப்பு | 44. சந்தனம் பூசு | 59. விறகைப் பிள |
| 15. வற்றல் வறுத்தான் | 30. முதுகை வளை | 45. காய்கறி அரி | 60. எண்ணெய் தேய் |

* *புத்தக வினாக்களுக்கு பக்க எண் : 29(இயல்– 1) காண்க* *

## 3. வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

**வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக :**

1. மொழியின் தனிசிறப்பானக் கூறுகளும், அவற்றை கையாளுகின்ற வகைகளும் உந்துச்சக்தியாக அமைகின்றன.
   மொழியின் தனி**ச்**சிறப்பான கூறுகளும் அவற்றை**க்** கையாளுகின்ற வகைகளும் உந்து சக்தியாக அமைகின்றன.
2. முல்லைகலியில், காளைகளில் பல இனங்களை காட்டுகிறச் சொற்கள் நிரம்பிகிடக்கின்றன.
   முல்லை**க்** கலியில், காளைகளில் பல இனங்களை**க்** காட்டுகிற சொற்கள் நிரம்பி**க்** கிடக்கின்றன.
3. இயற்கையை போற்றுகிறச் சமூகமாக தமிழ்சமூகம் என்றைக்கும் இருந்து வருகிறது.
   இயற்கையை**ப்** போற்றுகிற சமூகமாக தமிழ்**ச்**சமூகம் என்றைக்கும் இருந்து வருகிறது.
4. வங்கடலில் உருவான குறைந்தக் காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஒன்று நாகபட்டினத்திற்கு தென்கிழக்கே ஐந்நூறு கிலோமீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது.
   வங்க**க்** கடலில் உருவான குறைந்த காற்றழுத்த**த்** தாழ்வு மண்டலம் ஒன்று நாக**ப்**பட்டினத்திற்கு**த்** தென்கிழக்கே ஐந்நூறு கிலோமீட்டர் தூரத்தில் மையம் கொண்டுள்ளது.
5. தாய்வழிசொத்துகள் பெண்டிருக்கே போய்சேர்ந்தன என்பதை மருத திணைபாடல் கூறுகிறது.
   தாய்வழி**ச்** சொத்துகள் பெண்டிருக்கே போய்**ச்**சேர்ந்தன என்பதை மருத**த்** திணை**ப்**பாடல் கூறுகிறது.

* *புத்தக வினாக்களுக்கு பக்க எண் : 138 (இயல்– 4) காண்க* *

| வ.எண் | வல்லெழுத்து மிகும் இடங்கள் | எ.கா |
|---|---|---|
| 1. | கோடி, அரை, பாதி ஆகிய எண்ணுப்பெயர்களின் பின் மிகும். | கோடிக்கரை, அரைப்பங்கு, பாதிக்கட்டணம் |
| 2. | ஒன்று முதல் பத்து வரையிலான எண்ணுப் பெயர்களுள், எட்டு, பத்து ஆகிய இரண்டின்பின் மட்டுமே வலி மிகும். | எட்டுக்கால், பத்துப்பாட்டு |
| 3. | திசைப்பெயர்களின்பின் வலி மிகும் | கிழக்குப் புறம், வடக்குப் பக்கம், மேற்குத்திசை, தெற்குத்தெரு |
| 4. | உவமைத்தொகைகளின்பின் உருவகங்களின்பின் மிகும் | முத்துப்பல், வாழ்க்கைப்படகு, கண்ணீரப்பூக்கள் |
| 5. | இரண்டாம், நான்காம், ஏழாம் வேற்றுமையில் மிகும். | மழைநீரைச்சேமிப்போம், தம்பிக்குக்கொடுத்தான், மனைப்புகுந்தார் |
| 6. | அஃறிணை ஆறாம் வேற்றுமைத்தொகையில் மிகும். | யானைக்கொம்பு |
| 7. | இரண்டாம், மூன்றாம், நான்காம், ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையில் மிகும். | கஞ்சித்தொட்டி, அட்டைப்பெட்டி, தலைமுடிச்சாயம், வேர்க்கடலை |
| 8. | ஓரெழுத்து ஒருமொழியின் பின் மிகும். | கைப்பெட்டி, தைப்பொங்கல் |
| 9. | ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சத்தின்பின் மிகும். | ஓடாக்குதிரை, பாடாப்பாட்டு |
| 10. | இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் மிகும். | சாரைப்பாம்பு, தைத்திங்கள் |
| 11. | 'எ' என்னும் வினா எழுத்தின்பின் மிகும். | எப்பொருள் |
| 12. | சுட்டெழுத்துகளின் பின் வல்லினம் மிகும். | அப்புத்தகம், இப்பெட்டி |
| 13. | சுட்டுத்திரிபுகளின் பின் வல்லினம் மிகும். | அந்தப்பெட்டி, இந்தப்புத்தகம் |
| 14. | அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு, அவ்வகை, இவ்வகை, எவ்வகை ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகும் | அப்படிச்சொன்னான், இப்படிப்பேசலாமா?, எப்படித்தருவாய்?, அங்குப்பார், இங்குக்காண், எங்குச்சென்றாய்?, அவ்வகைப்பூக்கள், இவ்வகைச்செடி, எவ்வகைக்கொள்கை |
| 15. | அகர, இகர ஐகார, முற்றியலுகர ஈற்றுச்சொற்களின் பின் மிகும். | தொலைக்காட்சி (ஐ), வரச்சொன்னார் (அ), ஓடிச்சென்றான் (இ), திருக்கோயில் (உ) |
| 16. | ஆய், போய் என்றும் வினையெச்சங்களின்பின் மிகும். | வருவதாய்ச்சொன்னான், போய்ப்பார்த்தான் |
| 17. | 'இனி', 'தனி' என்ற சொற்களின்பின் வரும் வலி மிகும் | இனிக்காண்போம், தனிப்பிறவி |
| 18. | முன்னர், பின்னர் என்ற சொற்களின்பின் வரும் வலி மிகும் | முன்னர்க்கண்டோம், பின்னர்ப்பார்ப்போம் |
| 19. | சால, தட, தவ, குழ ஆகிய சொற்களின்பின் வலி மிகும் | சாலப்பேசு, தடக்கை, தவச்சாலை, குழக்கயிறு |
| 20. | கூட, விட ஆகிய சொற்களின்பின் வலி மிகும் | கூடக்கொடு, அவனைவிடப்பெரியவன் |

| வ.எண் | வல்லெழுத்து மிகா இடங்கள் | எ.கா |
|---|---|---|
| 1. | அது, இது, எது, ஏது, யாது, அவை, எவை, இவை, யாவை, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு ஆகிய சொற்களின்பின் மிகாது. | அதுகண், ஏது கண்டாய், எவை சிறந்தன, அத்தனை புதுமையா, அவ்வளவு பசுக்கள், இது புத்தகம், யாது பொருள், இவை புதியவை, இத்தனை பழமை, இவ்வளவு தங்கம், எது தந்தாய், அவை பெரியன, யாவை போயின, எத்தனை பண்பாடு?, எவ்வளவு கண்கள் |
| 2. | வினாப்பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகா | எது செய்தாய்? என்னகொடுப்பாய்? |
| 3. | எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வலி மிகாது | மூன்று காடுகள், ஆறு பசுக்கள் |
| 4. | அடுக்குத்தொடர், இரட்டைக்கிளவிகளில் மிகா | பேருந்து பேருந்து! கலகல, தகதக, சடசட, பளபள |
| 5. | வியங்கோள் வினைமுற்றின்பின் மிகாது. | வாழிய செந்தமிழ்! அழிக தீயொழுக்கம்! |
| 6. | உம்மைத்தொகையில் மிகாது. | தாய்தந்தை, இரவுபகல் |
| 7. | விளித்தொடரில், எழுவாய்த் தொடரில் மிகா | கண்ணா தா, தம்பி போ! தங்கை பாடினாள் |
| 8. | பெயரெச்சம் (அ) எதிர்மறைப் பெயரெச்சங்களின் பின் மிகாது. | நல்ல பாம்பு, ஓடிய குதிரை, பாடாத பாட்டு, ஓடாத சக்கரம் |
| 9. | வினைத்தொகையில் மிகாது. | பாய்புலி, சுடுசோறு |
| 10. | இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஏழாம் வேற்றுமைத்தொகைகளில் வலி மிகா | தமிழ் படித்தான், கை தட்டினான், வீடு சென்றான், வரை பாய்ந்தான், வீடு தங்கினான் |
| 11. | 'கள்' என்னும் இறுதிநிலைக்குமுன் (வன்தொடர்க்குற்றியலுகரம்) மிகாது. | வாழ்த்துகள், எழுத்துகள், தோப்புகள் |
| 12. | 'படி' என முடியும் வினையெச்சங்களின் பின் மிகா | தரும்படி சொன்னாள், வரும்படி வேண்டினார் |


waytosuccess

## 4. நிறுத்தற்குறியீடு

### பொதுவான குறிப்புகள்

| வகைகள் | எ.கா |
|---|---|
| **காற்புள்ளி (,)**<br>பொருள்களை எண்ணும் நிலை, விளி, வினையெச்சம், மேற்கோள் குறிகளுக்குமுன், எனவே, எனினும், ஆயினும், ஆதலின், ஆதலால், ஆகவே, முதலிய இணைப்புச் சொற்களின்பின், முகவரியில் இறுதிவரி தவிர்த்துப் பிற இடங்களில் காற்புள்ளி இடவேண்டும். | ❖ நிலம், நீர், தீ, காற்று, வான் என்பன ஐம்பூதங்கள்.<br>❖ மகனே, நான் சொல்வதைக் கேள். |
| **அரைப்புள்ளி (;)**<br>ஒரே எழுவாயில் பல தொடர்கள் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும், ஒரே எழுவாய்க்குரிய உடன்பாட்டுக் கருத்தும், எதிர்மறைக் கருத்தும் தொடர்ந்து வருகின்ற இடங்களிலும் அரைப்புள்ளி இட வேண்டும். | ❖ சிலப்பதிகாரம், செந்தமிழ்க் காப்பியம் ; முத்தமிழ்க் காப்பியம் ; மூவேந்தரையும் பாடும் காப்பியம்.<br>❖ இளமுருகு என்பானிடம் நிறைய அறிவுண்டு; பொறுமை இல்லை. |
| **முக்காற் புள்ளி (:)**<br>ஒருவர் கூற்றை விளக்குதல், சிறு தலைப்பு, நூற்பகுதி எண் முதலியன விவரங்களைப் பட்டியல் முறையில் ஒன்றன்பின் ஒன்றாகத் தரும்போது முக்காற்புள்ளி இடவேண்டும். | ❖ மத்தேயு, 8 : 6<br>❖ பெயர் : கனிமொழி<br>❖ முக்கனி : மா, பலா, வாழை |
| **முற்றுப் புள்ளி (.)**<br>சொற்றொடர் இறுதி, முகவரி இறுதி, நாள் இறுதி, சொற் குறுக்கம், கையெழுத்து முதலிய இடங்களில் முற்றுப்புள்ளி இடப்படும். | ❖ கந்தன் கடைக்குச் சென்றான்.<br>❖ 29.10.2019<br>❖ அண்ணா நகர், பாலக்கரை, திருச்சி-20. |
| **வினாக்குறி (?)**<br>ஒரு வினாத்தொடர் முற்றுத்தொடராகவும் நேர்க்கூற்றுத் தொடராகவும் இருப்பின், இறுதியில் வினாக்குறி இடவேண்டும். | ❖ இங்கே இருப்பவர் யார்?<br>❖ நீ தருவாயா? |
| **உணர்ச்சிக் குறி (!)**<br>மகிழ்ச்சி, அச்சம், வியப்பு, அவலம், வாழ்த்துதல், வரவேற்றல், வைதல் ஆகிய உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் தொடர்களின் பின்(!) இக்குறி இடல்வேண்டும். | ❖ வெற்றி! வெற்றி!<br>❖ பாம்பு! பாம்பு!<br>❖ வாழ்க! வாழ்க! |
| **ஒற்றை மேற்கோள்குறி (‘ ’)**<br>இக்குறி தற்சுட்டின்கண்ணும் (ஓர் எழுத்தேனும் சொல்லேனும் சொற்றொடரேனும் தன்னையே குறித்தல்), பிறர் கூற்றாக வரும் இடத்தும், கட்டுரைப் பெயரும், நூற்பெயர் வருமிடத்தும் ஒற்றை மேற்கோள்குறி வரும். | ❖ ‘ஏ’ என்று சொன்னான்.<br>❖ திருவள்ளுவர், ‘திருக்குறள்’ என்னும் நூலை இயற்றினார். |
| **இரட்டை மேற்கோள்குறி (“ ”)**<br>பொன்மொழிகளைக் குறிப்பிடும் இடத்தும், நேர்க்கூற்றுத் தொடரிலும் இரட்டை மேற்கோள்குறி இடவேண்டும். | ❖ இராமன், “நாளை வருகிறேன்” என்று கூறிச் சென்றான்.<br>❖ “அறம் செய விரும்பு” என்றார் ஔவையார். |

Way to success

| வி.எண் : 29 – 31 | பகுதி – III : பிரிவு – 1<br>உரைநடை பொருளுணர் திறன் | 2× 3 = 6 |
|---|---|---|

**குறிப்பு :**
- இப்பகுதியில் உரைநடைப் பகுதியிலிருந்து மூன்று மதிப்பெண் வினாக்கள் 3 கொடுத்து 2 எழுதுமாறு கேட்கப்படும்.
- ஒரு வினா 'உரைப்பத்தியைப் படித்து விடை எழுதுக' என்ற கேள்வி கேட்கப்படும்.
- மற்ற 2 கேள்விகளும் உரைநடை பகுதியிலிருக்கும் குறுவினா, சிறுவினா பகுதிகளிலிருந்து கேட்கப்படும்.

## உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

**குறிப்பு :**
- ஒரு உரைப்பத்தி கொடுக்கப்பட்டு அதிலிருந்து 3 வினாக்கள் கேட்கப்படும்.
- உரைப்பத்தியை ஓரிரு முறை நன்கு படித்துவிட்டு வினாவிற்கேற்ற விடையைச் சொந்த நடையில் எழுத வேண்டும். உரைப்பத்தியை அப்படியே எழுதுவதைத் தவிர்க்க வேண்டும்.
- வினாவில் இடம்பெற்றுள்ள வார்த்தை உரைப்பத்தியில் எங்கே உள்ளது எனப் பார்த்து பொருத்தமான விடையை எழுதவும். தலைப்பு எழுதுமாறு கேட்டால் பத்தியில் அடிக்கடி வரும் வார்த்தையை தலைப்பாக எழுதவும்.
- 42-வது கேள்வியில் செவிமாற்றுத் திறன் மாணவர்களுக்கான கேள்வியும் இவ்வடிவிலேயே அமையும். அங்கு 5 கேள்விகள் கேட்கப்படும்.

1. தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர். **[MAR - 2024]**

**i) தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு?**
தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.

**ii) யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது?**
விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது.

**iii) நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர்?**
நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அறிந்திருந்தனர்.

**iv) உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர்?**
உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

**v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.**
'விருந்தோம்பல் / வாழை இலை'

2. ஜெர்மனியில் ஓர் ஆண்டில் பிற மொழிகளிலிருந்து 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன. புள்ளி விவரப்படி அதிகமான தமிழ் நூல்கள் பிறமொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் முதலிடம் ஆங்கிலம், இரண்டாமிடம், மலையாளம். மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது. **[JUN - 2023]**

**(i) ஜெர்மனியில் ஓர் ஆண்டில் எத்தனை நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன?**
ஜெர்மனியில் ஓர் ஆண்டில் 5000 நூல்கள் வரை மொழி பெயர்க்கப்படுகின்றன.

**(ii) தமிழ் நூல்கள் எந்த மொழியில் அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது?**
தமிழ் நூல்கள் ஆங்கில மொழியில் அதிக அளவில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**(iii) மொழிபெயர்ப்பின் பயன் என்ன?**
மொழிபெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகிறது.

3. மேற்கு என்பதற்குக் குடக்கு என்னும் பெயருமுண்டு. மேற்கிலிருந்து வீசும் போது நான் கோடை எனப்படுகிறேன். மேற்கிலிருந்து அதிக வலிமையோடு வீசுகிறேன். வறண்ட நிலப்பகுதியில் இருந்து வீசுவதால் வெப்பக்காற்றாகிறேன். வடக்கு என்பதற்கு வாடை என்னும் பெயருமுண்டு. வடக்கிலிருந்து வீசும் போது நான் வாடைக் காற்று எனப்படுகிறேன். நான் பனிப் பகுதியிலிருந்து வீசுவதால் மிகவும் குளிர்ச்சியான ஊதைக் காற்று எனவும் அழைக்கப்படுகிறேன். **[APR-23]**

**i) மேற்கிலிருந்து வீசும் காற்று யாது?**
மேற்கிலிருந்து வீசும் காற்று கோடை எனப்படுகிறது.

**ii) ஊதைக் காற்று என்று அழைப்பதேன்?**
பனிப் பகுதியிலிருந்து வீசும் மிகவும் குளிர்ச்சியான காற்று ஊதைக் காற்று என அழைக்கப்படுகிறது.

**iii) மேற்கு என்பதன் மற்றொரு பெயர் என்ன?**
மேற்கு என்பதன் மற்றொரு பெயர் குடக்கு.

**iv) வாடை என்பது எத்திசையைக் குறிக்கிறது?**
வாடை என்பது வடக்கு திசையைக் குறிக்கிறது.

**v) இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினை தருக.** 'காற்று'

Way to Success

| | |
|---|---|
| 4. "போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றி நிகழ்த்திக் காட்டும் கலைகளில் பொய்க்கால் குதிரையாட்டமும் ஒன்று. மரத்தாலான பொய்க்காலில் நின்றுகொண்டும் குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்துகொண்டும் ஆடும் ஆட்டமே பொய்க்கால் குதிரையாட்டம். அரசன், அரசி வேடமிட்டு ஆடப்படும் இவ்வாட்டம் புரவி ஆட்டம், புரவி நாட்டியம் என்ற பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்ததாகக் கூறப்படுகிறது. | **i) எப்பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது? [APR – 2023]**<br>"போலச்செய்தல்" பண்புகளைப் பின்பற்றிப் பொய்க்கால் குதிரையாட்டம் நிகழ்த்தப்படுகிறது.<br>**ii) பொய்க்கால் குதிரையாட்டத்தின் வேறுபெயர்கள் யாவை?**<br>❋ புரவி ஆட்டம் ❋ புரவி நாட்டியம்<br>**iii) யாருடைய காலத்தில் இது தஞ்சைக்கு வந்தது?**<br>இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்தது.<br>**iv) இப்பத்திக்குப் பொருந்திய தலைப்பு தருக.**<br>பொய்க்கால் குதிரையாட்டம் |
| 5. அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அறம் கூறு அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அறஅவையம் தனிச்சிறப்புப் பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது; அங்குள்ள அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கது என்கிறது. | **i) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தவை எவை?**<br>அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. **[MAY–2022]**<br>**ii) அவையம் பற்றி புறநானூறு கூறுவது யாது?**<br>அறம் கூறும் அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு.<br>**iii) மதுரையில் இருந்த அவையம் எப்படி இருந்ததாக மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது?**<br>மதுரையில் இருந்த அவையம் துலாக்கோல் போல நடுநிலை மிக்கதாக இருந்தது என்று மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. |
| 6. மனிதன் தனியானவன் அல்லன். அவன் சமூகக் கடலின் ஒரு துளி. அவனுக்குள்ளே சமூகம் - சமூகத்துக்குள்ளே அவன். மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் எவ்வளவுக்கெவ்வளவு தன்னை இணைத்துக் கொள்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது. இந்த மகிழ்ச்சிப்பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும். சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர். அறநெறிக்கால அறங்கள் சமயம் சார்ந்தவை. ஆனால் சங்ககால அறங்கள் இயல்பானவை. | **i) மனிதன் எப்படிப்பட்டவன்? [JUN – 2023, MAY–2022]**<br>மனிதன் தனியானவன் அல்லன். மனிதன் சமூகக் கடலின் ஒரு துளி.<br>**ii) மனிதனுக்கு எப்போது மகிழ்ச்சி பெருகுகிறது?**<br>மனிதன் எல்லாரோடும் எல்லாவற்றோடும் தன்னை இணைத்துக் கொள்ளும்போது அவனுடைய மகிழ்ச்சி பெருகுகிறது.<br>**iii) மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க மனிதன் என்ன செய்ய வேண்டும்?**<br>மனிதன் மகிழ்ச்சிப் பெருக்கில் திளைக்க வேண்டும் என்றால் அனைத்தையும் ஊடுருவிச் செல்லும் பொது விதியான அறத்தை மனிதன் ஏற்க வேண்டும்.<br>**iv) அறநெறிக்காலம் எனப்படுவது எது?**<br>சங்க காலத்திற்குப் பிந்தைய அற இலக்கியங்களின் காலத்தை அறநெறிக்காலம் என்பர்.<br>**v) சங்ககால அறங்கள் எப்படிப்பட்டவை?**<br>சங்ககால அறங்கள் இயல்பானவை. |
| 7. தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும். பிற நாடுகளிலுள்ள கூலங்களெல்லாம் சிலவாகவும் சில்வகைப்பட்டவனவாகவுமிருக்க, தமிழ்நாட்டிலுள்ளவையோ பலவாகவும் கழிபல வகைப்பட்டனவாகவும் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக கோதுமையை எடுத்துக் கொள்ளின் அதில் சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை முதலிய சில வகைகளேயுண்டு. ஆனால், தமிழ்நாட்டு நெல்லிலோ, செந்நெல், வெண்ணெல், கார்நெல் என்றும், பல வகைகள் இருப்பதுடன் அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. | **i) தமிழ்நாட்டு பொருள் வளமுடையது என்பது எதனால் விளங்கும்? [SEP – 2021]**<br>தமிழ்நாடு எத்துணைப் பொருள் வளமுடையதென்பது அதன் விளைபொருள் வகைகளை நோக்கினாலே விளங்கும்.<br>**ii) கோதுமையின் வகைகளைக் குறிப்பிடுக.**<br>கோதுமையின் வகைகள் : சம்பாக் கோதுமை, குண்டுக் கோதுமை, வாற்கோதுமை<br>**iii) தமிழ்நாட்டு நெல்லின் வகைகளை எழுதுக.**<br>தமிழ்நாட்டில் செந்நெல், வெண்ணெல், கார்நெல் போன்ற வகைகள் உண்டு. அவற்றுள் சம்பாவில் மட்டும் ஆவிரம்பூச்சம்பா, ஆனைக்கொம்பன் சம்பா, குண்டுச் சம்பா, குதிரைவாலிச் சம்பா, சிறுமணிச் சம்பா, சீரகச் சம்பா முதலிய அறுபது உள்வகைகள் உள்ளன. |

waytosuccess

| வி.எண் : 32 – 34★ | பகுதி – III : பிரிவு – 2 செய்யுள் வினாக்கள் | 2× 3 = 6 |
|---|---|---|

**குறிப்பு :** இப்பகுதியில் செய்யுள் பகுதியிலிருந்து மூன்று மதிப்பெண் வினாக்கள் 3 வினாக்கள் கொடுத்து 2 எழுதுமாறு கேட்கப்படும். அவற்றுள் ஒரு வினா கட்டாய மனப்பாடச் செய்யுள் ஆகும்.

## வி.எண் : 34★ கட்டாய வினா – மனப்பாடச் செய்யுள்

திருக்குறள் தவிர ஏனைய மனப்பாடச் செய்யுள்களிலிருந்து இரு பாடல்கள் கொடுத்து ஒன்று எழுதுமாறு கேட்கப்படும்.

## வினா எண் : 34★ கட்டாய வினா – மனப்பாடச் செய்யுளை அடிபிறழாமல் எழுதுக.

### 1. அ) அன்னை மொழியே

1. "அன்னை மொழியே" - எனத் தொடங்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் பாடல். **[MAY – 2022]**
2. 'அன்னை மொழியே' எனத் தொடங்கி 'பேரரசே' என முடியும் 'அன்னை மொழியே' பாடல். **[SEP – 2021, PTA – 4, 6]**
3. 'தென்னவ மகளே!' எனத் தொடங்கி 'வாழ்த்துவமே' என முடியும் 'அன்னை மொழியே' பாடல். **[MAR-24, PTA-1]**

### 2. ஆ) முல்லைப்பாட்டு

4. 'சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்' எனத்தொடங்கி 'நன்னர் நன்மொழி கேட்டனம்' என முடியும் முல்லைப்பாட்டு. **[PTA - 3]**
5. "சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்" எனத் தொடங்கும் நப்பூதனாரின் பாடல்.

### 3. அ) காசிக்காண்டம்

6. 'விருந்தினனாக ஒருவன் வந்து எதிரின்' எனத் தொடங்கும் காசிக்காண்டப் பாடல். **[PTA - 2]**
7. "இவ்வொன்பான் ஒழுக்கமும் வழிபடும் பண்பே" - என முடியும் காசிக்காண்டப் பாடல். **[PTA - 5]**
8. "விருந்தினனாக ஒருவன்" எனத் தொடங்கும் அதிவீரராம பாண்டியரின் பாடல்.

### 4. அ) பெருமாள் திருமொழி

9. "வாளால் அறுத்துச் சுடினும்"எனத் தொடங்கும் பெருமாள் திருமொழிப் பாடல். **[MAR-24, MDL-19, AUG-22]**
10. "ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே" என முடியும் குலசேகராழ்வாரின் பாடல்.

### 5. அ) நீதிவெண்பா

11. "அருளைப் பெருக்கி" எனத் தொடங்கி 'போற்று' என முடியும் நீதிவெண்பா பாடல். **[APR – 2023]**

### 5. ஆ) திருவிளையாடற்புராணம்

12. "புண்ணியப் புலவீர் யான்......." எனத் தொடங்கும் திருவிளையாடற்புராணப் பாடல். **[SEP-2020, PTA-5]**
13. 'தணிந்தது என்னா' என முடியும் பரஞ்சோதி முனிவரின் பாடல்.

### 6. ஆ) முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்

14. 'செம்பொ னடிச்சிறு கிண்கிணியோடு'எனத் தொடங்கி 'சுட்டி பதிந்தாட' என முடியும் 'முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்' பாடல். **[PTA - 4]**
15. 'புரிக்குக னாடுக செங்கீரை' என முடியும் குமரகுருபரரின் பாடல்.

### 6. இ) கம்பராமாயணம்

16. "தண்டலை மயில்க ளாடத்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல். **[SEP - 2021]**
17. 'தண்டலை மயில்க ளாட' எனத் தொடங்கி 'மருதம்வீற்றி ருக்கும்மாதோ' என முடியும் கம்பரின் பாடல்.
18. 'வெய்யோன் ஒளி' எனத் தொடங்கி 'அழகு உடையான்' என முடியும் கம்பரின் பாடல்.

### 7. இ) சிலப்பதிகாரம்

19. "தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல். **[PTA – 1, AUG - 2023]**
20. "தூசும் துகிரும் ஆரமும் அகிலும்" - எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல். **[PTA - 6]**
21. 'தூசும் துகிரும்' எனத் தொடங்கி 'கூல வீதியும்' என முடியும் இளங்கோவடிகளின் பாடல்.

### 8. ஆ) காலக்கணிதம்

22. "மாற்றம்" எனத்தொடங்கி "சாலை" என முடியும் காலக்கணிதப் பாடல். **[APR - 2023]**
23. 'மாற்றம் எனது மானிடத் தத்துவம்' எனத்தொடங்கி 'தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்!' என முடியும் காலக்கணிதப் பாடல். **[PTA - 3]**
24. "நாட்டின் சட்டம்" என முடியும் கண்ணதாசனின் பாடல்.

### 9. ஆ) தேம்பாவணி

25. "நவமணி வடக்க யில்போல்" எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல். **[MAY - 2022, SEP – 2020]**
26. "ஒலித்து அழுவ போன்றே" என முடியும் தேம்பாவணிப் பாடல். **[PTA – 2, MDL - 19]**
27. 'நவமணி வடக்க யில்போல்' எனத்தொடங்கி 'ஒலித்து அழுவ போன்றே' என முடியும் வீரமாமுனிவரின் பாடல்

way to success

| வி.எண் : 35 – 37 | பகுதி – III : பிரிவு – 3 இலக்கண வினாக்கள் | 2× 3 = 6 |
|---|---|---|

**குறிப்பு :** இப்பகுதியில் இலக்கணப் பகுதியிலிருந்து மூன்று மதிப்பெண் வினாக்கள், 3 வினாக்கள் கொடுத்து 2 எழுதுமாறு கேட்கப்படும். அணி மற்றும் அலகிடுதல் வினாக்கள் கட்டாயம் கேட்கப்படும் கேள்விகளாகும். அவற்றை நன்கு பயிற்சி செய்வதற்கு வசதியாக ஒரே இடத்தில் தொகுத்து வழங்கப்பட்டுள்ளது.
**இலக்கணப் பகுதி : பக்க எண் : 46, 80, 123, 157, 192, 239, 279, 318, 352**

## அலகிடுதல்

**அலகிடுதல் :** திருக்குறளின் ஏழு சீரையும் பிரித்து, அசை பார்த்து, அசைக்கேற்ற வாய்பாடு காணுதல். பாட புத்தகத்தில் உள்ள அனைத்து குறள்களுக்கான அலகிட்டு வாய்ப்பாடும் இங்கே தொகுத்து தரப்பட்டுள்ளது.

| அசை : | | | |
|---|---|---|---|
| | ✸ நேரசை | ✳ தனிக்குறில் - ப<br>✳ தனிநெடில் - மா | ✳ தனிக்குறில் ஒற்று - பர்<br>✳ தனிநெடில் ஒற்று - மாண் |
| | ✸ நிரையசை | ✳ இரண்டு குறில் - செய<br>✳ குறில் நெடில் - படா | ✳ இரண்டு குறில் ஒற்று - செயல்<br>✳ குறில் நெடில் ஒற்று - படாம் |

**சீர் :**

| ஓரசைச்சீர் | |
|---|---|
| நேர் | நாள் |
| நிரை | மலர் |
| நேர்பு | காசு |
| நிரைபு | பிறப்பு |

| ஈரசைச்சீர் | |
|---|---|
| நேர் நேர் | தேமா |
| நிரை நேர் | புளிமா |
| நிரை நிரை | கருவிளம் |
| நேர் நிரை | கூவிளம் |

| மூவசைச்சீர் | |
|---|---|
| நேர் நேர் **நேர்** | தேமாங்**காய்** |
| நிரை நேர் **நேர்** | புளிமாங்**காய்** |
| நிரை நிரை **நேர்** | கருவிளங்**காய்** |
| நேர் நிரை **நேர்** | கூவிளங்**காய்** |
| நேர் நேர் **நிரை** | தேமாங்**கனி** |
| நிரை நேர் **நிரை** | புளிமாங்**கனி** |
| நிரை நிரை **நிரை** | கருவிளங்**கனி** |
| நேர் நிரை **நிரை** | கூவிளங்**கனி** |

திருக்குறளில் உள்ள ஏழு சீர்களில் முதல் ஆறு சீர்களுக்கு முதல் முறைப்படியும், ஏழாம் சீரை மட்டும் இரண்டாம் முறைப்படி அலகிட வேண்டும்.

***முறை 1 :*** **முதல் ஆறு சீர்களுக்கு கீழ்க்கண்டவாறு அலகிடுக.**

**எ.கா** : எய்துவர் **படி – 1 : சீர்பிரித்தல் :** - எய் / துவர் (ஒற்று வரும் இடத்தை பிரிக்கவும்)
**படி – 2 : அசையை எழுதுதல் :** நேர் நிரை
**படி – 3 : வாய்பாடு காணுதல் :** கூவிளம்

**எய்துவர்** என்ற சீரின் வாய்பாடு **கூவிளம்** ஆகும்.

***முறை 2 :*** **ஏழாம் சீருக்கு கீழ்க்கண்டவாறு அலகிடுக.**

ஏழாவது சீர் மட்டும் நாள், மலர், காசு, பிறப்பு என்ற நான்கு வாய்பாட்டில் முடிவடையும்.

| அசை | சொல்லை சீர் பிரிக்கும் முறை | | வாய்பாடு |
|---|---|---|---|
| **நேர்** | • தனிக்குறில் ஒற்று (கண்) | • தனிநெடில் ஒற்று (காண்) | **நாள்** |
| **நிரை** | • இரண்டு குறில் (பழி)<br>• குறில் நெடில் (பவை) | • இரண்டு குறில் ஒற்று (கெடும்)<br>• குறில் நெடில் ஒற்று (விழார்) | **மலர்** |
| **நேர்பு** | *நேர் அசையுடன் உகர எழுத்து சேர்ந்து வருதல்* (தற்று) | | **காசு** |
| **நிரைபு** | *நிரை அசையுடன் உகர எழுத்து சேர்ந்து வருதல்* (தமைச்சு) | | **பிறப்பு** |

**அலகிட்டு வாய்பாட்டில் கவனிக்க வேண்டியவை :**
- ✷ அலகிடுதலில் கண்டிப்பாக சீர் பிரித்து காட்ட வேண்டும்.
- ✷ ஏழாம் (கடைசி) சீரின் வாய்பாட்டை இறுதியாக தனியே எடுத்து எழுத வேண்டும்.
- ✷ பாடப்புத்தக திருக்குறளில் மூவசை சீர் காய் சீராக மட்டுமே வரும். கனி சீர் வராது.

**குறிப்பு:** இப்பகுதியை முழுமையாக புரிந்து படிப்பதற்கு மாணவர்கள் சிரமப்படுகின்றனர். இதில் 2 எளிய வழி முறைகள் தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. எது உங்களுக்கு எளிதாக உள்ளதோ அதனைப் பின்பற்றவும். இதில் சில விதிவிலக்குகள் இருக்கலாம். ஆனால் பாடப்புத்தக திருக்குறள்கள் பெருமளவு ஒத்து இருக்கிறது.

## எளிய வழிமுறை - 1

❖ முதலில் கட்டம் வரைந்து "சீர், அசை, வாய்பாடு" என தலைப்பிட்டு, கொடுக்கப்பட்ட திருக்குறளின் ஏழு சீர்களை (வார்த்தைகளை) ஒன்றன்பின் ஒன்றாக "சீர்" என்ற தலைப்பின் கீழ் எழுதவும்.

❖ ஒவ்வொரு எழுத்துகளுக்கும் கீழே குறிப்பிட்டுள்ளவாறு பென்சிலால் எண்ணிடவும்.

➔ **குறில்** எழுத்துகளை 1 எனக் கொள்க. ➔ **நெடில்** எழுத்துகளை 2 எனக் கொள்க.
➔ புள்ளி வைத்த **ஒற்று** எழுத்துகளை 0 எனக் கொள்க.

❖ கீழ்க்கண்ட எண்களுக்கான அசைகளை சரியாக பிரித்து அதனை 'அசை' என்ற தலைப்பின் கீழ் எழுதவும்.

| நேரசை (1, 2 வரிசை) | |
|---|---|
| **1** | ❖(தனி) **குறில்** எ.கா: த, நி, சு |
| **2** | ❖(தனி) **நெடில்** எ.கா: தா, நீ, சூ |
| **10** | ❖**குறில்** + **ஒற்று** எ.கா: பெண், நில் |
| **20** | ❖**நெடில்** + **ஒற்று** எ.கா: தார், நீர் |
| **100** | ❖குறில் + ஒற்று + ஒற்று |
| **200** | ❖நெடில் + ஒற்று + ஒற்று |

| நிரையசை (11, 12 வரிசை) | |
|---|---|
| **11** | ❖**இருகுறில்** எ.கா: நித, கிளி |
| **12** | ❖**குறில்** + **நெடில்** எ.கா: தடா, பகை |
| **110** | ❖**இருகுறில்** + **ஒற்று** **எ.கா:** நிதம், தடம் |
| **120** | ❖**குறில்** + **நெடில்** + **ஒற்று** எ.கா: படார் |
| **1100** | ❖இருகுறில் + ஒற்று + ஒற்று |
| **1200** | ❖குறில் + நெடில் + ஒற்று + ஒற்று |

***முக்கிய குறிப்பு:*** *அசை பிரிக்கும் போது முதலில் வரும் எண்ணை மட்டும் கொண்டு பிரிக்கக்கூடாது. அதற்கடுத்து வரும் எண்ணையும், வார்த்தையையும் கருத்தில் கொண்டு பிரிக்க வேண்டும்.*

உதாரணமாக,

| | |
|---|---|
| 1 2 0 1 0 ✓<br>உ டை த் / தெ ன்<br>**நிரை** + **நேர்** என்பது சரி | 1 2 0 1 0 ✗<br>உ / டை த் / தெ ன்<br>**நேர்** + **நேர்** + **நேர்** என்பது தவறு |

**ஏழாம் சீர் கண்டுபிடிப்பதற்கான வழிமுறை:**

- உகரத்தில் முடியவில்லை எனில் இதே முறையிலேயே அசையை கண்டறிந்து எழுதலாம்.
- உகரத்தில் முடிந்தால் உகர எழுத்தை தவிர மற்ற எழுத்துகளுக்கு எண் இட்டு அசை கண்டறிந்து அதனுடன் 'பு' சேர்த்து எழுத வேண்டும்.

**எடுத்துக்காட்டு**
1 2 0
த மை ச் / சு
நிரை பு

❖ அசையின் எண்ணிக்கையைப் (அசை கட்டத்தில் உள்ள வார்த்தைகளின் எண்ணிக்கை) பொறுத்து, கீழ்க்கண்ட வாய்பாடுகளில் பொருத்தமானவற்றை தேர்ந்தெடுத்து '**வாய்பாடு**' என்ற தலைப்பின் கீழ் எழுதவும்.

| ஈரசைச்சீர் | மூவசைச்சீர் | ஓரசைச்சீர் (ஏழாம் சீர்) |
|---|---|---|
| நேர் + நேர் = தேமா<br>நிரை + நேர் = புளிமா<br>நிரை + நிரை = கருவிளம்<br>நேர் + நிரை = கூவிளம் | முதல் இரு அசைகளுக்கு ஈரசைச்சீர் வாய்பாட்டை எழுதி, கடைசி அசை, 'நேர்'- ஆக இருந்தால் 'காய்' எனவும், 'நிரை'- ஆக இருந்தால் 'கனி' எனவும் எழுதுக. | நேர் – நாள்<br>நிரை – மலர்<br>நேர்பு – காசு<br>நிரைபு – பிறப்பு |

**எ.கா:**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| 1 1 2<br>அ ரு / மை | நிரை + நேர் | **புளிமா** |
| 1 2 0 1 0<br>உ டை த் / தெ ன் | நிரை + நேர் | **புளிமா** |
| 1 2 2 2<br>ற சா / வா / மை | நிரை + நேர் + நேர் | **புளிமாங்காய்** |
| 2 0 1 0<br>வே ண் / டு ம் | நேர் + நேர் | **தேமா** |
| 1 1 2<br>பெ ரு / மை | நிரை + நேர் | **புளிமா** |
| 1 1 0 1<br>மு ய ற் / சி | நிரை + நேர் | **புளிமா** |
| 1 1 0<br>த ரு ம் | நிரை | **மலர்** |

**அலகிடுதலை மூன்றே நிமிட காணொலியில் முழுமையாக தெரிந்துகொள்ள மேற்கண்ட QR code–ஐ scan செய்து பார்க்கவும். (அல்லது) எங்களது Way to Success youtube channel –ஐ பார்க்கவும்.**

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

## எளிய வழிமுறை - 2

**எ.கா:** கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு.

முதலில் கட்டம் வரைந்து "சீா, அசை, வாய்பாடு" என தலைப்பிட்டு, கொடுக்கப்பட்ட திருக்குறளின் ஏழு சீர்களை(வார்த்தைகளை) ஒன்றன்பின் ஒன்றாக "சீர்" என்ற தலைப்பின் கீழ் எழுதவும்.

**குறிப்பு:** ஒற்று/மெய் எழுத்துகள் - புள்ளி வைத்த எழுத்துகள் (க், ங்)
குறில் - குறுகிய ஒலி உடையது (அ, யி)
நெடில் - நீண்டு ஒலிப்பது (ஊ, பா, மை)

**முதல் ஆறு சீர்களுக்கான வழிமுறை:**

✓ **அசை பிரித்தல்**

1. வார்த்தைகளின் நடுவில் ஒற்றெழுத்துகள் இருந்தால் அதற்கடுத்து கோடு போட்டு அசையாக பிரிக்க வேண்டும்.
2. நெடிலுக்கு அடுத்து ஒற்று வராதபோது, அதற்கடுத்து கோடு போட்டு அசையாக பிரிக்க வேண்டும்.
3. பிரிக்கப்பட்ட வார்த்தைகளில் 3-க்கு மேலான எழுத்துகள் இருந்தால் (i) அல்லது பிரிக்காமல் முழு வார்த்தைகள் ஏதும் மீதம் இருந்தால் (ii), முதல் இரண்டு எழுத்துகளுக்கு அடுத்து கோடுபோட்டு அசையாக பிரிக்கவும்.

| | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 3(ii) | கரு/வியும் | | |
| 2 | கா/லமும் | | |
| 1, 2 | செய்/கை/யும் | | |
| 1 | செய்/யும் | | |
| 3(i), 2 | அரு/வினை/யும் | | |
| 1 | மாண்/ட | | |
| | தமைச்சு | | |

✓ **அசை எழுதுதல்:** நீங்கள் அசை பிரித்த சீர்களுக்குரிய அசையின் வகையை(நேர்/நிரை) கண்டறிந்து எழுதவும்.

1. ஓர் எழுத்து மட்டும் இருந்தால் - நேர்
2. ஒற்றில் முடிந்து அதற்கு முன்,
   (i) ஓர் எழுத்து இருந்தால் - நேர்
   (ii) இரண்டு எழுத்து இருந்தால் - நிரை
3. ஒற்று இல்லாமல் 2 எழுத்து இருந்தால் - நிரை

| | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 3, 2(ii) | கரு/வியும் | நிரை நிரை | |
| 1, 2(ii) | கா/லமும் | நேர் நிரை | |
| 2(i),1,2(i) | செய்/கை/யும் | நேர் நேர் நேர் | |
| 2(i), 2(i) | செய்/யும் | நேர் நேர் | |
| 3,3, 2(i) | அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | |
| 2(i), 1 | மாண்/ட | நேர் நேர் | |
| | தமைச்சு | | |

✓ **வாய்பாடு எழுதுதல்:** அசை கட்டத்தில்

- இரண்டு அசை இருந்தால்,
  **1.** நேர் நேர் - தேமா **3.** நிரை நிரை - கருவிளம்
  **2.** நிரை நேர் - புளிமா **4.** நேர் நிரை - கூவிளம்
- மூன்று அசை இருந்தால், முதல் இரு அசைகளுக்கு மேற்கண்ட வாய்பாட்டை எழுதி, கடைசி அசை,
  **5.** 'நேர்'- ஆக இருந்தால் 'காய்' எனவும்,
  **6.** 'நிரை'- ஆக இருந்தால் 'கனி' எனவும் எழுதவும்.

(பாடப்புத்தக திருக்குறளில் மூவசை சீர் காய் சீராக மட்டுமே வரும். கனி சீர் வராது.)

| | சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|---|
| 3 | கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| 4 | கா/லமும் | நேர் நிரை | கூவிளம் |
| 1,5 | செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| 1 | செய்/யும் | நேர் நேர் | தேமா |
| 3,5 | அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| 1 | மாண்/ட | நேர் நேர் | தேமா |
| | தமைச்சு | | |

✓ **ஏழாம் சீருக்கான வழிமுறை:** ஏழாம் சீர் மட்டும் நாள், மலா், காசு, பிறப்பு என்ற நான்கு வாய்பாட்டில்தான் முடியும். கடைசி வார்த்தை,

- ஒற்றில் முடிந்து அதற்கு முன் 1 எழுத்து இருந்தால், அசை - நேர்; வாய்பாடு - நாள்; எ.கா: தார்
- ஒற்றில் முடிந்து அதற்கு முன் 2 எழுத்து இருந்தால், அசை - நிரை; வாய்பாடு - மலா்; எ.கா: கொளல்
- உகரத்தில் முடிந்து அதற்கு முன் ஒற்றுடன் 1 எழுத்து இருந்தால், அசை - நேர்பு; வாய்பாடு - காசு; எ.கா: தற்று
- இது தவிர உகரத்துடன் எந்த எழுத்து வந்தாலும் அசை - நிரைபு; வாய்பாடு - பிறப்பு; எ.கா: அனைத்து

**இறுதி விடை:**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| கா/லமும் | நேர் நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

*(ஏழாம் சீரின் வாய்பாட்டை இறுதியில் எடுத்து எழுத வேண்டும்.)*

**மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான அலகிடுதல் பற்றிய சில குறிப்புகள் :**

❖ ஒரு வேளை விடைத்தெரியாத பட்சத்தில் கீழ்க்கண்ட வழிமுறையை பின்பற்றினால் குறைந்தபட்ச மதிப்பெண்களை பெறலாம்.

❖ மூன்று கட்டம் வரைந்து சீர், அசை, வாய்பாடு என தலைப்பிடுங்கள்.

❖ கொடுக்கப்பட்ட குறளின் ஏழு வார்த்தைகளை **'சீர்'** என்ற தலைப்பின் கீழ் எழுதவும்.

✓ நடுவிலுள்ள ஒற்றெழுத்துக்கு அடுத்து கோடு போடவும். **எ.கா:** செய் / யும்

✓ நெடிலுக்கு அடுத்து ஒற்று இல்லையெனில், அங்கு கோடு போடவும். **எ.கா:** கா / லமும்

❖ **'அசை'** என்ற தலைப்பின் கீழ் எழுத வேண்டியது, நேர் (அ) நிரை

✓ நீங்கள் பிரித்ததில் 1 எழுத்து இருந்தால் நேர், 3 எழுத்து இருந்தால் நிரை,

✓ 2 எழுத்து இருந்து, அதில் ஒன்று ஒற்று எனில் நேர் இல்லையேல் நிரை.

| ஈரசைச்சீர் | |
|---|---|
| நேர் நேர் | தேமா |
| நிரை நேர் | புளிமா |
| நிரை நிரை | கருவிளம் |
| நேர் நிரை | கூவிளம் |

❖ **'வாய்பாடு'** என்பதன் கீழ் எழுத வேண்டியது, தேமா, புளிமா, கருவிளம், கூவிளம்.

✓ 2 அசை எனில் அருகிலுள்ள அட்டவணையைப் பயன்படுத்தி வாய்பாட்டை எழுதவும்.

✓ 3 அசை எனில் மேற்சொன்ன படி முதல் 2 அசைக்கு எழுதி, கடைசி **நேர்** எனில் **'காய்'** எனவும், **நிரை** எனில் **'கனி'** எனவும் எழுதுக.

❖ இறுதி வார்த்தைக்கு தனி அசை & வாய்பாடு உள்ளது. இறுதி வார்த்தை

✓ ஒற்றில் முடிந்து, 1 எழுத்து இருந்தால் - **நேர் - நாள்**

✓ ஒற்றில் முடிந்து, 2 எழுத்து (அ) ஒற்றல்லா 2 எழுத்து இருந்தால்- **நிரை - மலர்**

✓ **துப்பு, தற்று** என்ற இரு வார்த்தைகளுக்கு மட்டும் **நேர்பு - காசு**

✓ உகரத்தில் முடியும் மற்ற வார்த்தைகளுக்கு **நிரைபு - பிறப்பு**

## தேர்வில் கேட்கப்பட்ட கூடுதல் வினாக்கள் :

**கீழ்க்கண்ட குறட்பாக்களுக்கு அலகிட்டு வாய்பாடு தருக.** **(இ–பா-வகை, அலகிடுதல்)**

**1. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்** **[APR-23]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய்/யா | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| மன்/னவன் | நேர் நிரை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**2. கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்ட தமைச்சு** **[JUN-23, MAY-22]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| கா/லமும் | நேர் நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**3. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்** **[SEP – 2021]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| செயற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/தக் | நிரை நேர் | புளிமா |
| கடைத்/தும் | நிரை நேர் | புளிமா |
| உல/கத் | நிரை நேர் | புளிமா |
| தியற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/து | நிரை நேர் | புளிமா |
| செயல் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**4. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்** **[PTA - 1]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| அரி/தே | நிரை நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர் நேர் | தேமா |
| தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

## அணிகள்

**சதம் அடிக்கும் மாணவர்கள் கவனிக்க வேண்டியவை :**
- அணிக்கான விளக்கம், எடுத்துக்காட்டு, அணிப்பொருத்தம் ஆகியவற்றை கண்டிப்பாக எழுதவும்.
- இயல் 3 & 6ல் உள்ள (எடுத்துக்காட்டு உவமை, சொல்பின்வருநிலை, சொற்பொருள்பின்வருநிலை, வஞ்சப்புகழ்ச்சி) அணிகளையும் படித்துக் கொள்ளவும்.

| அணி : | ◆ செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன 'அணிகள்'. (அணி – அழகு) |
|---|---|
| **1. தற்குறிப்பேற்ற அணி** | **அணி இலக்கணம்:** இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி எனப்படும். (தன் + குறிப்பு + ஏற்றம் + அணி – தற்குறிப்பேற்ற அணி)<br>**எ.கா:** 'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி<br>'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'<br>**அணிப் பொருத்தம்:** கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் என கொடியானது கையை அசைத்து 'வாராதீர்' என தெரிவிப்பதாக, இயல்பாய் அசையும் கொடி மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதால் இது தற்குறிப்பேற்ற அணியாகும். |
| **2. தீவக அணி**<br>(தீவகம் - விளக்கு)<br>**வகைகள்:**<br>1) முதல்நிலை<br>2) இடைநிலை<br>3) கடைநிலை | **அணி இலக்கணம்:** ◆ செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குதல்.<br>**எ.கா:** சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்<br>ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து<br>திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,<br>மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து.<br>**அணிப் பொருத்தம்:** முதலில் நிற்கும் சேந்தன என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்தி பொருள் தருவதால் இது தீவக அணியாகும். |
| **3. நிரல்நிறை அணி** | **அணி இலக்கணம்:** சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது.<br>**எ.கா:** அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது.<br>**அணிப் பொருத்தம்:** அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும். |
| **4. தன்மை அணி**<br>**(அல்லது)**<br>**தன்மை நவிற்சி அணி**<br>**வகைகள்:**<br>1) பொருள்<br>2) குணம்<br>3) சாதி<br>4) தொழில் | **அணி இலக்கணம்:** எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும்.<br>**எ.கா:** மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்<br>கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக்கோன்<br>கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்<br>உண்டளவே தோற்றான் உயிர்.<br>**அணிப் பொருத்தம்:** கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சிஅணியாகும். |
| **5. உவமையணி** | **அணி இலக்கணம்:** ஒரு செய்யுளில் உவமானம், உவமேயம், உவம உருபு ஆகிய மூன்றும் வெளிப்படையாக வந்தால் அது உவமை அணியாகும். **எ.கா:** வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்<br>கோலொடு நின்றான் இரவு.<br>**அணிப் பொருத்தம்:** 'போலும்' என்ற உருபு வெளிப்படையாக வருவதால் உவமையணியாகும். |
| **6. எடுத்துக்காட்டு உவமையணி** | **அணி இலக்கணம்:** உவமையும் உவமேயமும் தனித்தனியாக வந்து உவமஉருபு மறைந்து வருவது.<br>**எ.கா:** பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்<br>கண்ணோட்டம் இல்லாத கண்.<br>**அணிப் பொருத்தம்:** இக்குறளில் 'அது போல' என்ற உருபு மறைந்து வருவதால் எடுத்துக்காட்டு உவமையணியாகும். |
| **7. சொல் பின்வருநிலை அணி** | **அணி இலக்கணம்:** ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் மீண்டும் பல இடங்களில் வந்து வேறுபொருள் உணர்த்துவது. **எ.கா:** பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்<br>பொருளல்ல தில்லை பொருள்.<br>**அணிப் பொருத்தம்:** இக்குறளில் 'பொருள்' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து மதிப்புடையவர், செல்வம் போன்ற பொருளில் வருவதால் சொல் பின்வருநிலை அணியாகும். |
| **8. சொற்பொருள் பின்வருநிலை அணி** | **அணி இலக்கணம்:** ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல் அதே பொருளில் மீண்டும் வருவது.<br>**எ.கா:** இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்<br>இன்மையே இன்னா தது.<br>**அணிப் பொருத்தம்:** இக்குறளில் 'இன்மை' என்ற சொல் மீண்டும் மீண்டும் ஒரே பொருளில் (துன்பம்) வருவதால் சொல் பின்வருநிலை அணியாகும். |
| **9. வஞ்சப்புகழ்ச்சி அணி** | **அணி இலக்கணம்:** புகழ்வது போல் மறைமுகமாக இகழ்வதும், இகழ்வது போல் மறைமுகமாக புகழ்வது ஆகும். **எ.கா:** தேவர் அனையர் கயவர் அவரும்தாம்<br>மேவன செய்தொழுக லான்.<br>**அணிப் பொருத்தம்:** இக்குறளில் தேவர்களை கயவர்களோடு ஒப்பிட்டு பின் தேவர்கள் உயர்ந்த செயலையே செய்வர், கயவர் தாழ்ந்த செயலையே செய்வர் என கயவர்களை பழிப்பதாக வருவதால் வஞ்சப்புகழ்ச்சி அணியாகும். |

| | | |
|---|---|---|
| வி.எண் : 38 – 42 | பகுதி – IV<br>ஐந்து மதிப்பெண் வினாக்கள் | 5× 5 = 25 |

## வி.எண் : 38 – செய்யுள் பகுதியிலிருந்து நெடுவினா கேட்கப்படும்

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 செய்யுள் நெடுவினாக்களைக் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். செய்யுள் பகுதி, கற்பவை கற்றபின் மற்றும் தேர்வில் கேட்கப்பட்ட கூடுதல் நெடுவினாக்களை படித்துக் கொள்ளவும்.

## வி.எண் : 39 – கடிதம்

**குறிப்பு: 2 வகை கடிதம் :** ◆ அலுவல் கடிதம் ◆ உறவுமுறைக் கடிதம்

- இந்தப் பகுதியில் 2 கடிதம் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும்.
- பாடப்புத்தகத்திலுள்ள 6 கடிதங்கள் (இயல் - 2, 3, 5, 7, 8) மற்றும் முந்தைய தேர்வுகளில் கூடுதலாக கேட்கப்பட்ட 9 கடிதங்களைப் படித்தாலே போதுமானது.
- இவை தவிர ஏதேனும் புதிய கடிதம் எழுதுமாறு தேர்வில் கேட்கப்பட்டால், வினாவில் யாருக்கு, என்ன வேண்டி கடிதம் எழுதச் சொல்கிறார்கள் என்பதை புரிந்துக்கொண்டு கடித வடிவத்தில் (நாள், இடம், அனுப்புநர், பெறுநர், மதிப்பிற்குரிய ஐயா, பொருள், நன்றி, இப்படிக்கு, உறைமேல் முகவரி போன்றவை) வினாவிற்கு பொருத்தமாக பிழையின்றி எழுதினாலே முழு மதிப்பெண் பெறலாம்.

**எடுத்துக்காட்டு:** உங்கள் (i)**[தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன.]**(i) அதனால் (ii)**[இரவில் சாலையில் நடந்துசெல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை]**(ii) எழுதி (iii)**[ஆவன செய்யும்படி]**(iii) (iv)**[மின்வாரிய அலுவலருக்குக்]** (iv) கடிதம் எழுதுக.

| | |
|---|---|
| **1. அனுப்புநர்**<br>அஅஅ,<br>ஆஆஆ,<br>அஆஇ. | வினாவில் பெயர் கொடுத்திருந்தால் அதனை எழுதவும். இல்லையெனில் அஅஅ என எழுதவும். |
| **2. பெறுநர்**<br>மின்பொறியாளர், **(iv)**<br>தமிழ்நாடு மின்சார வாரியம்,<br>அஆஇ. | வினாவிலேயே (iv) யாருக்கு அனுப்ப வேண்டுமென கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அலுவலருக்கு அனுப்ப வேண்டும். |
| **3. மதிப்பிற்குரிய ஐயா,** | |
| **4. பொருள்:** தெருவில் பழுதடைந்துள்ள மின்விளக்குகளைச் சரிசெய்ய வேண்டுதல் சார்பு. **(ii)** | வினாவில் கொடுக்கப்பட்டுள்ளதை (ii) சுருக்கி ஓரிரு வரிகளில் எழுதவும். |
| **5.** (i)**எங்கள் தெருவில் நீண்ட நாட்களாக மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன.**(i) இதனால் பள்ளி மாணவர்களும், முதியோர்களும் இரவில் சாலையில் நடந்துசென்றுவர முடியவில்லை. சாலையில் அதிகம் மேடு பள்ளங்கள் இருப்பதால் வாகனங்களில் செல்வோர் இருளில் சிரமப்படுகின்றனர். எனவே, அருள்கூர்ந்து எங்கள் தெருவில் உள்ள மின்விளக்குகளின் (iii)**பழுதினை அகற்றி தர ஆவன செய்யுமாறு**(iii) பணிவுடன் வேண்டுகின்றேன்.<br>**நன்றி,** | வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடையூறுகளை(i&iii) மூன்று அல்லது நான்கு வரிகளில் எழுதவும். |
| **6.** தெருமக்கள் சார்பாக,<br>அஅஅ | கடிதம் அனுப்புபவர் பெயர் |
| **7. இடம்** : அஆஇ<br>**நாள்** : 01.07.2023 | தோராயமான நாள், இடம் எழுதினால் போதுமானது. |
| **8. உறைமேல் முகவரி**<br>மின்பொறியாளர், **(iv)**<br>தமிழ்நாடு மின்சார வாரியம்,<br>அஆஇ. | பெறுநர் பகுதியில் எழுதியதை அப்படியே எழுத வேண்டும். |

Way to Succ

✷ கடிதத்தை ஒரே பக்கத்தில் தொடங்கி அதே பக்கத்தில் முடித்தல் நல்லது.

**கடிதத்தில் செய்யக்கூடிய தவறுகள் :**

✷ வினாவிலுள்ள எழுதுபவரின் விவரத்தை அனுப்புநர் பகுதியிலும், யாருக்கு கடிதம் எழுத வேண்டுமோ அவரின் விவரத்தை பெறுநர் மற்றும் உறைமேல் முகவரியிலும் எழுதவும். அனுப்புநர் முகவரியை உறைமேல் முகவரியில் மாற்றி எழுதக் கூடாது. வினாவில் பெயர் குறிப்பிடவில்லையெனில் **'அஅஅ'** என குறிப்பிடவும். உங்களது தனிப்பட்ட விவரங்களை எழுதக் கூடாது.

✷ முகவரி எழுதும் போது இடையில் காற்புள்ளியும் (,), நிறைவில் முற்றுப் புள்ளியும் (.) இட வேண்டும். கடிதத்தில் அனுப்புநர், பெறுநர் பக்கத்தில் முக்காற்புள்ளி (:) இடக்கூடாது. **எ.கா:** அனுப்புநர்: ×

✷ இறுதியில் கண்டிப்பாக உறைமேல் முகவரி எழுத வேண்டும். பொருளை ஒரே வரியில் எழுதவும். வினா தொடர்புடைய தகவல்களை பிழையின்றி எழுதினால் மட்டுமே முழு மதிப்பெண் பெற முடியும்.

| உறவினருக்குக் கடிதம் | | முறையீட்டு விண்ணப்பம் | |
|---|---|---|---|
| 1. நாள், இடம் | ½ | 1. அனுப்புநர், பெறுநர் | 1 |
| 2. விளித்தல் | ½ | 2. விளித்தல், பொருள் | ½ |
| 3. கடிதச்செய்தி | 2 ½ | 3. கடிதச்செய்தி | 2 |
| 4. இப்படிக்கு | ½ | 4. இப்படிக்கு, நாள், இடம் | 1 |
| 5. உறைமேல் முகவரி | 1 | 5. உறைமேல் முகவரி | ½ |

## புத்தகத்தில் உள்ள கடிதங்கள்

**1. 'மரம் இயற்கையின் வரம்' என்னும் தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில், முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி மடல் எழுதுக.**

**(TB) (இயல் – 2) [JUN-23, PTA - 4, MDL - 19]**

5, கம்பர் தெரு,
திருச்சி - 5,
20.06.2024

***அன்புத்தோழன் ஜீவா,***

வணக்கம்.

நான் நலம். நீ நலமா? உன் பெற்றோர் நலமா? உன் இல்லத்திலுள்ள அனைவரின் நலமும் அறிய ஆவலாக உள்ளேன். உன் பேச்சாற்றலால் நீ பல போட்டிகளில் பங்கு கொண்டு வருகிறாய். உன் திறமையால் பல பரிசுகளைக் குவித்து வைத்திருக்கிறாய். அதனை எண்ணும்போது எனக்குப் பெருமையாக இருக்கிறது.

உன் திறமைக்கு மகுடம் சூட்டியதைப்போல அண்மையில் மாநில அளவில் நடைபெற்ற "மரம் இயற்கையின் வரம்" என்ற தலைப்பில் மாநில அளவில் நடைபெற்ற கட்டுரைப் போட்டியில் முதல் பரிசினைப் பெற்றிருப்பது 'உன் அறிவுத்திறனுக்குக் கிடைத்த பரிசு' என்று எண்ணி மகிழ்ச்சி அடைகிறேன்.

தொடர்ந்து நீ போட்டிகளில் கலந்துகொள்ள வேண்டும். அனைத்து வெற்றிகளும் உனக்குக் கிட்டும்! உன் முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெற வாழ்த்துகிறேன். இக்கடிதத்துடன் உனக்கு ஒரு நூலைப் பரிசாக அனுப்பியுள்ளேன். வரும் விடுமுறையில் சந்திப்போம்.

நன்றி!

**இப்படிக்கு**
அன்புத்தோழி,
க. வளர்மதி.

**உறைமேல் முகவரி :**

ந. ஜீவா,
த/பெ. நலங்கிள்ளி,
20, பாரதியார் நகர்,
சேலம் - 10.

way to success

## வி.எண் : 40 - படம் உணர்த்தும் கருத்து – ஐந்து தொடர்கள், பத்தி, கவிதை எழுதுதல்.

**குறிப்பு :** இக்கேள்வி படம் கொடுத்து கருத்து அல்லது கவிதை 5 வரிகளில் எழுதுமாறு அமையும்.
**மொழியோடு விளையாடு பகுதி : பக்க எண் : 33, 68, 101, 142, 177, 214, 260, 302, 338**

**படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.**

**1.**



உணவை ருசிப்பவர் யாராயினும், **[MAY – 2022]**
அதை கண்டு ரசிப்பவர் தாயே!
உணவை பகிர்வது தாயானாலும்,
அதை முதலில் உண்பவர் நாமே!
தாயின் பரிமாறும் அன்பு!
அவளின் சிறந்த பண்பு!
தன் பசி அடக்கி நம் பசி ஆற்றும் - தாயின்
அன்பிற்கு நிகர் வேறெதுவும் உண்டோ…?

**2.**



மனிதருள் இல்லை வேறுபாடு **[SEP - 2021]**
பகிர்ந்து கொடுப்பதில் இல்லை பாகுபாடு
உழவின் பகிர்வு உழவனின் கையில்
கொடுத்தவன் நிறைவு, உண்டவன் வயிற்றில்
மனம் மகிழ்ந்து கொடு
மன நிறைவு பெறு.

**3.**




எந்திர மனிதனுடன் சதுரங்கம் விளையாடும் சிறுவன்
எதிர்காலத்தில் விளையாட எந்திர மனிதனே இருப்பான்
பிற்காலத்தில் எந்திரங்களே நம் உறவினர்களாக மாறும்
மனித இனத்தின் வளர்ச்சிக்கு உதவுவது எந்திரங்கள்
மனிதர்களுடன் பழகும் நிலை மாறி,**[SEP- 2020]**
இயந்திரங்களுடன் பழகும் நிலை வந்துவிட்டது.

**4.**



வந்தோரை அன்புடன் அழைத்துப்
புன்னகையுடன் விருந்தினருக்கு **[PTA -2]**
வாழையிலையில் உணவிட்டு களைப்பின்றி
உபசரித்து
மகிழ்வோடு பரிமாறும் அன்பு!
தமிழ்நாட்டின் தலையாய பண்பு!

**5.**



வானம் வீழ்ந்து போனாலும் **[MDL -19]**
கடல் ஒருநாள் பொங்கினாலும்
சூரியன் நம்மைச் சுட்டு எரித்தாலும்
நிலம் பிளந்து அகன்றாலும்
சூறை சுழன்று அடித்தாலும்
அறம் என்றும் வீழாது...

**6.**



தமிழரின் பாரம்பரிய அடையாளம் **[PTA -6]**
வளர்த்து வந்த கலை
பல கருவிகளின் முன்னோடியாய்
திகழ்ந்த கலை
இன்று திக்குத் தெரியாத
காட்டில் தனிமரமாய் எழுந்து
நிற்கவே உரம் தேடி அலைகிறது...

**7.**



- தொலைக்காட்சி நிகழ்வுகளையே பார்த்துக் கொண்டிருக்கும் தம்பி.
- திறன் பேசியிலேயே விளையாடிக் கொண்டிருக்கும் தங்கை.
- காணொலி விளையாட்டுகளில் மூழ்கியிருக்கும் தோழன். **[PTA-4]**
- எப்போதும் சமூக ஊடகங்களில் இயங்கியபடி இருக்கும் தோழி.

## வி.எண் : 41 – படிவத்தினை நிரப்புதல்


- 4 வகை படிவங்கள் மட்டுமே கேட்கப்படும். படிவத்தை விடைத்தாளில் தனியே எழுதி நிரப்பக் கூடாது.
- 1. நூலக உறுப்பினர் சேர்க்கை 2. மேல்நிலை வகுப்பு - சேர்க்கை 3. விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தில் உறுப்பினர் சேர்க்கை 4. பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் - என்ற வரிசையில் விடைத்தாளின் முதலிலேயே 4 படிவங்களும் தைக்கப்பட்டிருக்கும். அவற்றிலிருந்து வினாவிற்கேற்ற படிவத்தில் மட்டுமே விடையை நிரப்பவேண்டும்.
- படிவத்தை ஆங்கிலத்தில் நிரப்பக் கூடாது. தமிழில் மட்டுமே நிரப்ப வேண்டும். இரத்த வகை, கணினிப் படிப்பு ஆகியவை ஆங்கிலத்தில் எழுதலாம்.

**படிவத்தில் கவனிக்க வேண்டியவை :**

- படிவம் தனியே இருப்பதால் வி.எண் குறிப்பிட மறந்து விடுவீர்கள். விடை சரியாக இருப்பினும் மதிப்பெண் இழக்கக்கூடும்.
- ‘கையொப்பம்’ வரும் இடங்களில் மேலேயும், ‘இப்படிக்கு’ என வந்தால் அதற்கு கீழேயும் கையெழுத்து இடவும்.
- வினாவிலுள்ள பெயர் மற்றும் முன்னெழுத்து(initial) சரியாக குறிப்பிட வேண்டும். **எ.கா:** மாணிக்கமணியின் மகன் அமுதன் என்றால் **மா. அமுதன்** என எழுதவும், வேறு initial–உடன் **க. அமுதன்** போன்று எழுதக்கூடாது. தந்தைப் பெயர் **மாணிக்கமணியின்** என்று அப்படியே எழுதாமல் **மாணிக்கமணி** என்று பொருத்தமாக எழுதவும்.
- உங்கள் பெயர், கையெழுத்து போன்ற தகவலையோ அல்லது வேறு விவரங்களையோ எழுதக்கூடாது. வினாவிலுள்ள தகவல்களை (பெயர், தந்தை பெயர், முகவரி, மதிப்பெண்கள்..) மட்டுமே நிரப்ப வேண்டும். வினாவில் பெயர் குறிப்பிடவில்லையெனில் ‘அஅஅ’… ‘இஇஇ’ போன்று குறிப்பிடவும்.

## 1. பணிவாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியல் நிரப்புதல்

(i)**[எண்-6, பாரதியார் தெரு, நீலகிரி மாவட்டத்தில்]**(i) வசிக்கும் (ii)**[தமிழரசுவின்]**(ii) மகள் (iii)**[பூங்கொடி,]**(iii) (iv)**[கணினிப் பயிற்றுநர் பணி]**(iv) வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புகிறார். தேர்வர், தன்னை பூங்கொடியாகப் பாவித்து பணி வாய்ப்பு வேண்டி தன்விவரப் பட்டியலை நிரப்புக. **[MDL – 19, PTA – 5, SEP - 20, AUG – 22]**



**பணி வாய்ப்பு வேண்டி தன் விவரப் பட்டியல் நிரப்புதல்**

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | த. பூங்கொடி (iii) |
| 2. பாலினம் | : | பெண் |
| 3. பிறந்த நாள் மற்றும் வயது | : | 23.10.1998, 26 வயது |
| 4. தேசிய இனம் | : | இந்தியன் |
| 5. பெற்றோர் / பாதுகாவலர்-பெயர் | : | தமிழரசு (ii) |
| 6. வீட்டு முகவரி | : | 6, பாரதியார் தெரு, நீலகிரி. (i) |
| 7. தொலைபேசி / அலைபேசி எண் | : | 8999632584 |
| 8. பத்தாம் வகுப்பில் பெற்ற மதிப்பெண்கள் | : | 426 / 500 |
| 9. தாய்மொழி | : | தமிழ் |
| 10. பயின்ற மொழிகள் | : | தமிழ், ஆங்கிலம் |
| 11. தட்டச்சு | : | தமிழ், ஆங்கிலம் – சீனியர் கிரேடு |
| 12. கணினி | : | PGDCA and Tally |

மேற்கண்ட விவரங்கள் அனைத்தும் உண்மையென உறுதி கூறுகிறேன். தங்கள் நிறுவனத்தில் கணினிப் பயிற்றுநர் (iv) பணியினைத் தந்தால் என் பணியைச் சிறப்பாகவும் உண்மையாகவும் செய்வேன் என உறுதியளிக்கிறேன்

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
த. பூங்கொடி

**தன்விவரப் பட்டியல் – படிவத்தில் செய்யக்கூடிய தவறுகள் :**

- பணிவாய்ப்பு படிவத்தில் பிறந்த தேதியைக் குறிப்பிடும்போது 25-30 வயது உள்ளவாறு வருடத்தை குறிப்பிடவும். மற்ற படிவத்திற்கு உங்கள் பிறந்த வருடத்தையே தேதியை மட்டும் மாற்றி குறிப்பிடலாம்.
- வயதிற்கு தகுந்தாற்போல் ஆண்டைக் கணக்கிட்டு தவறில்லாமல் குறிப்பிடவும்.

## வி.எண் : 42 - மொழிபெயர்ப்பு

**குறிப்பு :** இப்பகுதியில் மொழிபெயர்ப்புக் கேள்வி அல்லது மொழியோடு விளையாடு பகுதியில் இருந்து ஏதேனும் ஒரு கேள்வி கேட்கப்படும்.

**மொழிபெயர்ப்புக்கேள்வி** – 27 (இயல் – 1), 64 (இயல் – 2), 97 (இயல் – 3), 138 (இயல் – 4), 173 (இயல் – 5), 209 (இயல் – 6), 257 (இயல் – 7), 297 (இயல் – 8), 333 (இயல் – 9)

**செவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா : உரைப்பத்தியை படித்து வினாக்களுக்கு விடை தருக.**

பக்க எண் : (பகுதி –3, பிரிவு – 1) 377 – 383

| வி.எண் : 43 – 45 | பகுதி – V : எட்டு மதிப்பெண் வினாக்கள் | 3 × 8 = 24 |
|---|---|---|

## வி.எண் : 43 - உரைநடை நெடுவினா

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 உரைநடை நெடுவினாக்கள் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். உரைநடை பகுதி, கற்பவை கற்றபின் மற்றும் தேர்வில் கேட்கப்பட்ட அனைத்து நெடுவினாக்களை படித்துக் கொள்ளவும்.

## வி.எண் : 44 - துணைப்பாடம் நெடுவினா

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 துணைப்பாட நெடுவினாக்கள் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். துணைப்பாடப் பகுதி, கற்பவை கற்றபின் மற்றும் தேர்வில் கேட்கப்பட்ட அனைத்து நெடுவினாக்களை படித்துக் கொள்ளவும்.

## வி.எண் : 45 - பொதுக்கட்டுரை

**குறிப்பு :** இந்தப் பகுதியில் 2 பொதுக்கட்டுரைகள் கொடுத்து 1 எழுதுமாறு கேட்கப்படும். இப்பகுதியில் உள்ள புத்தக, தேர்வில் கேட்கப்பட்ட மற்றும் கூடுதல் பொதுக்கட்டுரைகள் அனைத்தையும் நன்கு படித்துக் கொள்ளவும்.

**வினாத்தாள் வடிவமைப்பு : பக்க எண் : 413 – 428**

1. குமரிக் கடல்முனையையும், வேங்கட மலைமுகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்குப் புகழ் தேடித்தந்த பெருமை, தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத்தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து, அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். **இக்கருத்தைக் கருவாகக் கொண்டு 'சான்றோர் வளர்த்த தமிழ்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.** **(இயல் – 1) [PTA – 1, MDL - 19]**

தலைப்பு – 'சான்றோர் வளர்த்த தமிழ்'

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ✷ முன்னுரை |
| ✷ பைந்தமிழ்ச் சிறப்பு |
| ✷ பிள்ளைத்தமிழுக்குக் குமரகுருபரர் |
| ✷ சதகத்திற்கு முன்னோடி மாணிக்கவாசகர் |
| ✷ பரணிக்கோர் செயங்கொண்டார் |
| ✷ கலம்பகத்திற்கு இரட்டையர்கள் |
| ✷ கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர் |
| ✷ முடிவுரை |

**அ) முன்னுரை**

நம் எண்ணங்களைப் பிறருக்குத் தெரிவிக்கவும், பிறருடைய உணர்வுகளை நாம் புரிந்துகொள்ளவும் உதவுவது மொழியே ஆகும். நாகரிகம் வளர வளர, பேச்சு வழக்கு மொழியெல்லாம் எழுத்து வடிவம் பெற்றன. மொழி வளர்ச்சியின் தொடக்கத்தில் அரும்பணி புரிந்த சான்றோர்களின் தமிழ்ப்பணி குறித்து பின்வருமாறு காணலாம்.

**ஆ) பைந்தமிழ்ச் சிறப்பு**

பண்டைய காலத்தில் வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பரவியிருந்தது. காலங்கள் பல மாறினாலும், கண்டங்கள் பல அழிந்தாலும், அழியாத சிறப்புடைய மொழியாகத் தமிழ்மொழி திகழ்கிறது. செந்தமிழாய், வண்டமிழாய், பைந்தமிழாய் வலம் வரும் ஒரே மொழி தமிழ் மொழியாகும்.

*வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்*
*தமிழ்கூறும் நல்லுலகம்*

**இ) பிள்ளைத்தமிழுக்குக் குமரகுருபரர்**

கடவுளரையோ மக்களுள் சிறந்தவரையோ குழந்தையாக எண்ணி, குழந்தைப் பருவ நிகழ்ச்சிகள் அமையப்பாடுவது பிள்ளைத்தமிழ். பிள்ளைத்தமிழ் நூலில் சிறந்த நூலாகக் கருதப்படுவது குமரகுருபரர் முருகக் கடவுளைக் குழந்தையாகப் பாவித்துப் பாடிய முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ் ஆகும்.

*செம்பொ னடிச்சிறு கிங் கிணியொடு சிலம்பு கலந்தாடத்*
*திருவரை யரைஞா ணரைமணி யொடு மொளி திகழரை வடமாட*

**ஈ) சதகத்திற்கு முன்னோடி மாணிக்கவாசகர்**

அகப்பொருள் பற்றியோ, புறப்பொருள் பற்றியோ நூறு செய்யுள்களில் உரைப்பது சதகம் எனப்படும். தமிழில் தோன்றிய முதல் சதகம் மாணிக்கவாசகரின் திருச்சதகம் ஆகும்.

*பயிலும் ஓர் பாட்டாய் நூறு உரைப்பதுதான் சதகம்*

**உ) பரணிக்கோர் செயங்கொண்டார்**

போரிலே ஆயிரம் யானைகளைக்கொன்று வெற்றிபெறும் வீரர்கள்மேல் பாடப்படுவது பரணி இலக்கியமாகும். செயங்கொண்டார் எழுதிய கலிங்கத்துப்பரணி, பரணி இலக்கியங்களில் சிறப்பானது ஆகும்.

*ஆனை அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி*

**ஊ) கலம்பகத்திற்கு இரட்டையர்கள்**

இறைவனையோ, அரசனையோ, தலைவனாகக் கொண்டு பல வகை செய்யுள்களைக் கலந்து பாடப்படும் சிற்றிலக்கியம் கலம்பகம் ஆகும். இவை, பலவகைப் பாக்களாலும், பாவகைகளாலும் பாடப்படுகிறது. முதுசூரியர், இளஞ்சூரியர் என்ற இரட்டையர்களால் பாடப்பெற்ற தில்லைக்கலம்பகம் மிகச்சிறப்பானது ஆகும்.

*கலம்பகம் புனைந்த அலங்கல் அம் தொடையல்*

**எ) கோவை, உலா, அந்தாதிக்கு ஒட்டக்கூத்தர்**

கோவை என்பதற்கு முறையாகக் கோர்க்கப்பட்டது என்று பொருள். அகப்பொருளுக்கு உரிய துறைகள் பலவற்றை முறையாகக் கோர்க்கப்பட்டதால் கோவை எனப்பட்டது. உலா என்பது, பாட்டுடைத்தலைவன் உலா வருதலும் அவனைக்கண்டு ஏழு பருவ மகளிர் மனம் மகிழ்தலும் உலா இலக்கியம் ஆகும். ஒரு செய்யுளின் இறுதியில் உள்ள எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ அடுத்து வரும் செய்யுளின் முதலாக அமையும்படி பாடுவது அந்தாதி ஆகும். இம்மூன்று சிற்றிலக்கிய வகைகளைப் பாடுவதில் ஒட்டக்கூத்தர் மிகவும் திறமையானவர் ஆவார்.

**ஏ) முடிவுரை**

தமிழ் தனித்தியங்கும் இயல்புடையது. காலத்தால் அழியாத கன்னித் தமிழாய் இளமையுடன் திகழக்கூடியது. தமிழின் தொன்மையும் தூய்மையும் வண்மையும் வனப்பும் உலகளாகிய அளவில் உள்ள அனைவரையும் ஈர்த்துள்ளது. தமிழ் வளர்ச்சிபெற இளைய தலைமுறையினரான நாம் நாளும் சான்றோர் வழி தொண்டாற்றுவோம்!

***தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்!***

Way to success